உத்தரகிரியாபத்ததி.

MODEL CHRISTIAN WITNESS.

உத்தம கிறிஸ்தவ சாட்சி.

A Text Book for Christian Workers

preparing for Intensive Evangelistic Campaign

BY

THE REV. M. S. TAYLOR, B.D.,

Secretary, South India United Church.
Lately Lecturer, Union Theological Seminary, Pasumalai.

1931.

Three Progressive Studies

For

Christian Workers

1. Christ Our Redeemer 2. Character of a Model Christian.	By REV. G. P. JAMES.
3. Model Christian Witness	By REV. M. S. TAYLOR.

For copies apply to the authors.

உத்தம கிறிஸ்தவ சாட்சி

இது

தென்னிந்திய ஐக்கிய சபை காரியதரிசியும்,

வெகுகாலமாக பசுமலை வேத வித்யாசாலை

ஆசிரியருமாயிருந்த

சங்கை எம். எஸ். டேலர் ஐயரவர்களால்

எழுதப்பெற்றது.



அமெரிக்கன் மிஷன் பிரஸ்

193



பலத்த சாட்சியாகிய பரிசுத்த அகுஸ்தீன்.

PREFACE.

There is an insistent demand for a book which will serve as a constant companion to those who desire to win men to the kingdom of Christ by personal as well as public testimony.

Those who are, 'Redeemed by Christ' and those who are leading a 'Model Christian' life, cannot but be 'Living Witnesses' for Christ. What is set forth in this book, by Mr. Taylor, is an intelligent and helpful series of studies for an effective and successful reaching of men and leading them to Christ—men of various conditions and circumstances and degrees of faith among Christians, Hindus as well as Moslems.

It is a question whether we can find in South India any one other than Mr. Taylor, more fitted by ability, experience and consecration to write on the subject of a 'Model Christian Witness'. A glance through the contents will show the varied, exhaustive and scholarly treatment of the subject by one who is an expert soul winner and who has an innate tact and capacity to influence men for good.

Though this valuable work is primarily intended to prepare the S.I.U.C. Christians of the Madura Church Council for an intensive evangelistic effort, looking forward to the Centenary year of the American Madura Mission 1934, we do hope that this will have a much wider circulation in the Tamil Nad for instructing and inspiring our Christians to become 'Model Christian Witnesses.'

G. P. JAMES,

Convener, Centenary Committee.

PASUMALAI,
20—9—1931.

உத்தம கிறிஸ்தவ சாட்சி

நூன்முகம்.

"உத்தம கிறிஸ்தவ சாட்சி" என்ற இந்நூலை எழுதும் சிலாக்கியத்தை எனக்குக் கொடுத்த மதுரை திருச்சபை சங்கத்தாருக்கும், நூற்றாண்டு கமிற்றியாருக்கும், பசுமலை வேதசாஸ்திர உபாத்திமார் சங்கத்திற்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உத்தம கிறிஸ்தவ சாட்சி என்ற புஸ்தகத்தை எழுதுவதற்கு ஒருவிசேஷித்த காரணமுண்டு. நூற்றாண்டு கமிற்றித் தலைராகிய கனம் ஜி. பி. ஜேம்ஸ் ஐயரவர்கள், பி. ஏ., எல். டி., பி. டி. "கிறிஸ்து நமது மீட்பர்", "உத்தம கிறிஸ்தவனின் உன்னத லட்சணம்" என்ற இரண்டு சிறந்த நூல்களை எம். ஸி. ஸி. தேவ ஊழியரின் பாடத்திற்காக எழுதியிருக்கிறார்கள். இந்த புஸ்தகங்களின் தொடர்பாக "உத்தம கிறிஸ்தவ சாட்சி" என்ற புஸ்தகமெழுதத் தீர்மானிக்கப்பட்டது. மீட்பராகிய கிறிஸ்துவால் மீட்கப்பட்ட கிறிஸ்தவன் உத்தம சாட்சியாயிருப்பது அவசியமே. ஆகையால் சாட்சியத்தின் அடக்கம், சாட்சியின் குணசீலம், சாட்சியின் வகைகள், சாட்சி சொல்லும் விதம், சாட்சி சொன்ன சிறந்த பக்தர் முதலிய பொருட்களைப் பற்றி ஒரு கிறிஸ்தவன் அறிந்திருப்பது அவசியமே. இந்தப் புஸ்தகம் அந்த நோக்கத்தை நிறைவேற்றும்படியாக எழுதப்பட்டிருக்கிறது. உத்தம கிறிஸ்தவ சாட்சி என்பது நாம் அடிக்கடி உபயோகப்படுத்தும் வேறுபெயர்களோடு சம்பந்தப்பட்டதே. 'சுவிசேஷப் பிரபல்யம்,' ஆத்தும ஆதாயம் 'செய்தல்,' 'தனித்தாள் வேலை', 'சுவிசேஷப் படைமுயற்சி' இவைபோன்ற பல பெயர்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவைகளாயிருக்கின்றன. ஒரே ஊழியத்தின் பலவிதமான பாகங்களைக் குறிப்பிடும். இயேசுகிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதே இதன் நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில், நாம் கிறிஸ்துவைக்

குறித்தும், அவர் தமது ஜீவியத்தாலும், மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும், நமக்கென்று ஏற்படுத்தியிருக்கிற இரட்சிப்பை நாம் அனுபவித்து, பிறரும் அதை அனுபவிக்கத்தக்கதாக அதை எடுத்துக்கூறுவதே சாட்சியாகும். இதைப்பற்றிப் பல புஸ்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் நூதனமாக ஒரு புஸ்தகம் எழுதப்படுவதேன் என்று ஒரு கேள்வியைக் கேட்கலாம். இதற்கு நாம் கூறக்கூடிய மறுமொழி ஒன்றுதான், இதைப்பற்றிப் பல புஸ்தகங்களில் புதைந்து கிடக்கும் பற்பல கருத்துக்களை அங்குமிங்கும் பொறுக்கி, தேவ ஊழியருக்குதவியாக தயாரித்துக் கொடுப்பதே. இந்தப் பொருள் எனக்கு மிகவும் பிரியமான பொருள். நமது மிஷன் சரித்திரத்தின் ஆரம்பகாலத்தில் இப்போது "தெற்கு லோக்கல் கவுன்சில்" என்று அழைக்கப்படும் தென் பாகத்திற்கு மத்தியஸ்தானம் மண்டபசாலை. இப்பாகத்தில் விசேஷித்த ஊழியஞ்செய்தவர் கனம் ஹாரஸ் டேய்லர் (Rev. Horace Taylor.) ஐயர் என்ற மிஷனெரி மகாத்துமா. இவரோடு ஊழியஞ்செய்தவர் என் பாட்டனாராகிய கனம் எம். ஏசடியான் ஐயரவர்கள். இவர்கள் இருவரும் 'பவுலும் சீலாவும்' போல அந்த வட்டகையிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் சென்று இயேசுகிறிஸ்துவைப் பற்றிச் சாட்சி கொடுத்து, பிரசங்கித்து, அநேகரை ஆதாயப்படுத்தி, பல சபைகளை ஸ்தாபித்தனர். கனம் ஏசடியான் ஐயரவர்கள் அதிகச் செலவில்லாமல் சுவிசேஷத்தைக் கூற ஆத்திரமுடையவர்.

அவருடைய குமாரனும், என் தந்தையுமாகிய கனம் ஒய். எஸ். டேய்லர் ஐயரவர்களும் சுவிசேஷப் பிரபல்ய வாஞ்சையுடையவர்கள். மண்டபசாலை, பரளச்சி என்ற இடங்களில் சுவிசேஷ வேலைசெய்து அறுப்புக்கோட்டையின் முதல் போதகராக அபிஷேகம் பண்ணப்பட்ட காலத்தில் பக்கத்துக் கிராமங்களில் கூடாரப் பிரசங்க வேலை செய்து சபைகளை ஸ்தாபித்தனர். பகிரங்க சாட்சி கொடுத்தது மாத்திரமல்ல, தனித்தாட்களோடும்

அங்கும் மதுரையிலும் சம்பாஷணைசெய்து சாட்சி பகர்ந்து ஆத்தும ஆதாயம் செய்தனர்.

நானும் சிறு பிராயத்தில் இவர்களுடன் கூடாரப் பிரசங்கத்திற்குப் போவதுண்டு. ஹைஸ்கூலில் படித்த போதும், தனியாக சிநேகிதரோடும் வேலைசெய்த துண்டு. வேதசாஸ்திரசாலையில் மாணவனாக இருந்த காலத்தில் என் அருமைக்குருக்களாகிய கனம் ஜோன்ஸ் பண்டிதரவர்களும், கனம் சி. என். எம்ஸ் ஐயரவர்க ளும், கனம் வி. சந்தியாகு ஐயரவர்களும் இவ்வூழியத் தைச்செய்யப் பயிற்சி செய்து வந்தனர். நான் வேத சாஸ்திர உபாத்தியாயரானபோது இந்த வேலையில் மாணாக்கரைப் பழக்கிவைக்கும் சிலாக்கியம் பெற் றேன். இந்த அனுபவத்தைக்கொண்டும், நான் வாசித்த பல புஸ்தகங்களின் குறிப்புகளைக்கொண்டும் இந்தப்புஸ்தகத்தை எழுதத்துணிந்தேன். எனக்கு உத வியாயிருந்த புஸ்தகங்கள் அநேகமுண்டு. அவைகளெல் லாவற்றின் பெயரையும் இங்கே எடுத்துக்கூற இயலாது. ஆயினும் பின்வரும் புஸ்தகங்கள் உதவியாயிருந்தன.

“ந்ரூரி பண்டிதரின் கிறிஸ்துவுக்காக ஊழியஞ் செய்யும் விதம்; கிளேய்ற்றன் வேத அகராதி; சிலுவை யின் தாற்பரியமும், கிறிஸ்தவர்களின் சாக்ஷியும்; ஆத் தும ஆதாய தேசிகர்; ஆத்தும இரணவைத்தியம்; நம து மீட்பராகிய கிறிஸ்து; சற்சமய விளக்கம்; சுவிசேஷ படை முயற்சிக்கேற்ற வேத பாடங்கள்; திருச்சபைச் சரித்திரம்,” “பர்மாவில் கிறிஸ்து”; முதலியன.

இப்புஸ்தகத்தின் கைப்பிரதிகளையும், அச்சு பிரதிகளை யும் பிழைதிருத்தி உதவிசெய்த கனம் ஜி. பி. ஜேம்ஸ்ஐயர வர்களுக்கு மிகவும் நன்றிபாராட்டுகிறேன். இந்தப்புஸ்த கம் எழுதப்பட்ட நோக்கம் 1934-ஆம் வருஷத்தில் மதுரைமிஷ னின் நூற்றாண்டு உற்சவத்தைக் கொண்டாடுமுன் இந்த மிஷனைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் ஆத்தும

ஆதாயஞ்செய்யவேண்டுமென்றும், அதைத் தங்கள் சொந்த சாட்சியின் மூலமாகச்செய்யவேண்டுமென்றும், நமது மதுரைத்திருச்சபை ஆலோசனைச் சங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த தீர்மானத்தைக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் நிறைவேற்றும்படி உதவி செய்வதே இப் புஸ்தகத்தின் நோக்கம். ஆகையால் எவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி சாதாரண நடையில் எழுதப் பட்டிருக்கிறது.

இதை வாசிக்கும் தேவ ஊழியர் இதை வெறும் பாடப் புஸ்தகமாக எண்ணுமல், சபையாரும் இதை வாசித்து தங்கள் சாட்சியினுல் ஆத்ம ஆதாயம் செய்ய ஏவிவிடவேண்டும். உத்தம சாட்சியாக இருக்க இப்புஸ் தகம் யாருக்காவது உதவியாயிருக்குமானுல் அதுவே நான் அடையும் பெரும் பாக்கியமாகும்.

M. S. Taylor.

CONTENTS

MODEL CHRISTIAN WITNESS.

உத்தம கிறிஸ்தவ சாட்சி.

முகவுரை.

What is Meant by Witness?

சாட்சி என்பதால் நாம் அறிந்துகொள்ளும் விஷயம் யாது?

சாட்சி என்ற வார்த்தையானது அடிக்கடி நாம் கேள்விப்படும் பதமாகும். யாராவது ஒருவர் இன்னொருவர்மேல் குற்றம் குறை கூறினால் அதற்குச் சாட்சி என்ன என்று கேட்கிறார்கள். ஒரு சம்பவம் நடந்ததாகச் சொல்லப்பட்டால் அதை ரூபித்துக்காட்ட சாட்சி தேடுகின்றனர். அந்தச் சாட்சி உண்மையோ அல்லவோவென்று ஆராய்ச்சிசெய்கின்றனர். கோர்ட்டில் பார்த்தாலும் சரி, நாட்டில் பார்த்தாலும் சரி, வீட்டில் பார்த்தாலும் சரி, விளையாட்டு ஸ்தலத்தில் பார்த்தாலும் சரி, எங்குபார்த்தாலும் சாட்சி என்ற வார்த்தை சாதாரணமாயிருப்பதைப் பார்க்கலாம். தேச விஷயத்தில் மாத்திரமல்ல, மார்க்க விஷயத்திலும் 'சாட்சிகூறுதல்' 'சாட்சி பகர்தல்' முதலிய வார்த்தைத் தொடர்கள் உபயோகப்படுவதைக் கவனிக்கலாம்.

பற்பல நூல்களை வாசித்துப்பார்த்தாலும சாட்சி என்ற பதம் திரும்பத் திரும்ப வருவதைக் காண்கலாம். சரித்திர ஆராய்ச்சிக்காக சாட்சி தேடுகிறார்கள். சாஸ்திர நிபுணர்கள் சாட்சிகளை ஆராய்ந்து பார்க்கிறார்கள். வேதசாஸ்திரிகள் தாங்கள் ரூபிக்க எத்தனிக்கும் உபதேசங்களுக்கு சாட்சி தேடுகிறார்கள். வேதாகமங்களும் சாட்சிகளைப்பற்றிப் பேசுகின்றன.

ஆகையால் சாட்சியாவது என்ன? அதால் குறிக்கப்படுவது யாது? என்ற இவைபோன்ற கேள்விகளை ஆராய்வது நன்மையாகும்.

I. பழைய ஏற்பாட்டிலிருந்து கற்றுக்கொள்பவை.

நமது பழைய ஏற்பாடானது எபிரேயப் பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது என்று எல்லாருக்கும் தெரியும். சாட்சி என்று மொழி பெயர்க்கப்படும் எபிரேய பதம் ஆட்களையும் பொருள்களையும் குறிப்பிடும். ஆதி. 21 : 30. பெயேர்சேபாவிலுள்ள துரவுகளை அபிமேலேக்கிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக அபிமேலேக்குக்கு ஏழு ஆட்டுக்குட்டிகளை ஆபிரகாம் கொடுக்கிறான். இன்னொருவிதமாகச் சொன்னால் இருவர்க்கிடையில் நடந்துகொண்ட ஒரு உடன்படிக்கைக்கு இந்த ஆடுகள் ஒரு அடையாளமாக இருக்கின்றனவென்று பார்க்கலாம். ஆதி. 31 : 46, 52. லாபானுக்கும் யாக்கோபுக்கும் நடந்த ஒரு உடன்படிக்கைக்கு ஒரு அடையாளமும் சாட்சியுமாக கற்குவியலும் தூணும் நிறுத்தப்பட்டது. கற்குவியலும் தூணும் நடந்த ஒரு சம்பவத்திற்குச் சாட்சி. பின்வரும் வசனங்களையும் பார்க்க. யோசுவா 22 : 10, 26, 34 ; 24 : 26, 27. இந்த வசனங்களில் கல்லானது இஸ்ரவேலர் செய்த உடன்படிக்கையின் சாட்சியாக நிறுத்தப்பட்டதென்றறிகிறோம். ஏசா. 19 : 20. எகிப்துதேசத்தில் கடவுள் நடப்பித்த கிரியைகளுக்கடையாளமும் சாட்சியுமாக ஸ்தம்பம் நாட்டப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஆகவே, எழுதும் வித்தை சாதாரணமாக இருந்திராத காலத்தில் இப்படிப்பட்ட அடையாளங்கள் ஒரு சம்பவத்தை ருசுப்படுத்தும் சாட்சியாய் வைக்கப்பட்டிருக்கிறதென்றறியலாம்.

ஆதி. 31 : 50. அதாவது, கடவுள் இருவருக்கும் மத்தியில் நடந்த சம்பாஷணையின் உண்மையை ஸ்திரப்படுத்தும்படி சாட்சியாயிருக்கிறார் என்பது எபிரேயருக்குள் சாதாரண வழக்கச்சொல்லாய்

இருந்தது. யோபு 16 : 19. யோபு தான் செய்யுங்காரியங்களின் உண்மையை உறுதிப்படுத்துகிறவர் கடவுள்தான் என்று கூறுகிறூர். எரே. 42 : 5. இதே பொருள் இங்கேயும் வற்புறுத்தப்படுகிறது. இந்த வசனங்களிலிருந்து நாம் அறிகிறதென்னவென்ருல் ஒரு சாட்சி நடந்த ஒரு காரியத்தைப்பற்றி ருசுப்படுத்துகிற ஒரு ஆள் என்று பார்க்கிரோம்.

எரே. 32 : 10. எரேமியா தீர்க்கதரிசி ஒரு பத்திரத்தை எழுதி அதில் சாட்சிகளாக சிலர் கையெழுத்துப் போடும்படி செய்கிறூர். இதிலிருந்து ஒரு பத்திரத்திற்கு கையொப்பமிடுகிறவன் அல்லது நியாய ஸ்தலத்திற்கடுத்த ஒரு விஷயத்தைப்பற்றி தான் அறிந்ததைச் சொல்லும் ஆள் ஒரு சாட்சியென்று அருத்தப்படும்.

எபிரேய பாஷையில் இவ்வார்த்தையின் மூலக்கருத்து ஒரு சங்கதியைப் பலமுறையும் உறுதியாகக்கூறுவதென்பதாம். மேற்காட்டிய வேதவாக்கியங்களினின்று பழையேற்பாட்டில் 'சாட்சி' என்பது மூன்று வகையாய் உபயோகப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

1. ஒரு சமாச்சாரத்தை அல்லது சம்பவத்தை ருசுப்படுத்தும் ஓர் அடையாளம். ஆதி. 31: 48 முதலிய வசனங்கள் பார்க்க.

2. நடந்த ஒரு காரியத்தைப்பற்றிய உண்மையை ருசுப்படுத்துகிற ஒரு ஆள்.

3. நியாய ஸ்தலத்தில் அல்லது பத்திரத்தில் ஒரு விஷயத்தை உறுதிப்படுத்தும்படியாகச் சாட்சியிடுகிறவன்.

இந்த மூன்று கருத்துக்களையும் நாம் மனதில் வைத்துக்கொள்வோமானுல், 'கிறிஸ்தவன் ஒரு சாட்சி' என்ற வார்த்தைகளின் உள்ளான கருத்தை அறிந்துகொள்ளுகிறோம்.

II. புதிய ஏற்பாட்டிலிருந்து கற்றுக்கொள்பவை.

புதிய ஏற்பாட்டை நாம் ஆராய்ச்சிசெய்வோமானால் சாட்சி என்ற வார்த்தை மூன்று வகைக் கருத்தில்வந்திருப்பதாய்ப் பார்க்கலாம். மாற். 14: 56-59, லூக். 22: 71. சாட்சி என்பது ஒருவன் ஒரு காரியத்தைக் குறித்துச்சொல்லும் ஒரு விஷயமாகும். இது நியாயஸ்தலத்திற்கடுத்த ஒரு பதம். யோவா. 8: 17-ஐ பார்க்க. யோவா. 19: 35. இது ஒரு விஷயத்தைக்குறித்த உண்மையைப் பற்றிச் சொல்லுதல் யோவா. 21: 24-ஐ பார்க்க. இது இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய உபதேசங்களைப்பற்றியும் குறிக்கும். பின்வரும் வசனங்களையும் பாக்க. யோவா. 1: 19, 5: 36, வெளி. 11: 7, அப். 22: 16. 2 கொரி. 1: 12. இங்கே சாட்சி என்பது ஒரு ஆளைப்பற்றி பொதுவாய்க் சொல்லப்படும் விஷயம். சரித்திர சம்பந்தமான விஷயத்தையும் சாட்சி என்ற பதம் குறிப்பிடும். அப். 4: 31. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிய சம்பவத்தைக் குறிக்கிறது.

2. ஒரு விஷயத்தை ரூபிக்கும்படியாக அதைப்பற்றிய விஷயங்களைக் கூறும் மனிதர் சாட்சிகள் என்று அழைக்கப்படுவார்கள். இது நியாய ஸ்தலத்திற்கடுத்த பதம். மாற். 14: 63, அப். 6: 13, 7: 58, 2 கொரி. 18: 8; 13: 1; 1 தீமோ. 5: 19; எபி. 10: 28 பார்க்க. பொதுவாக தான் கண்டு, கேட்டு அறிந்திருக்கும் ஒரு விஷயத்தைக் குறித்த உறுதிமொழியைக் கூறுகிற ஒருவனைக் குறிப்பிடும். 1 தெச 2: 10. அதாவது தெசலோனிக்கை சபையார் பவுல் அப்போஸ்தலன் நடந்துகொண்ட ஜீவியத்தைக் கண்டும், கேட்டும், அறிந்தும் இருந்தார்கள். இதே கருத்திலேயே வேறு இடங்களிலேயும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 1 தீமோ. 12; ரோம. 1: 9; பிலி. 1: 8. இதே பதந்தான் பந்தயத்தில் சுற்றி இருப்பவர்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாட்சி என்ற பதம் விசேஷித்த கருத்தில் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் கண்ணுற்கண்ட ஒருவனைக் குறிப்பிடும்படி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. லூக். 24 : 48 ; அப். 1 : 8, 22 ; 2 : 32 ; 3 : 15 ; 5 : 32 ; 10 : 39, 41 ; 13 : 31 ; 26 : 16 ; 2 தீமோ. 2 : 2 பார்க்க.

3. சாட்சி என்ற வார்த்தை சத்தியத்தினிமித்தம் உயிரையும் கொடுக்கிற ஒரு ஆளைக் குறிப்பிடும். இதற்குப் பொதுவாக இரத்தச் சாட்சி என்பதுண்டு. அப் 22: 20. இரத்தச் சாட்சி என்ற பதம் சபைச் சரித்திர நூலாசிரியர்களால் அதிகமாய் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. ஸ்தேவான் இதற்கு ஏற்ற உதாரணம். எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் அநேக உதாரணங்களைப் பார்க்கலாம்.

ஆகவே, சாட்சி என்று சொல்லும்போது ஒரு காரியம் உண்மை என்று தங்கள் வார்த்தையினாலும் ஜீவியத்தினாலும் ரூபிக்கிறவர்கள் என்று அறிகிறோம். ‘கிறிஸ்துவுக்குச் சாட்சி’ என்றால் கிறிஸ்து உலகத்தில் நடந்த ஜீவியத்தைக் குறித்தும், சிலுவையின்பேரில் அவர் செய்த தியாகத்தைக்குறித்தும் உயிர்த்தெழுதலில் அவர் அடைந்த வெற்றியைக்குறித்தும் தங்கள் உண்மையான ஜீவியத்தாலும், வார்த்தையாலும், கிரியைகளாலும் சாட்சிகூறுகிறவர்கள் என்று அருத்தப்படும்.

இன்னொரு விதமாய்ச் சொன்னால் கிறிஸ்து பாவத்தினின்று இரட்சிக்கிறவர் என்கிற சத்தியத்தைத் தங்களுடைய பாவம் முழுதும் கழுவப்பட்டு பரிசுத்த ஜீவியம் செய்வதாலும், கிறிஸ்து உயிரோடிருக்கிற வல்லமையுள்ள கர்த்தர் என்பதை பாவத்தின் பேரிலும் துற்பழக்கத்தின்பேரிலும் அடையும் ஜெயத்தினாலும், கிறிஸ்து நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்தார் என்பதை தங்களது பரோபகார கிரியைகளினாலும் ரூபித்துக்காட்டி மற்றவர்கள் அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளப் பிரயாசப்படுகிறவர்களே உத்தம கிறிஸ்தவ சாட்சிகளாவார்கள்.

இரண்டாம் பாகம்.

முதலாம் அதிகாரம்

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

1. கண்கண்ட அநுபவம்
Personal Experience.

கண்கண்ட அநுபவம், யோவா. 4: 9; எபே. 2: 2; தீமோ. 1: 8—14; 1 தெசலோ. 4: 1—12; 1 பேதுரு 1: 13—22.

1 தீமோ. 1: 15 பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது, அவர்களில் பிரதானமான பாவி நான்.

ஒரு விவகாரத்தில் சாட்சிசொல்ல வந்திருக்கிற ஒருவன் அப்படிச் சாட்சிசொல்ல சரியான பாத்தியதை உடையவனோ என்று கவனிப்பது அவசியம். ஒரு கோர்ட்டில் சாட்சி சொல்லுகிறவனை பல குறுக்குக் கேள்விகள்கேட்டு அவனுக்கு அந்த சாட்சி சொல்லத் தக்க யோக்கியதை அல்லது இலக்ஷணம் உண்டோ அல்லவோ என்று அறிந்துகொள்ள வக்கீல்கள் பிரயாசப்படுகிறார்கள். அவன் யோக்கியனானால் அவன் சொல்லும் சாட்சியத்திற்கு மதிப்புண்டு. அவனுக்குகந்த இலக்ஷணம் இல்லையாகில் அவன் யாருக்காக சாட்சிசொல்லவருகிறானோ அந்த ஆள் பக்ஷத்திற்கு பிரதிகூலமுண்டாகும், அவன்யோக்கியமுள்ளவனாகக் காணப்பட்டால் அநுகூலமுண்டாகும். ஆனபடியினால் சாட்சிசொல்கிற ஒரு ஆள் சிறந்த இலக்ஷணமுடையவனாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவுக்காக சாட்சி சொல்லுகிறவர்களும் உத்தம இலக்ஷண முடையவர்களாயிருக்கவேண்டும். இன்னொரு விதமாகச்சொன்னால் சித்திபுடன் சாட்சி சொல்லவேண்டியவர்களின் குணாதிசயங்கள் என்னவென்று நாம் ஆராய்வோமாக.

மேற்சொன்ன வசனத்தை எழுதியவர் அப்போஸ்தலனாகிய பவுல். இவர் கிறிஸ்துமார்க்கத்தை கவிழ்த்துப்போடும்படி பிரயாசப்பட்டவர். ஆயினும் கிறிஸ்து அவரைச் சந்தித்து ஆட்கொண்ட சமயத்தில் தன் நிலைமையை உணர்ந்தார். தன்னை இரட்சகருக்கு பூராவாக ஒப்புக்கொடுத்தார். ஆண்டவரும் இவரை ஏற்றுக்கொண்டு தம்முடைய சாட்சியாக ஏற்படுத்தினார். இவர் தம்முடைய சொந்த ஜாதியாகிய யூதருக்குச் சாட்சி சொன்னதுமாத்திரமல்ல பாவத்தில் மூழ்கி பரிதாபமான நிலைமையில் இருந்த ஜனங்களின் மத்தியிலும் இயேசுக்கிறிஸ்துவின் இரட்சிப்பின் மாட்சிமையை சாட்சியாகக்கூறிவந்தார். ரோமர் 1: 18—32. அவர் ரோமாபுரியில் இருந்த ஜனங்களின் பரிதாபமான நிலைமையை எடுத்துக்கூறுகிறார். கொரிந்து சபையாரைப்பற்றியும் இதேவிதமாகக்கூறுகிறார் 1 கொரி. 6: 9—11 அப்படி அசுத்த ஜீவியம் செய்துவந்தவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதாக உரைக்கிறார். இந்தத் தாழ்ந்த ஜீவியத்திலுள்ளவர்கள் மேலான ஜீவியத்திற்குவந்த காரணமென்ன? அப்படிப்பட்ட ஜீவியம் செய்யும்படி அந்த ஜனங்கள் இழுக்கப்பட்டதற்கு முகாந்தரமென்ன?

ஒரு முகாந்திரம் கிறிஸ்துவின் ஜீவியத்தைக்குறித்துச் சாட்சி சொன்னவர்களின் அனுபவமே. நாம் இதை இலேசாக அறிந்துகொள்ளுவோம். குஷ்டரோகியாகிய ஒருவன் சிலகாலம் மானாமதுரைக்குச்சென்று அங்கு சுகமடைந்து திரும்பித்தன் ஊருக்குப்போகிறான். அங்கேயுள்ள அந்த ஊரார் இவனைப்பார்க்க ஆச்சரியப்

படுகிறார்கள். பக்கத்துக்கிராமத்தில் இதே வியாதி உள்ள இன்னொரு மனுஷனிருக்கிறான். அவன் மானாமதுரைக்குப் போகும்படி பலர் புத்திசொன்னபோதிலும் அவனுக்குப்போகப் பிரியமில்லை. ஆனால் ஒருநாள் மானாமதுரையிலிருந்து திரும்பிவந்த ஆளை சந்திக்கிறான். அவனிடத்தில் பல கேள்விகள் கேட்கிறான். இவன் தான் வியாதியாய் இருந்ததையும் மானாமதுரைக்குப்போனதையும் அங்கு சிகிட்சைபெற்றதையும் சுகமடைந்ததையும் குறித்துச்சொல்லுகிறான். இதைக்கேட்ட அவன் உடனே தானும்போகப் பிரயாசப்படுகிறான். இந்த மாறுதலுக்கு காரணமென்ன? சிகிட்சைபெற்று சுகமடைந்து வந்தவனின் கண்கண்ட அனுபவசாட்சியல்லவா?

தத்துவ சாஸ்திரம் கற்றுக்கொண்டிருந்த ஒரு வாலிபன் தெய்வ பயமற்றவனாகவும் துன்மார்க்கனாகவும் ஜீவிதவந்தான். பாவத்தில் மூழ்கி பெரிய துன்மார்க்கனாக ஜீவித்தான். ஆயினும் கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தபோது முற்றிலும் மாறினவனானான். பாவத்தை வெறுத்தான். பரிசுத்தத்தைச் சிநேகித்தான். அநேகர் அவருடையவார்த்தையைக் கேட்க ஆசையாய் இருந்தார்கள். அவருடைய பிரசங்கத்தைக்கேட்டு அநேகர் குணப்பட்டார்கள், இவர் தான் பரிசுத்த அகஸ்தீன். பரிசுத்த அகஸ்தீன் சித்தியுள்ள சாட்சியாயிருந்ததற்குக் காரணம் அவர் கிறிஸ்துவைக் குறித்துக்கொடுத்த அனுபவசாட்சியே.

சாராயக்கடையில் ஒரு வாலிபன் வேலைசெய்துகொண்டிருந்தான். அவன் கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்றான், அவனுடைய ஜீவியம் மாறினது. அவன்தான் இங்கிலாந்து, ஸ்காட்டிலாண்டு, அமெரிக்கா என்ற தேசங்களில் கிறிஸ்துவுக்கென்று அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திய வல்லமையுள்ள பிரசங்கியாகிய மிஸ்டர் ஜார்ஜ் ஒயிட்பீல்ட் என்பவர். இவருடைய சாட்சி இவ்வளவு வல்லமையாய் இருந்ததற்குக் காரணம் அவருடைய சொந்த அனுபவ சாட்சியே.

"நான் செய்ததெல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்" என்று சொன்ன ஸ்திரீயின் சாட்சியை கவனிக்க. யோவா. 4 : 28 — 30 ; குருடனாயிருந்தேன் இப்போது பார்க்கிறேன் என்ற சாட்சியையும் பார்க்க. யோவா. 9 ; ஆகவே ஒரு உத்தம சாட்சியில் காணப்படவேண்டிய முக்கிய இலக்ஷணம் கண்கண்ட அனுபவம்.

இரண்டாம் அதிகாரம்.

கண்கண்ட அனுபவம் என்பதின் அடக்கம்.

The Content of Personal Experience.

சங். 32, 40, 46, 126, ரோம. 10 : 1-15.

கண்கண்ட அனுபவம் என்பது மூன்று காரியங்களைக் குறிப்பிடும்.

(1) கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையிலே தமது உயிரைத் தியாகம்பண்ணியதால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்ற அறிவு இதில் அடங்கும் என் பாவத்தைக் கர்த்தர் மன்னித்திருக்கிறார், நான் சுயாதீனன் என்று சொல்லத்தக்கதாயிருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் பாவிகளிலெல்லாம் பிரதான பாவி என்று எண்ணினபோதிலும் தன்னுடைய பாவம் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்ற நிச்சயமுடையவராயிருந்தார். லூக். 19: 10-ல் சொல்லப்பட்டபடி "மனுஷகுமாரன் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்திருக்கிறார்" என்ற சத்தியத்தை நமது ஜீவியத்தில் ரூபித்துக் காட்டக்கூடியவர்களாயிருக்கவேண்டும்.

நாம் உள்ளபடி இந்த அனுபவம் உடையவர்களாயிருந்தால் மாத்திரம் மற்றவர்களுக்குச் சாட்சிகூறக்கூடும். சிலர் தாங்கள் இரட்சிக்கப்படாமலே மற்றவர்களுக்கு இரட்சிப்பைப்பற்றி சாட்சிசொல்ல புகுவார்கள். இது பொய்ச்சாட்சியாகும். இயேசுகிறிஸ்து பேதுருவை

நோக்கி நீ குணப்பட்டபின் உன் சகோதரரைக் குணப்படுத்து என்று சொல்லுகிறார். இதே வார்த்தை இன்றைக்கு நமக்கும் வருகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்பது நமது சாட்சியானால் நம்முடைய பாவங்களையும் நம்மைவிட்டு நீக்கிச் சுத்திகரித்திருக்கவேண்டும்.

(2) மரணத்திலிருந்து உயிரோடெழுந்த கிறிஸ்து நம்முடைய பாவத்தின் வல்லமையினின்று நம்மை தினசரி விடுதலைசெய்து கொண்டுவருகிறார் என்ற அறிவுடையவர்களாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து மரித்து இரத்தம் சிந்தினவர் மாத்திரமல்ல; அவர் உயிரோடெழும்பி இன்றைக்கும் உயிரோடிருக்கிறார். இந்த சத்தியம் கிறிஸ்துமார்க்கத்தின் மூலசத்தியம். கிறிஸ்து மார்க்கத்துக்கும் மற்ற மார்க்கங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதில்தான் காணப்படும். இந்த சத்தியத்தை ரூபித்துக்காட்டும்படி ஆதிகாலமுதல் இதுவரைக்கும் அநேகர் பிரயாசப்பட்டு வந்திருக்கிறார்கள். அநேகர் நியாயங்களைக் கூறிவந்திருக்கிறார்கள். அவைகளில் எல்லாவற்றிலும் விசேஷித்த நியாயம் அப்போஸ்தலனாகிய பவுல் எபே. 1 : 19-ல் கூறியிருப்பதே. "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக்கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்."

இந்த வசனத்தில் நாம் பார்க்கிறது என்னவென்றால் பிதாவானவர் தம்முடைய வல்லமையை நாம் அறிந்துகொள்ள நமக்குப் பிரகாசமுள்ள கண்களைத் தரவேண்டுமென்று ஜெபிக்கிறார். அந்த வல்லமையானது விசுவாசிக்கிற நம்மிடத்தில் காணப்படுமாம். அந்த வல்லமை எதுவென்றால் இயேசுகிறிஸ்துவை உயிரோடெழுப்பிய

வல்லமையாம். அதாவது இயேசுகிறிஸ்துவை உயிரோடெழுப்பிய வல்லமையே நம்முடைய ஜீவியத்திலும் காணப்படுகிறதாம். எபே. 2: 7-ல் சொல்லுகிறபடி ' கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் ". நம்முடைய அன்றாடக ஜீவியத்தில் பாவத்தின்மேல் ஜெயங்கொண்டவர்களாய் ஜீவிப்பதினால் நாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நடத்தப்படுகிறோம் என்பதைக் காட்டுகிறோம்.

நம்மை கட்டியிருக்கும் வழக்க பழக்கங்கள் முற்றிலும் அறுந்துபோக வேண்டுமென்றால் கிறிஸ்துவின் வல்லமை அவசியம். அநேகர் துற்பழக்கங்களுக்கு உட்பட்டு அதை மேற்கொள்ளக் கூடாமலிருக்கிறார்கள். இதற்குக் காரணம் வல்லமையற்றிருப்பதே. " குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே நீங்கள் விடுதலையடைவீர்கள் " என்று சொன்ன அவர்தாமே நமக்கு அந்த வல்லமையை அருள இன்றைக்கும் உயிரோடிருக்கிறார். அவர் தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு வல்லமை அருளுகிறார். " நான் உலகத்தை ஜெயித்தேன் " என்றவர் உலகத்தை ஜெயிக்க வல்லமையும் கொடுக்க தயாராயிருக்கிறார். நம்மைத் திடங்கொண்டிருக்கும்படி கேட்கிறார். (யோவான் 16 : 32.)

2 தீமோ. 2 : 21 " ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால் அவன் பரிசுத்தமாக்கப்பட்டு எஜமானுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்." ஒரு சாட்சி கடவுளால் உபயோகிக்கப்படுகிற ஒரு பாத்திரமாகும். அந்தப் பாத்திரம் உள்ளும் புறம்பும் சுத்தமாக இருக்கவேண்டும் மற்றப்படி அது உபயோகப்படுத்தப்படமாட்டாது. நாம் குடிக்கும் தண்ணீரை அழுக்கான பாத்திரத்தில் வைக்கமாட்டோம். அப்படியே ஜீவதண்ணீரைக்

கொண்டுபோகும் ஒரு சாட்சி உள்ளும் புறமும் சுத்தமாயிருக்கவேண்டும் மற்றப்படி பிரயோஜனமில்லை. நல்ல வரங்களையும் வேத அறிவையும் உடையவர்களாயிருந்து கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யப் பிரயாசப்பட்டும் யாதொரு பலனைக் காண்கிறதில்லை. அதற்குக் காரணமென்ன? ஆண்டவர் பார்க்கிறபடி பார்ப்போமானால் இங்கு இரகசியப் பாவமிருக்கிறதாகக் கண்டுகொள்ளுவோம். கடவுள் அழகான பாத்திரத்தைத் தேடாமல் சுத்தமான பாத்திரத்தைத் தேடுகிறார். இப்படி உள்ளும் புறமும் சுத்தமான ஜீவியம் செய்யவேண்டுமானால் நமக்கு அவசியமானது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையே.

(3) முழுவதும் ஒப்புக்கொடுத்த ஜீவியம் "கிறிஸ்து என் ஜீவன்" என்று சொல்லக்கூடியதாலேயே பவுல் அப்போஸ்தலன் பலத்த சாட்சியாக இருந்தார். அவர் தமது சித்தத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார். அப்போஸ்தலர் 9 : 6 "ஆண்டவரே நான் என்னசெய்ய சித்தமாயிருக்கிறீர்" என்றுகூறி தன்னை ஒப்புக்கொடுத்த அந்நேர முதல் ஆண்டவருக்குத் தெரிந்துகொண்ட பாத்திரமானார். அப். 9: 13 உத்தமசாட்சி தன் எஜமானனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு தன் சித்தத்தை ஒப்புக்கொடுக்கவேண்டும் "என் சித்தமல்ல உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கிறிஸ்து சொன்னதுபோல் நாமும் சொல்லும்போதுதான் அவர் நம்மை சாட்சியாக உபயோகிக்கக்கூடும். அவருடைய சித்தத்திற்கு நம்முடைய சித்தம் குறுக்காகப்போகும்போது சிலுவை உண்டாகிறது; என்றாலும் நாம் அவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அந்த சிலுவை இன்பமாக மாறும்.

நம்முடைய சித்தத்தை மாத்திரமல்ல நமக்குள்ளவைகளையும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும், மத் 14 : 16—20. ஐந்தப்பத்தையும் இரண்டு மீனையும்கொண்டு ஐயாயிரத்துக்கதிகமான பேரைப் போஷித்த அற்புதம் நமக்கேற்ற உதாரணமாகும். அவர்கள் கையிலே

இருந்த அந்த ஐந்தப்பத்தையும் அந்த இரண்டு மீனையும் கிறிஸ்து வினிடத்தில் கொடுத்தார்கள், ஆண்டவர் அதை ஆசீர்வதித்தார். அவர்கள் ஒன்றையும் வைத்துக் கொள்ளவில்லை. கிறிஸ்துவின் கையில் கொடுக்க அநேகருக்கு ஆசீர்வாதம் உண்டானது. அப்படியே உத்தம சாட்சி தனக்குரிய தாலந்துகள் யாவையும் தாராளமாய் அவர் கையில் ஒப்புவிக்கவேண்டும்; அப்பொழுது சித்தியுள்ள சாட்சியாயிருக்கக்கூடும்.

ஆகவே உத்தம சாட்சியின் முதல் இலட்சணம் கண்கண்ட அனுபவமே. இதில் பாவமன்னிப்பு, பரிசுத்த ஜீவியம், பரிபூரண ஒப்புக்கொடுத்தல் ஆகிய மூன்றும் அடங்கும். உத்தம சாட்சியே, இந்த அனுபவமுண்டா?

மூன்றும் அதிகாரம்.

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

2. ஊக்கம்.

Earnestness of a Model Witness

ஓக். 15. யோவா. 15: 18—20, 16: 1.

"ஊக்கமது கைவிடேல்" என்றார் ஔவையார். ஒரு காரியத்தைச் சித்தியுடன் செய்துமுடிக்கவேண்டுமென்றால் ஊக்கம் அவசியம். ஊக்கமில்லாத ஒருவன் இவ்வுலகத்தில் சித்திபெறமுடியாது. ஊக்கமென்ற வார்த்தைக்கு உள்ளக் கிளர்ச்சி, உற்சாகம், முயற்சி, வலி அல்லது வல்லமை என்று அருத்தமுண்டு. அதாவது ஒருவன் ஒரு காரியத்தைச்செய்ய ஆரம்பித்தால் அதைப்பற்றி மனதில் சந்தோஷமிருக்கவேண்டும். சந்தோஷமில்லாமல் ஒரு காரியத்தை ஆரம்பித்தால் அது சித்திபெறுமென்று சொல்லமுடியாது. உற்சாகம் என்பது ஒரு காரியத்தைச் சந்தோஷத்தோடு செய்கிறதைக் காட்டும்.

முயற்சி என்பது தான்கொண்ட எண்ணம் நிறைவேறச்செய்யும் கிரியை. வலி அல்லது வல்லமை என்பது, அப்படிக் கிரியை நடப்பிக்கும்போது வரக்கூடிய கஷ்டநஷ்டங்களை மேற்கொள்ளுவதில் காணப்படும் தைரியமாகும். இந்த நாலு காரியங்களையும் நாம் சேர்த்துப்பார்த்தால் ஊக்கம் என்னும் பதத்தால் குறிக்கப்படும் விஷயம் இலேசானதல்லவென்று அறிந்துகொள்ளுவோம்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்
கண்துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார்
கருமமே கண்ணாயினர்"

லூக். 15-ம் அதிகாரத்தில் ஒரு பதத்தொடரை அடிக்கடி பார்க்கிறோம். "கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ" "கண்டுபிடிக்கும்வரை ஜாக்கிரதையாய் தேடாமலிருப்பாளோ" இந்தப் பதங்கள் ஊக்கமென்பதின் கருத்தைக் காட்டுகிறது. தான் எடுத்துக்கொண்ட முயற்சி கைகூடும்வரைக்கும் கிரியை நடப்பித்தல் என்ற கருத்தில் தான் "சோர்ந்துபோகாமல்" என்ற பதமும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. அநேகர் தாங்கள் எடுத்த முயற்சியை ஊக்கமாக இருந்து கடைசிவரைக்கும் கிரியை நடப்பிக்காமல் இடையில் சோர்ந்துபோய் பலனடையாமல் போகிறதுண்டு. ஒரு மனுஷன் மண்ணெண்ணெய் எடுக்கும்படியாக கேணியொன்று தோண்டிக்கொண்டு போனான். சிலகாலமாக தோண்டிக்கொண்டு போயும் எண்ணெயைக் காணாததால் சோர்வுற்று நிலத்தையும் அதில் தோண்டிய கிணற்றையும் விற்க ஆலோசனைசெய்து கடைசியாக விற்றுப்போட்டான். இதை விலைக்கு வாங்கினவன் தன் ஆட்களோடு கிணற்றிற்குப்போய் மறுபடியும் தோண்ட ஆரம்பித்தான். இரண்டு மூன்று தினங்கள் சென்றபின் எண்ணெய் கசிய ஆரம்பித்தது. இன்னும் இரண்டொரு தினத்தில் நேர்த்தியான

எண்ணெய் ஊற்று திறந்து வடிந்தது. இதை விற்றுப்போட்டவன் கண்டு விசனமடைந்தான். இவன் ஊக்கத்தோடு பிரயாசப்பட்டிருப்பானுனல் எண்ணெயைக்கண்டு சந்தோஷமடைந்திருப்பான். ஆனல் ஊக்கமில்லாததால் பெரிய நஷ்டத்திற்குள்ளானன். இவ்வண்ணமாகவே ஊக்கமின்மை நஷ்டத்திற்கு நடத்தும். ஊக்கமோ சித்திக்கு வழி. ஊக்கம் கிறிஸ்துவின் சாட்சிகளுக்கு மிகவும் முக்கியமான இலக்ஷணம். பொதுவாய் இரண்டொரு நாட்களில் சொல்லப்படும் சாட்சியால் ஒரு ஆத்துமா ஆதாயப்படுத்தப்படப்போகிறதில்லை. சில நாட்களோ, மாதங்களோ, வருஷங்களோ காத்திருக்கவேண்டும். நாம் விடாமுயற்சி உள்ளவர்களாயிருக்க வேண்டும். டோரிப்பண்டிதர் ஒரு ஆளை ஆதாயப்படுத்த 15 வருடம் காத்திருந்தாராம். அதன்பின் சித்தியடைந்தார். அவ்வண்ணமே நாமும் ஊக்கமுள்ளவர்களாக உழைக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய செய்தி சந்தோஷ செய்தி என்று அழைக்கப்பட்டிருக்கிறது. சந்தோஷ செய்தியைக் கூறுகிறவர்கள் சந்தோஷம் நிறைந்தவர்களாயிருக்கவேண்டும். சாட்சியினுடைய முகம் சந்தோஷத்தைக் காட்டவேண்டும். அது அவன் சொல்லும் செய்தியின் உண்மையை ருசுப்படுத்தவேண்டியதாயிருக்கும். "என் இருதயம் நல்ல சுவிசேஷததால் நிறைந்திருக்கிறது" என்றதுபோல ஒவ்வொரு சாட்சியின் இருதயமும் நல்ல செய்தியால் நிறைந்திருக்க வேண்டும்.

ஊக்கத்தில் உற்சாகமும் அடங்கும் என்று பார்த்தோம். உற்சாகம் கஷ்டங்களை மேற்கொள்ளச்செய்யும். அது வல்லமையுள்ளதாயிருக்கும். இதைக் கொதி தண்ணீருக்கு ஒப்பிடலாம். ஒரு இன்ஜினில் தண்ணீர் நிரப்பிவைத்திருக்கிறோம்; ஆனல் ஒரு கிரியையும் நடக்கப் பார்க்கிறதில்லை ஆனல் நெருப்பினல் அதைக் காயவைத்து அதைக் கொதிதண்ணீராக மாற்றும்போது அது கிரியைசெய்கிறது.

இன்ஜின் பாரமான வண்டிகளை இழுத்துக்கொண்டுபோவதைப் பார்க்கிறோம். இதுதான் உற்சாகம்செய்யும் கிரியை. நாம் கிறிஸ்துவுக்காகச் சாட்சிசொல்லும்போது பலவித கஷ்டங்கள் வருத்தங்கள் வரலாம்; அவைகளை மேற்கொள்ளுவது உற்சாகமே. கிறிஸ்து ஊக்கத்தோடு சமாரியா ஸ்திரீக்கு சாட்சி பகிர்ந்துகொண்டு இருந்தபோது அவர் களைப்பையும் பசியையும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அப்படியே பக்தர்களும் தங்களுக்கு வந்த கஷ்டங்களை நினையாமல் உற்சாகமாக வேலைசெய்தனர். ஊக்கம் வலி அல்லது தைரியத்தைக் குறிப்பிடும். ஆதிச் சபையில் சாட்சிசொன்னோர் தைரியத்துடன் சொன்னார்கள். அப். 4:31. தானியேலையும் அவனுடைய கூட்டாளிகளின் தைரியத்தையும் கவனிக்க.

நான்காம் அதிகாரம்.

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

3. பாடுபட ஆயத்தம்

Readiness to Suffer.

ஆரம்பத்தில் பார்த்தபடி சாட்சி என்ற பதத்திற்கு ஒரு சத்தியத்திற்காக தன் ஜீவனைக் கொடுப்பதும் குறிக்கப்படும். ஸ்தேவான் முதலாம் இரத்தச் சாட்சி. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை கிராமங்களில் சாட்சிகூறும்படியாக அனுப்பினபோது "ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல இதோ நான் உங்களை அனுப்புகிறேன்" என்றார். லூக். 10: 3. அதாவது ஓநாய்கள் ஆடுகளுக்குத் தீமைவிளைவிக்கும் மிருகங்கள். அவ்வண்ணமே சாட்சி சொல்வோரும் தீங்கனுபவிக்க ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று போதித்தார். சாட்சிசொல்வோருக்கும் பலபல வருத்தங்கள் வருமென்றும் எச்சரித்திருக்கிறார். "பச்சை மரத்திற்கே இப்படியானால் பட்டமரத்திற்கு எப்படியாகும்" என்றும்

சொல்லியிருக்கிறார். இயேசுவானவர் சத்தியத்தைக்குறித்து சாட்சி கொடுக்கவந்தார். உலகமோ அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைப் பகைத்து இம்சைசெய்து கொலைசெய்தார்கள். அப்படியே அவருடைய பக்தர்களுக்கும் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சாட்சிசொல்லும்படிவந்த அநேக பக்தர் தங்களுடைய உயிரையும் கொடுத்திருக்கிறார்கள். தன் ஜீவனை நேசிக்கிறவன் அதை இழந்துபோவான் என்றும் இழந்தபோகிறவனே அதைப் பெற்றுக்கொள்ளுவான் என்றும் சத்தியவேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சத்தியத்திற்காகப் பாடுபட்டு தங்கள் உயிரைக்கொடுத்தவர்களின் ஜாபிதாவை எபிரேயர் நிருபம் 11-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுருவும் நீதியினிமித்தம் நீங்கள் பாடுபட்டால் நீங்கள் பாக்கியவான்கள் என்றார்.

ரெய்மென்ட் லல் என்ற பக்தன் 1236-ம்ஆ மெஜார்க்கார் என்ற தீவில் பிறந்தார். அவர் 30 வயதாகும்வரைக்கும் உலக மனுஷனாக ஜீவித்து பலவிதமான துன்மார்க்கங்களை நடப்பித்துவந்தார். தனக்கிருந்த கல்வித் திறமையை சிற்றின்ப பாடல்கள் அமைப்பதில் உபயோகித்தார். இப்படியிருக்குங்காலத்தில் கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து மகமதியருக்குள் சாட்சிசொல்ல தம்மை ஒப்புக்கொடுத்தார். அப்படி அவர் கிறிஸ்துவுக்காக சாட்சிகொடுத்த காலத்தில் பலவித துன்பங்களையடைந்தார். அவர் அஞ்சா நெஞ்சராகச் துன்பங்களை அனுபவித்து தான் கொடுக்கும் சாட்சியினிமித்தம் தன் உயிரையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தார். அவருடைய ஜெபம் என்னவெனில் "உமது அடியானாகிய நான் உமக்காக என்னை ஒப்புக்கொடுக்கவும் என் இரத்தத்தை பான பலியாக ஊற்றிவிடவும் ஆயத்தமாயிருக்கிறேன். மரணம் வரும்வரைக்கும் உம்மிடத்திலிருந்து பிரிக்கப்படாதபடி தியானத்தின் மூலமாகவும் அன்பின் மூலமாகவும் உம்மோடு ஒட்டிக்கொள்ள உதவிசெய்தருளும்" என்பதே. இவர்

இரண்டாமுறையாக வட ஆப்பிரிக்காவிற்குச் சென்று பூஜ்ஜியா என்ற இடத்தில்மகமதியர்களின் மத்தியில் கிறிஸ்துவுக்காக சாட்சி சொன்னபோது மகமதியர் மூர்க்கமாய்த் தாக்கி, இராஜாவின் உத்திர வின்பேரில் ஊருக்கு வெளியே இழுத்துக்கொண்டுபோகப்பட்டு கல் லால் எரியுண்டு இரத்தச் சாட்சியாய் மரித்தார்.

இரத்தச்சாட்யின் இரத்தம்திருச்சபையின் வித்து என்று சொல் லப்பட்டிருக்கிறது எந்த நாட்டிலுள்ள சபையின் சரித்திரத்தை எடுத்துப்பார்த்தாலும் அங்கெல்லாம் இரத்தச் சாட்சியின் சரித்திரத் தையும் பார்க்கலாம் அல்லது இரத்தச்சாட்சிகளில் காணப்பட்ட வீரதீர ஆவியையும் பார்க்கலாம். இராமனாதபுரத்து சமுத்திரக்கரை யின் கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுத்தனிமித்தம் ஜான் டி. புருட்டோ என்பவர் குதிரைக்காலில் கட்டப்பட்டு அடிக்கப்பட்டு இரத்தச் சாட் சியாக மரித்தார்.

கிறிஸ்துவுக்கென்று சாட்சி சொல்லுகிறவன் உலகத்தினின்று பிரிந்துநிற்கிறான். ஏனெனில் இவனுடைய சிந்தைக்கும் உலகத்தாரின் சிந்தைக்கும் அதிக வித்தியாசமுண்டு. கிறிஸ்து தமது சீஷரைப் பார்த்து நான் உலகத்தான் அல்லாததுபோல நீங்களும் உலகத்தார் அல்ல என்கிறார். யோவா. 17 : 14. கிறிஸ்தவனைக் கொலைசெய் கிறவர் கடவுளுக்கு ஊழியம் செய்கிறவனென்று நினைக்கும் காலம் வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. யோவா. 16 : 2. ஆகையால் சத்தியத்திற்காக சாட்சிகொடுக்க விரும்புகிற ஒவ்வொருவனும் துன் பத்தை எதிர்பார்த்து அதைச் சகிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

சிலர் துன்பப்பட பிரியமில்லாமல் ஊரோடு ஒத்துப்போகப் பார்க்கிறார்கள். இவர்கள் சொல்லும் பழமொழி "ஊரோடு ஒக்க ஓடு" என்பதே. சத்தியத்திற்கு சாட்சிகொடுக்க மனமற்றவர்களாய்ப் போகிறார்கள். இவர்கள் செத்த மீனுக்கொப்பாயிருக்கிறார்கள். தண்ணீரானது வாய்க்காலில் பிரவாகித்து வரும்போது செத்த மீன்

நீரோட்டத்தோடு சேர்ந்து சமுத்திரத்திற்கு அடித்துக்கொண்டு போகப்படுகிறது. ஆனுல் உயிருள்ள மீனே நீரோட்டத்தை எதிர்த்து மேலே ஏறிப்போகிறது. அவ்வண்ணமாகவே ஒரு உத்தம சாட்சி நீரோட்டத்தோடு போகிற செத்த மீனைப்போலிராமல் உயிருள்ள மீனைப்போல சத்தியத்திற்காக கஷ்டங்களை அனுபவிக்கவும் ஆயத்த மாயிருக்கவேண்டுமே.

விண்கிரீடம் பெறப்போருக்குக்
கிறிஸ்தேசு செல்கின்ருர் ;
அவரின் வெற்றிக்கொடிக்குக்
கீழாகப் போ வோன் யார் ?
தன் துக்கப் பாத்ரம் குடித்து
சோராமல் நிற் போன் யார் ?
தன் சிலு வை யை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்.

ஐந்தாம் அதிகாரம்.

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

4. ஞானம்.

Wisdom.

2 பேது. 1 : 5-7. தைரியத்தோடே ஞானத்தையும் கூட்டு. கிறிஸ்துவுக்காக சாட்சிகொடுக்கிற ஒரு ஆளில் இருக்கவேண்டிய இன்னெரு இலட்சணம் ஞானம். ஞானத்தைப்பற்றி சாலொமோன் ஞானியார் அதிகமாகச் சொல்லியிருக்கிருர். ஞானத்தின்பேரில் அநேக அதிகாரங்கள் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவன் ஒரு காரியத்தைச்செய்யவேண்டுமென்ருல் அதை ஞானத்தோடு செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறேம். ஞானமில்லாமல் ஒன்று செய்யப்படும்போது அதனுல் பலத்த கேடு வருவதாகப் பார்க்கிறேம். ஒரே

விஷயத்தை நன்மைக்கென்றும் தீமைக்கென்றும் உபயோகப்படுத்த லாம். ஆகவே ஞானமென்பது எதில் அடங்கியிருக்கிறது என்று பார்க்கவேண்டும். இதை விளங்கிக்கொள்ளுவதற்கு இதோடு சம் பந்தப்பட்ட இன்னொரு வார்த்தையாகிய அறிவு என்பதை ஆராய வேண்டும். அறிவு என்பது காரியங்களை திட்டவட்டமாய் ஆராய்ச் சிசெய்து விஷயத்தை கிரகித்துக்கொள்வதே. இதை தேனீயானது புஷ்பங்கள்தோறும் உட்கார்ந்து மதுவை உண்டு தேனைச் சேர்ப்ப தற்கு ஒப்பிடலாம். வேறொரு விதமாகச் சொன்னால், ஒரு வியா பாரி பல தேசங்களிலும் சென்று உயர்ந்த சாக்குகளை சேர்த்துவைப் பதையும் ஒக்கும். ஆனால் ஞானமென்பதோ சேர்த்துவைத்திருப் பதை செலவழிப்பதில் விளங்கும். ஞானமென்பது திறமை சாமர்த்தி யம் என்றும் அருத்தப்படும். அதாவது நாம் அறிந்துகொண்ட அறிவை நன்மையான வழியில் உபயோகிப்பதில் காணப்படும். இயேசு வானவர் தம்முடைய சீஷர்களைச் சாட்சி சொல்லும்படி அனுப்பின போது புறாக்களைப்போல் கபடற்றவர்களாயும் பாம்பைப்போல் வினா வுள்ளவர்களாயும் இருக்கவேண்டும் என்றார். அதோடுகூட முத்துக் களைப் பன்றிகளின் முன் போடக்கூடாது என்றும் சொன்னார். இந்த இரண்டு வசனங்களையும் கவனிக்கும்போது ஒரு விசேஷித்த சத்தி யத்தை அறிந்துகொள்ளுகிறோம். நம்முடைய சொந்த ஜீவியத்தில் கபடற்ற உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆனால் மற்றவர் களிடம் புளங்குவதிலும் அவர்களுடன் பேசுவதிலும் வினாவுள்ளவர் களாயிருக்கவேண்டும். நாம் எதைச் சொல்லவேண்டும் என்றும் எப்படிச் சொல்லவேண்டும் என்றும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் அதோடு முத்துக்களைப் போலொத்த தேவ வசனங்களை எப்படி உபயோகிக்கக்கூடாதென்றும், எப்படி உபயோகிக்கவேண்டுமென் றும் அறிந்துகோள்ளவேண்டும். இதிலேதான் ஞானம் விசேஷ மாய்க் காணப்படும்.

உலகத்தின் மக்கள் தேவனுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும் அதிக ஞானிகளாக இருக்கிறார்கள் என்று கிறிஸ்து தாமே சொல்லியிருக்கிறார். இந்த உலகப்பொருளைச் சேர்ப்பதிலும் உபயோகிப்பதிலும் இவ்வுலகத்திலுள்ளோர் அதிக ஞானிகள் என்று கூறப்படும் வார்த்தை நாம் கவனிக்கத்தக்கது. ஒரு வியாபாரி தன் ஜாமான்களை அடுக்கி வைப்பதிலும், தன்னிடம் வரும் ஆட்களுக்கு அதைப் பற்றி எடுத்துக் காட்டுவதிலும் எவ்வளவு ஜாக்கிறதை உள்ளவனாயிருக்கிறான். அதோடுகூட எந்தெந்தக் காலத்தில் என்னென்ன பொருட்களைக் கொண்டுவந்து வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் அறிந்துகொள்ளுகிறான். அப்படியானால் கிறிஸ்துவுக்காக சாட்சிகளாக இருக்கும் ஒளியின் பிள்ளைகள் எவ்வளவோ ஞானமுள்ளவர்களாக இருக்கவேண்டும். என்ன விஷயத்தைக் குறித்து சாட்சிகொடுக்க வேண்டுமென்று தெளிந்த அறிவுள்ளவர்களாயிருக்கவேண்டும். நாம் சொல்லும் சாட்சியும் என்ன என்பதைத் திட்டவட்டமாய் அறிந்திருக்கவேண்டும். அதே மாதிரி நாம் யாரிடம் சாட்சி சொல்லுகிறோமோ அந்த ஆளைப்பற்றியும் அறிவுடையவர்களாயிருக்கவேண்டும். அந்த ஆளின் தேவை யென்னவென்றும், உணர்ந்து அதற்குத்தக்கபடி சாட்சியுமிருக்கவேண்டும். அதோடு காலத்தை ஆதாயம்பண்ண வேண்டும். சாட்சிகொடுக்கும்படியாக ஆவியானவர் நம்மை ஏவும் போது நாம் உடனே கீழ்ப்படிந்து சாட்சிகூறவேண்டும். ஒரு விசேஷித்த பிரசங்கியார் சொல்வதாவது "நான் என்னுடைய சாப்பாட்டு விடுதியில் குடியிருந்தேன். அதே இடத்தில வேறொருவர் குடியிருந்தார். நான் என் தோட்டத்தில் வேலைசெய்வதுண்டு. அவர் தன்னுடைய படகுக்கு சாயம் பூசிக்கொண்டிருந்தார். நாங்கள் இருவரும் அறிமுகமானோம். ஒரு நாள் அவருடைய வேலை முடிவாயிற்று. நான் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது அவர் தம்முடைய படகைப்பார்த்துக்கொண்டு நின்றார். அந்தச் சமயத்தில் கர்த்தருடைய ஆவியானவர் என் உள்ளத்தில் அந்த மனிதனிடம் பேசி

சாட்சிகொடு என்று ஏவினர். நானே 'இப்போது மதியநேரமா யிற்று ; இனிப்பார்த்துக்கொள்ளுகிறேன்' என்று சொல்லிப்போய் விட்டேன். அடுத்த நாள் மேற்சொன்னவரும் அவருடைய சகோதர ரும் அந்தப் படகில் ஏறி ஒரு ஆற்றில் பிரயாணம் செய்தார்கள். திடீ ரென்று படகு சாய்ந்து தண்ணீரில் மூழ்கிற்று. அந்த மனிதனும் மூழ்கிப்போனன். இவ்விதம் எனக்குக் கிடைத்த நல்ல சமயத்தை இழந்துபோனேன்" என்பதே.

மிஸ் ஹவர்கள் (Miss Havergal) என்ற பக்தியுள்ள அம் மாள் தாங்கள் இழந்துபோன ஒரு சமயத்தைப்பற்றிச் சொல்லுவதா வது. ஒரு நாள் முகமலர்ச்சியுள்ள ஒரு பெண் என்னிடத்தில் வந்து "அம்மா நான் உங்களாளாக இருந்திருக்கவேண்டும்" என்ருள். அப்போது நான் "நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே, என்ன காரியம்" என்றேன். அதற்கவள் "நான் கிறிஸ்துவைக் கண்டடைய வேண்டுமென்று தேடிய காலத்தில் நீங்கள் அவரைப்பற்றி ஏதாவது சொல்வீர்கள் என்று உங்களண்டை அநேகம் சடவை வந்தேன் நீங் களோ ஒன்றும் சொல்லவில்லை. ஆனல் இன்னொரு அம்மாள் என் னோடே பேசி என்னை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொண் டார்கள்" என்ருள். இந்த சம்பவத்தை ஒரு நாளும் அந்த அம் மாள் மறந்ததேயில்லை. நாம் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதில் ஞானமுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம் பண் ணுகிறவன் ஞானமுள்ளவன். நீதி. 11 : 30.

ஆறும் அதிகாரம்.

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

5. அன்பு.

Love.

1 கொரி. 13-ம் அதிகாரம்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு."

கிறிஸ்துமார்க்கமானது அன்பின் மார்க்கம். பிதா அன்பினல் குமாரனை அனுப்பினர். கிறிஸ்து அன்பினல் தமது ஜீவனைக் கொடுத்தார். இந்த சத்தியத்திற்காக சாட்சி கொடுக்கும் ஒரு ஆள் சித்தியுள்ள சாட்சியாக இருக்கவேண்டுமானல் அன்புடையவராயிருக்க வேண்டும். இந்த அன்பு முதலாவது மற்றவர்களின் இரட்சிப்புக்காக பாடுபடும்படி ஏவும். இயேசுகிறிஸ்துவுக்கு புறம்பே இருக்கிறவர்களின் பரிதாபமான நிலைமையை யறிந்து அவர்களுக்காக உழைக்க ஏவப்படுவோம். லூக். 19 : 10. "மனுஷகுமாரன் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார்". கிறிஸ்துவுக்கு புறம்பான யாவரும் இழந்துபோகும் நிலைமையிலிருக்கிறார்கள். நம்மைச்சுற்றியிருக்கிற ஆயிரக்கணக்கான பேர் அவரை விசுவாசிக்கிறதில்லை. நாம் அவர்களை நம்மைப்போல் நேசிப்போமானல் அவர்களுக்கு நம்முடைய சாட்சியைக் கூறியிருப்போம். அப்படிக் கூறுதிருப்போமானல் நாம் கொடியவரென்றும், குரூர நெஞ்சர்களென்றும் அழைக்கப்படுவோம். ஒரு நாள் ஒரு நாஸ்திகன் ஒரு கிறிஸ்தவனைப் பார்த்துச் சொன்னதாவது "ஐயா உமக்கு உமது மார்க்கத்தின்பேரில் நம்பிக்கையில்லை என்று அறிவேன்" என்றான். அதற்கு "என் அப்படிச் சொல்லுகிறீர்கள்" என்று அந்தக் கிறிஸ்தவன் கேட்டான். நாஸ்திகன் சொன்னதாவது "நான் என்னுடைய வியாபார

ள் தலத்திற்குப்போகும் பாதையில் நீங்கள் அநேக வருஷமாக என்னைக் கடந்து போயிருக்கிறீர்கள், ஒரு நரகம் உண்டென்றும் அதில் குணப்படாதவர்களின் ஆவிகள் வாதிக்கப்படுமென்றும் நம்பு கிறீர்கள் அல்லவா?" என்றான். கிறிஸ்தவன் "அப்படியே நம்பு கிறேன்" என்றான். நாஸ்திகன் திரும்பவும் அவனைப் பார்த்து "நான் கிறிஸ்துவை விசுவாசிக்காவிட்டால் அதில் போடப்படுவே னென்றும் நம்புகிறீர்களல்லவா?" என்றான். அதற்கு கிறிஸ்தவன் "ஆம்" என்றான். அப்போது நாஸ்திகன் அவனை ஆத்திரமாய்ப் பார்த்து "நீ விசுவாசிக்கிறதில்லையென்று எனக்குத் திட்டமாய்த் தெரியும்; ஏனெனில் நீர் அப்படி விசுவாசித்திருந்திருப்பீரானால் தினசரி சந்திக்கும் என்னிடத்தில் அதைப்பற்றி சொல்லாமலும் அதைக் குறித்து எச்சரிக்காமலுமிருந்த பெருங்கல் நெஞ்சனாயிருப் பீர் என்றான்." இதில் சொல்லப்பட்டிருக்கும் காரியம் வாஸ்தவமே. அன்பிருக்குமானால் "அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாள்." என்றபடி தான் அடைந்த சத்தியத்தைக் குறித்து மற்றோருக்குச் சாட்சி சொல்லாமல் இருக்கமுடியாது. ஆகையால் கிறிஸ்துவுக்குப் புறம்பேயிருக்கிறவர்களின் பரிதாபமான நிலைமையை அறிந்து அவர் களுக்கு உதவிசெய்ய அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.

நாம் மனிதர்கள்மேல் அன்புள்ளவர்களாக இருப்பது மாத் திரமல்ல கிறிஸ்துவின் பேரிலும் பூரண அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும். இங்குமங்கும் ஓடி சமயம் கிடைத்தாலும் கிடைக்காவிட் டாலும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகொடுக்கும்படி பவுல் அப்போஸ்த லனை நெருக்கி ஏவியது கிறிஸ்துவின் அன்பே. கிறிஸ்துவுக்குச் சாட்சி யாக தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் நானா தேசங்களுக்கும் சென்று சாட்சி பகிர்ந்தவர்களை ஏவியதும் அந்த அன்பே. இந்த அன்பு மிகவும் அவசியம்.

இந்த அன்பை எவ்விதம் பெற்றுக்கொள்ளலாம்? ஒரு வகை என்னவெனில், கிறிஸ்து நமக்குக் காட்டிய அன்பை நாம் தியானிப்பதே. நாம் எதைத்தியானிக்கிறோமோ அதைப்போல் ஆவோம். கிறிஸ்துவின் அன்பை தியானிக்கத்தியானிக்க அந்த அன்பால் கவர்ந்துகொள்ளப்படுவோம். 1 யோவா. 4: 19. "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்." நம்முடைய பாவத்தின் அகோரத்தன்மையையும் நம்முடைய அபாத்திரத்தன்மையையும் உணரும்போதுதான் கிறிஸ்துவின் அன்பின் மகத்துவத்தை அறிந்துகொள்ளுவோம். எவனுக்கதிகம் மன்னிக்கப்பட்டதோ அவனே அதிகம் அன்புகூருவான். லூக். 7: 47. தன் பாவத்தை உணராமல் இந்த அன்பை அறிந்துகொள்ள முடியாது. பவுல் அப்போஸ்தலன் தம்மைப் பிரதான பாவி என்று அறிக்கையிட்டார். கிறிஸ்துவில் அன்பு கூர்ந்தார். 1 தீமோ. 1: 15; கலா. 1: 20 பார்க்க.

கிறிஸ்துவுக்கும் மனிதனுக்கும் நாம் காட்டவேண்டிய அன்பை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் பரிசுத்த ஆவியானவரே அதைத் தரவேண்டும். ஏனெனில் அன்பே ஆவியின் முதற்கனி, கலா. 5: 20 நாம் ஆவியானவரை நோக்கி நம்மை நிரப்பும்படி கேட்டுக்கொள்ளுவோமானால் அவர் நமது இருதயத்தை அன்பால் நிரப்புவார்.

நாம் சாட்சி சொல்லுவதற்கு நம்மைத் தூண்ட அன்பு அவசியமாய் இருப்பதோடு சாட்சி சொல்லுகிற விதத்திலும் அன்பு வேண்டும். நாம் அன்போடு சாட்சி சொல்லவேண்டும், நாம் யாரிடம் சாட்சி சொல்லவேண்டுமோ அவர்களிடம் அன்பாய்ப் பேசி பொறுமையுடன் இருந்து சாட்சி கூறவேண்டும். அன்பற்ற வார்த்தை, பலனற்ற வார்த்தை. மெதுவாக ஓடும் தண்ணீர் பலனையுண்டாக்கும், அது ஊடுருவப்பாயும். அப்படியே அன்போடுகூறிய சாட்சி அதிகப் பலனைத்தரும். அன்பே பிரதானம்.

ஏழாம் அதிகாரம்.

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

6. வேத அறிவு.

Witness and His Bible.

மத். 4: 1-11; எபே. 6: 10-20; 2 தீமோ. 3: 14-17.

சங். 119: 130 "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்." மேற்சொன்ன வசனம் வேத புஸ்தகத்தின் ஒரு அருமையான செயலைக் குறிப்பிடுகிறது. பேதையாய் இருக்கப்பட்டவர்களையும் ஞானிகளாகச் செய்கிறது இன்னொருவிதமாய்ச் சொன்னால் பேதைகளை ஞானிகளாக்க வேண்டுமென்றால் நாம் உபயோகிக்கக்கூடிய கருவி வேத புத்தகம். வேதம் என்ற பதத்திற்கு அறிவு என்று அர்த்தம். இந்தப் புஸ்தகமானது கடவுளைப் பற்றிய அறிவை நமக்குப் புகட்டுகிறது. இயற்கையின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்தின கடவுள் தமக்கென்று விசேஷித்த மனிதர்களைத் தெரிந்துகொண்டு அவர்களை ஆட்கொண்டு அவர்கள் மூலமாய்த் தமது சித்தத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் காலாகாலங்களில் அப்படிப்பட்ட வெளிப்படுத்துதலை எழுதிவைத்தனர். அதன்பின் தம்முடைய திருக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பி அவர் மூலமாகத் தமது திருச்சித்தத்தை வெளிப்படுத்தி, பாவிகள் ஈடேற இரட்சிப்பின் மார்க்கத்தையும் உண்டாக்கினர். அவருடைய திருச்சரித்திரம் இந்நூலில் அடங்கும். அவர் பேரால் உண்டான சபைகளின் சரிதைகளும், அச்சபைகள் எப்படி நடக்கவேண்டியதென்ற போதனைகளும் இந்நூலில் அடங்கும், ஆகையால் கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்துவைப்பற்றியும் சாட்சி கொடுக்கும் ஒருவன் வேதத்தை அறிந்து அதை ஏற்றபடி உபயோகிக்கக் கற்றிருக்கவேண்டும்.

வேத புத்தகத்திற்கு பைபிள் (Bible) என்ற ஆங்கில பதத்தை உபயோகிக்கிறோம். இந்தப் பதம் 'புஸ்தகங்கள்' என்று அர்த்தங் கொள்ளும். ஒரு கிரேக்க வார்த்தையினின்று வந்திருக்கிறது. ஆகவே நமது சத்தியவேதம் பழைய புதிய ஏற்பாடுகள் என்ற இருபிரிவுக்குள் சிறிதும் பெரிதுமான அறுபத்தாறு புஸ்தகங்களை அடக்கியதாய் இருக்கிறது. இதில் ஏறக்குறைய நாற்பது ஆசிரியர்கள் பதினறு நூற்றுண்டுக்குள் எழுதிய விஷயங்கள் அடங்கும். இதன் பொருளைக் கவனித்தால் சரித்திரமும், செய்யுளும், சட்டங்களும், ஜீவிய சரித்திரங்களும், தீர்க்கதரிசனங்களும், இன்னும் பல விஷயங்களுமுண்டெனப்பார்ப்போம். இப்படி பல காலத்தில் பல பேரால் பல விஷயங்களைப்பற்றி எழுதிய பல புஸ்தகங்களாயினும் அவைகளின் நோக்கமெல்லாம் ஒன்றே. கடவுளுடைய சித்தத்தை மனிதருக்குக் காட்டி இயேசுகிறிஸ்துவால் உண்டாயிருக்கும் இரட்சிப்பை உலகத்தாருக்குக் கொடுப்பதே.

பஞ்சாகமத்தில் கடவுள் தமக்கென்று ஒரு குடும்பத்தைத் தெரிந்துகொண்டு அதை விருத்திபண்ணி அதற்குச் சட்டதிட்டங்களைக் கொடுத்து தமது சித்தத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார்.

சரித்திராகமத்தில் தாம் தெரிந்துகொண்ட ஜாதி தம்மைவிட்டு விலகும்போது அவர்களைத் தண்டித்தும், தம்மிடத்தில் திரும்பிவரும்போது ஏற்றுக்கொண்டு அரவணைத்தும் இவ்விதமாய் அவர்களை உன்னத ஜீவியத்தில் விருத்தியடையவும் செய்கிறார்.

சங்கீத ஆகமங்களில் கடவுள் ஆட்கொண்ட பக்தர்களின் அனுபவங்களைப் பார்க்கிறோம். வருத்தத்தில் கர்த்தலை நோக்கி மன்றாடுகிறார்கள்; சந்தோஷத்தில் ஆனந்த பரவசமடைகிறார்கள். துக்கத்தில் மன்றாடுகிறார்கள், களிப்பில் சங்கீதம் பாடுகிறார்கள், சோதனை

யில் பெலனைத்தேடுகிறார்கள். ஜெயத்தில் துத்தியம் கூறுகிறார்கள். இவ்வண்ணமாய் கடவுளின் பிரசன்னத்தை மனுஷர் அனுபவிக்கும் அனுபவத்தையும் பார்க்கிறோம்.

தீர்க்கதரிசன ஆகமங்களில் கடவுள் தாம் தெரிந்துகொண்ட ஜனத்தை ஆவிக்குரிய விஷயத்தில் நடத்தும்படியாக விசேஷித்த பக்தர்களை ஆட்கொண்டு அவர்களின் மூலமாய் ஜனங்களை எச்சரிக்கிறார். பாவம் செய்வோருக்குத் தண்டனையைக் கூறுகிறார். மனந்திரும்புகிறவர்களுக்கோ மன்னிப்பருள்கிறார். சோர்ந்துபோகிறவர்களுக்கு வரப்போகும் மேசியாவை எடுத்துக்காட்டுகிறார். இவ்விதமாக மேசியாவுக்கு வழியை பழைய ஏற்பாட்டில் ஆயத்தம் பண்ணுகிறார்.

புதிய ஏற்பாட்டை நாம் திறக்கும்போது எதிர்பார்க்கப்பட்ட மேசியாவின் மேன்மையான படத்தைப் பார்க்கிறோம். அந்தந்த ஆட்களுக்கு ஏற்றதாக வரையப்பட்டிருக்கிறது. கிறிஸ்து யூதமார்க்க நிறைவேற்றமாகக் காட்டப்படுகிறார். அவர் ராஜரீகமும் மனுஷீகமும் பொருந்திய ஆளாக ஒரு படம் காட்டுகிறது. இன்னொரு படத்திலோ அவர் தேவகுமாரனாகவும் உலகத்தின் கர்த்தாவாகவும் காட்டப்படுகிறார். தைரியமும், மேன்மையும் வல்லமையுமுடைய புருஷனின் படத்தைப் பார்க்கிறோம். இன்னொரு படத்திலோ சிறந்த வைத்தியனாகவும் வரையப்பட்டிருக்கிறார். அவர் உலகத்திற்காக தம்மைத் தாமே பலி செலுத்திய தியாக புருஷனாகவும், உலகத்தாருக்காக மன்றாடும் பிரதான ஆசாரியனாகவும வரையப்பட்டிருக்கிறார். இவ்விதமாக முதல் நான்கு சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தைப் பார்க்கிறோம்.

அப்போஸ்தலர் நடபடியிலோ அவரால் ஸ்தாபிசகப்பட்ட சபையின் சரித்திரத்தைப் பார்க்கிறோம். அதன் வெற்றியையும் அதன் விசாலிப்பையும் இதில் காண்போம்.

நிருபங்களில் அந்தந்த சபைகளுக்குவேண்டிய ஆசீர்வாதங்களையும் அந்த சபைகள் கையாடவேண்டிய முறைகளையும் அப்போஸ்தலர் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கிறோம். கடைசியான புஸ்தகத்தில் சபைக்குவரும் வெற்றி கூறப்பட்டிருக்கிறது.

இவைகளை ஒருவன் வாசித்து தன் சொந்த அனுபவத்தோடு ஒப்பிட்டு கிறிஸ்துவின் ஆளுகைக்குப் புறம்பே இருப்பவனுக்கு அவரால் வரும் இரட்சிப்பை சாட்சியாக எடுத்துக் கூறுவானாகில் எவ்வளவு மேன்மையாக இருக்கும்.

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் பாவிகளை நீதிமான்களாக்குகிறதுமாயிருக்கிறதென்று அந்த பக்தன் சொன்னதுபோல இப்போதும் அதைப்போலும், அதைப்பார்க்கிலும் ஆயிரக்கணக்காய்ச் சொல்லத்தக்கவர்களாயிருக்கிறோம். ஏனெனில் கிறிஸ்துவைப்பற்றி இந்த வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம்.

சாட்சி சொல்லுகிறவன் விதை விதைக்கிறவனாயிருக்கிறான். அந்த விதை வேத வசனமே, லூக். 8 : 11 ; 1 பேது. 1 : 23-ல் நாம் அழிந்துபோகிற வித்தினால் ஜெனிப்பிக்கப்படாமல் அழியாததும் எப்போதும் நிலைத்திருக்கிறதுமான தேவனுடைய வார்த்தையால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோமென்று வாசிக்கிறோம்.

ஆகவே சித்தியுள்ள சாட்சி சொல்லவேண்டுமானால் உத்தம சாட்சி வேத அறிவுடையவனாயிருக்கவேண்டும். ஆயினும் வெறும் அறிவுமாத்திரம் போதாது அந்தப் புஸ்தகத்தை ஆட்களின் தேவைக்குத்தக்கதாக உபயோகிக்கக் கற்றிருக்கவேண்டும். ஒரு மனிதனிடத்தில் அநேக ஆயுதங்கள் இருக்கலாம் ; ஆயினும் அவன் அதை உபயோகிக்கத் தெரியாதவனாயிருந்தால் அந்த ஆயுதங்களின் பெருக்கத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை. அவ்வண்ணமே ஒருவன் அநேக வசனங்களைக் கற்றிருந்தும் ஆட்களின் தேவைக்குத் தக்கபடி உபயோகிக்கத்

தெரியாமல் இருந்தால் அதனுல் பிரயோஜனமில்லை. பின்கண்ட நாலு விஷயங்களைப்பற்றி வேதம் என்னத்தைப் போதிக்கிறதென்று அறிந்திருக்கவேண்டும். (1) நிர்விசாரமாய்த் திரிகிற ஒருவன் தனக்கு இரட்சகர் அவசியமென்று உணர்ந்துகொள்ளும்படி வேத வாக்கியத்தை உபயோகிக்கக் கற்றிருக்கவேண்டும். (2) இரட்சகர் தேவை என்று உணர்ந்த ஒருவனுக்கு அந்த ஆசையை திருப்தி செய்யக்கூடியவர் இயேசுகிறிஸ்துவே என்று வேத வாக்கியத்தி லிருந்து காட்டக் கற்றிருக்கவேண்டும் (3) இயேசுகிறிஸ்துவை, தங் கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வது எப்படி என்று வேதத்திலிருந்து காட்டவேண்டும். (4) இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளாதபடி உண்டாகும் தடைகளை வேதத்தைக்கொண்டு நிரா கரிக்கத் தெரியவேண்டும்.

இவ்விதமாக சித்தியுள்ள சாட்சி வேதத்தை நன்ருய்க் கற்று அதை உபயோகிக்கும் பயிற்சியுள்ளவராய் இருக்கவேண்டும். சத் திய வேதம் இன்றைக்கும் அருமையுள்ளதே. அது எழுநூறுக்கதிக மான பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 1929 ம் வருஷத் தில்மாத்திரம் பல வேதாகம சங்கத்தின் மூலமாக இரண்டு கோடியே அறுபது லக்ஷத்திற்கதிகமான முழு வேதாகமங்களும், வேத பங்கு களும் விற்கப்பட்டன. அதாவது ஒருமணி நேரத்திற்கு ஆயிரத்து முந்நூறு புஸ்தகம் வீதம் விலையாகியிருக்கிறது. எங்கே வேதத்துக்கு விரோதமாக எதிர்ப்பு இருக்கிறதோ அங்கே வேத புஸ்தகமும் அதி கமாக விலையாகியிருக்கிறது.

ஆகவே ஒவ்வொரு சாட்சியும் வேதத்தைப் படித்து அதைத் தியானித்து அதை உபயோகிக்கக் கற்றிருக்கவேண்டும்.

எட்டாம் அதிகாரம்.

உத்தம சாட்சியின் இலக்ஷணம்.

7. ஜெபப்பழக்கம்.

Prayer Habit.

மத். 6 : 5-15 ; *லூக்.* 11 : 1-13 ; 18 : 1-8 ; 1 *தெசலோ.* 5 : 16-28 ; 1 *தீமோ.* 2 : 1-8 ; *யாக்.* 1 : 1-7, 5 : 13-20.

அப். 4 : 31-" *அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடி இருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவ வசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள்."* சாட்சி சொல்லும் ஒருவனுக்கு ஜெபம் மிகவும் அவசியமானது ஏனெனில், ஜெபமே ஜெயம். இயேசுவானவர் சீஷர்களைப் பார்த்து "*நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்*" என்றார், அப்படிச் சொன்னவரே "*காத்திருங்கள்*" என்றும் கட்டளையிட்டார், லூக். 24 : 48-49 இந்தக் கட்டளையைக் கேட்ட அவருடைய சாட்சிகளாகிய அப்போஸ்தலர்களும் சீஷரும் எருசலேமில் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். இதனுடைய பலன் நமக்கு என்னவென்று தெரியும். பலத்த சாட்சி சொல்லக் கூடியவர்களானார்கள். தேவனுடைய வசனம் வெகு துரிதமாய்ப் பரவினது. இந்தக்காலத்திலும் ஜெபம் அவசியம்.

ஜெபமானது கடவுளையும் மனுஷனையும் இணைக்கிறது. நமக்கு வேண்டிய தேவையான காரியங்களைக் கேட்பது மாத்திரம் ஜெபமாகாது, தேவன் நமக்குச் சொல்வதும் அதிலடங்கும். ஜெபத்தில் காத்திருப்பது என்றால் கடவுள் நமக்கு என்ன சொல்லப்போகிறார் என்று ஆவலோடு அவர் சமுகத்தில் காத்துக்கொண்டிருப்பதாம். அதோடு ஜெபம் குறிக்கப்பட்ட சில நேரங்களில் ஏறெடுக்கும் மன்றாட்டுகளை மாத்திரம் குறிப்பதில்லை. நம்முடைய ஜீவியமே ஜெப

நிலமையில் இருக்கவேண்டும். ஆண்டவர் நம்மோடு பேசுவதை கேட்கத்தக்கதாக நம்முடைய ஆவிக்குரிய புலன்கள் ஏற்ற நிலமையில் இருக்கவேண்டும். நாமும் எந்நேரமும் அவரிடத்தில் நமக்குத் தேவையானதை தெரிவித்துக்கொண்டிருக்கவேண்டும். அவரிடத்தில் எந்நேரமும் ஆலோசனை கேட்கத்தக்கதான மனதுடையவர்களாயிருக்க வேண்டும்.

அதே சமயத்தில் நாம் திட்டமான சில நோக்கத்தைக் குறித்து நமது ஆண்டவரின் சமுகத்தில் ஜெபிக்கிறவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய ஜெபம் ஏனோதானோவென்றிராமல் திட்டவட்டமாயிருக்கவேண்டும். நாம் சாட்சி சொல்லுவதில் நமக்கு பலவித கஷ்டங்கள் வரலாம், எப்படிச் சொல்வதென்று அறியாமலிருக்கலாம். இவைகளை நாம் ஆண்டவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஒரு சாட்சி விசேஷமாய் ஜெபிக்கவேண்டிய நாலு காரியங்கள் உண்டு.

(1) நாம் சரியான ஆளிடத்தில் சாட்சி சொலத்தக்கதாக ஏற்ற ஆளை நம்மிடம் கொண்டுவரும்படி அல்லது அப்படிப்பட்ட ஆளிடம் நம்மை நடத்தும்படி நாம் ஜெபிக்கவேண்டும். பிலிப்புவுக்கு இரதத்தோடு சேர்ந்துகொள்ளும்படி ஏவின கர்த்தர் நமக்கு ஒரு ஆளைக் காட்டுவார். (அப்போ. 8: 29)

(2) நாம் என்ன செய்தியைச் சொல்ல வேண்டுமென்று ஆண்டவர் நமக்குக் காட்டும்படி ஜெபிக்கவேண்டும். நாம் அநேக காரியங்களைக் கற்றிருக்கலாம். ஆயினும் நம்மோடு பேச வந்திருக்கும் ஆளுக்கு எதைச் சொல்ல வேண்டுமென்று அறியாமலிருக்கலாம். இப்படிப்பட்ட சமயத்தில் பரிசுத்த ஆவியானவர்தான் நமக்கு வழிகாட்ட வேண்டும், அவர்தான் எந்த வசனத்தை நாம் எடுத்துக்காட்ட வேண்டுமென்று போதிப்பார். சில சமயங்களில் நாம் நினைத்திராத ஒரு வசனம் நமது மனதிற்கு வரலாம்; அந்த வச

னம் நாம் பேசிக்கொண்டிருக்கும் பொருளுக்கு எற்றதாயிருக்கலாம் இந்த வசனத்தை நமக்குக் கொடுத்தது ஆண்டவர்தான். இந்த உதவிக்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

(3) நாம் சொல்லும் செய்தியை வல்லமையோடு சொல்லத்தக்கதாக நமக்கு உன்னத பெலனைக் கொடுக்கும்படி ஜெபிக்கவேண்டும். வசனங்களை அறிந்திருக்கலாம், அதைப்பற்றி சாட்சியும் கூறலாம். ஆயினும் வல்லமையோடு கிரியை நடப்பிக்காமலிருக்கலாம். இதற்குக்காரணம் சாட்சி தன் சொந்த பெலத்தினால் சித்திபெற முயற்சிப்பதே. ஆவியின் வல்லமையே அனுகூலமடையச் செய்யும். இதற்காக நாம் ஜெபிககவேண்டும்.

(4) ஒருவன் சாட்சி கொடுத்தபின் ஆண்டவர் அந்தச் சாட்சி சித்திபெறும்படியாக ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்க வேண்டும். அவர்தாம் நாம் ஆரம்பித்த வேலையைக் கொண்டு நடத்துகிறவர்.

இவ்விதமாக உத்தம சாட்சிக்கிருக்கவேண்டிய இலக்ஷணங்களிலொன்று ஜெப ஜீவியம். தற்காலத்தில் அதிக அலுவல்களினால் ஜெபத்திற்கு சரியான நேரம் கொடுக்கிறதில்லை. இது எதுபோலிருக்கிறதென்றால் ஒரு விறகுவெட்டி வேலையை ஆரம்பிக்கிறதற்குமுன் தன் கோடாரி சரியாயிருக்கிறதா என்றும் அதன் ஆப்புக்கள் பலமாயிருக்கிறதா என்றும் கவனியாமல் வேலைசெய்ய ஆரம்பிப்பது போலிருக்கிறது. இரண்டொரு வெட்டு வெட்டியவுடன் ஆப்பு கீழே விழுகிறது, கோடாரி காம்பினின்று கழன்று தூரப் போய்விடுகிறது, மரம்வெட்டியோ வெறும் கம்பை மாத்திரம் கையில் வைத்துக்கொண்டு பிரயோஜனமற்றவனாய் நிற்கப் பார்க்கலாம். அப்படியே கிறிஸ்துவுக்கென்று சாட்சிசொல்லும் சாட்சிகள் ஜெபம் செய்து தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளாமல் வல்லமையை இழந்து பிரயோஜனமற்றவர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஜெபம்செய்கிறவர்களோ கர்த்தருக்குக் காத்திருந்து புதுப் பெலன் அடைந்து அதிசயமான காரியங்களைச் செய்வார்கள் " ஜெபமே ஜெயம்."

ஒன்பதாம் அதிகாரம்.

உத்தம சாட்சியும் பரிசுத்தாவியும்.
A Model Witness and the Holy Spirit.

லூக். 24: 44-49; யோவா. 16: 7-14; அப். 1: 1-8,
2: 1-4, 34-42, 4: 31, 5: 32.

அப். 1: 8—"பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து ....எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."

அப்போஸ்தலர் நடபடியை நாம் வாசிக்கும்போது சாட்சிகளின் சரிதையை வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களும் சாதாரண கிறிஸ்தவர்களும் நாடு நகரங்கள் சுற்றி சாட்சிசொன்ன விபரம் சவிஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களடைந்த வெற்றியும் சாட்சியின் பலனாக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதும், அவர்களுக்குண்டான வருத்தத்திலே அவர்கள் வீரர்களாய் விளங்கியதும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. பயங்காளிகளான ஜனங்கள் பராக்கிரமமான காரியங்களைச் செய்ததற்குக் காரணமென்ன? நாம் வசனத்தில் பார்க்கிறபடி பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றதே வல்லமை அல்லது பெலன் என்ற வார்த்தையின் மூலக்கருத்தை ஆராய்ச்சி செய்தால் பாறைகளை உடைக்கும் வெடிமருந்தின் வல்லமையைக் காட்டும். அதாவது வெடிமருந்தின் உதவியைக்கொண்டு எந்தப் பாறையையும் உடைத்துச் சின்னபின்னமாக்குவதுபோல் ஆவியானவரின் ஒத்தாசையைக்கொண்டு ஆவிக்குரிய விஷயத்தில் வரும் கஷ்டங்களை மேற்கொள்ளவும், பெரிய காரியங்களைச் செய்யவும் கூடியவர்களாயிருக்கிறோம். ஆகையால் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஒவ்வொரு மெய்யான சாட்சிக்கும் அத்தியந்த அவசியம்.

அதுமாத்திரமல்ல பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஒரு துணைச் சாட்சி. ஏனெனில் நாம் என்ன விஷயத்திற்குச் சாட்சிகொடுக்கி

ருேமோ, அவ்விஷயத்தைப்பற்றி அவரும் சாட்சிகொடுக்கிருர். அப். 5: 32. ஆனபடியால் நாம் அவருடைய உதவியைத் தேடுவது நமதுமேல் விழுந்த கடமையாகும்.

அதோடுகூட ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் என்றும், வரப்போகிற காரியங்களை அறிவிப்பார் என்றும் ஆண்டவர் தாமே சொல்லியிருக்கிருர். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஒரு உபாத்தியாராகவிருந்து நாம் பேசவேண்டிய காரியங்கள் இன்னதென்று நமக்குக் கற்பிப்பார். அப்பொழுது நாம் ஏற்ற சாட்சி சொல்லக்கூடியவர்களாயிருப்போம். இவ்விஷயத்தில் கவனிக்கவேண்டியது என்னவென்ருல் அவர் சொல்லும்போது நாம் கீழ்ப்படியவேண்டும், ஒரு ஆளைக் காட்டி அவருடன் பேசவேண்டுமென்று நமக்கு ஆலோசனை கூறுபபோது நாம் உடனே அந்த ஆளிடம் பேசவேண்டும். அப்படிச்செய்யாதிருப்போமாஞல் நாம் ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். அவருடைய சத்தத்தைக் கேட்கும் பக்குவமுடையவர்களாயிருக்கவேண்டும்.

இப்படி உதவிபெற்றுக்கொள்ளுவது நமதுமேல் விழுந்த உத்தரவாதமாகும். நாம் எவ்விதமாக இதைப் பெற்றுக்கொள்ளலாம்?

(1) அப். 8: 14-17. பரிசுத்தாவியானவர் உண்டென்றும் அவர் அருளப்படுவார் என்றும் அறியவேண்டும். அநேகர் ஆவியானவரைப்பற்றியும், ஆவியானவர் அருளும் வல்லமையைப்பற்றியும் அறியாமலிருக்கிருர்கள். சாட்சிசொல்லுகிறவர்கள் தங்களுக்கிருக்கிற பெரிய உதவியைப்பற்றி அறிந்திருக்கவேண்டும்.

(2) ஏசா. 41: 3, 55: 1; யோவா. 7: 37-39 இந்த ஆவியின் அருளைப்பெற்றுக்கொள்ள ஆசை காட்டவேண்டும். இந்த மூன்று வசனங்களிலும் 'தாகம்' என்ற வார்த்தை வருகிறது. தாகம் மனுஷனுக்கு இயற்கையான ஒரு காரியம், இதன் மூலமாக நமது

சரீரத்திற்கு அவசியமான உதவியைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அவ்வண்ணமே ஆவியின் நிறைவை நாம் ஆசிப்பதால் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

(3) அப். 5 : 32. தேவனுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு பரிசுத்தாவியானவர் அருளப்படுவாரென்று கூறப்படுகிறது. நமது பாவத்தைவிட்டு நம்முடைய சித்தத்தின்படி செய்வதை அகற்றி பூராவாக கடவுளுக்கு நம்மைத் தத்தஞ்செய்யவேண்டும்.

(4) லூக். 11 : 13; அப். 4 : 31. பொல்லாதவர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களிடத்தில் கேட்கும்போது அவர்களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கிறார்கள். அதுபோலவே பரமபிதாவும் தம்மிடத்தில் ஜெபிக்கிறவர்களுக்கு பரிசுத்தாவியானவரைக் கொடுப்பார் என்று எழுதியிருக்கிறது. இயேசுவானவர் ஜெபித்துக்கொண்டிருந்தபோது ஆவியானவரால் நிரப்பப்பட்டார். சீஷர்கள் ஜெபித்தபோது மேல் வீட்டில் ஆவியால் நிரப்பப்பட்டார்கள்; சீஷர்கள் ஜெபித்தபோது அவர்கள் இருந்த அறை அசைந்தது. ஆவியானவரால் நிரப்பப்பட்டு தைரியமாய் சாட்சிகொடுத்தார்கள். ஆகவே ஜெபம் ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள ஒரு வழியாகிறது. இதை நாம் உபயோகிப்போமாக.

(5) மாற். 11 : 24. நாம் ஒரு விஷயத்திற்காக கேட்கும்போது எதற்காகக் கேட்கிறோமோ அதைப் பெற்றுக்கொண்டோமென்று விசுவாசிக்கவேண்டும். சந்தேகப்படுகிற எவனும் எதையும் பெற்றுக்கொள்வானென்று நினைக்கமுடியாது. ஆவியானவர் கொடுக்கப்படுவார் என்று வாக்கு மாறாத கடவுளால் வாக்களிக்கப்பட்டது. இதை நாம் உறுதியாய்ப் பிடித்து நமது அனுபவமாக்கிக்கொள்ளுவோமாக

ஆகவே உத்தம சாட்சி இன்னும் ஆவியானவரைப் பெறாமலிருந்தால் சற்று தரித்திருந்து தன்னை ஆராய்ச்சிசெய்து, தன்னைத் தாழ்த்தி ஆண்டவரிடத்தில் கேட்டு அவரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது வல்லமையுள்ள சாட்சியாயிருக்கலாம்.

மூன்றும் பாகம்.

முதலாம் அதிகாரம்.

சாட்சியின் வகைகள்.

Kinds of Witnesses.

முந்தின அதிகாரங்களில் சாட்சி என்பது என்னவென்றும், சாட்சியினுடைய இலக்ஷணங்கள் எவை என்றும் ஆராய்ந்தோம். இந்தப் பாகத்தில் சாட்சி எத்தனை வகைப்படும் அல்லது என்னென்ன விதமாய்ச் சாட்சி பகரலாம் என்று ஆராய்வோம்.

சாட்சியை இரண்டு வகையாய்ப் பிரிக்கலாம். ஒன்று பகிரங்க சாட்சி, மற்றது தனிச்சாட்சி. வேறுவிதமாய்ச் சொன்னால் பொதுப்படச் சாட்சிகூறல் அல்லது தனித்தனி ஆட்களுக்குச் சாட்சி கூறல். வேதத்தை ஆராய்வோமானால் இந்த இருமுறைகளும் கையாடப்பட்டு வந்திருப்பதாகப் பார்க்கலாம். நோவா தன் காலத்து ஜனங்களுக்கு ஆண்டவரின் பரிசுத்த தன்மையைக் குறித்துச் சாட்சி பகர்ந்துவந்தான். இவனுடைய சாட்சியைக் கேட்டவர்கள் மனந்திரும்பாமல் போனாலும் அவன் சாட்சியாகவே ஜீவித்தான். இவனைக் குறித்து நீதியின் பிரசங்கி என்று கூறப்பட்டிருக்கிறது.

எலியாவும் பகிரங்கமாக பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு யெகோவாவின் மகத்துவத்தைக்குறித்துச் சாட்சி பகர்ந்தான். தீர்க்கதரிசிகளின் சரித்திரத்தை நாம் வாசிக்கும்போது அவர்கள் பகிரங்க சாட்சிகளாயிருந்தார்கள் என்று தெரிகிறது.

புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது யோவான்ஸ்நானகனின் சாட்சியத்தை வாசிக்கிறோம். அவன் தன்னிடத்தில்வந்த திரளான ஜனங்களைக் கண்டு சித்தியுள்ள சாட்சி சொன்னான்.

இதைவிட்டு நாம் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தைப் பார்ப்போம். அவரும் திரளான ஜனங்களுக்குச் சாட்சிகொடுத்தார் என்ற

றியலாம். அவருடைய பகிரங்க பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் ஒரோர் சாட்சியே. மத். 5-7, 13 அதி. மாற். 7, 12, அதி. லூக். 7: 24-35, 8, 15 அதி. யோவா. 6: 19-58; 7-14 அதி. 8, 10 அதி. இந்த வசனங்கள் எல்லாம் கிறிஸ்து பகிரங்கமாகச் சாட்சி கொடுத்ததைப் பற்றிக் கூறுகின்றன. இந்தச் சாட்சிகளின் பலனாக உடனே ஆத்துமாக்கள் குணப்பட்டதாக வாசிக்காவிட்டாலும் அவர்களுக்குத் தெளிவான அறிவுண்டாயிற்று. அவர்கள் சாக்குச்சொல்ல இடமில்லாமற் போயிற்று. அவருடைய பிரசங்கம் சிலருக்கு ஜீவவாசனையுள்ளதாகவும் இருந்தது.

அப்போஸ்தலர் நடபடியை வாசிக்கும்போது அங்கும் பகிரங்க சாட்சியைப் பார்க்கிறோம். பரிசுத்தாவியைப்பெற்ற பேதுரு பகிரங்க சாட்சிகொடுக்க மூவாயிரம்பேர் குணப்பட்டார்கள். ஸ்தேவான் ஒரு கைதேர்ந்த சாட்சி. நியாயஸ்தலத்திலும் அப்போஸ்தலர் சாட்சி சொல்லக் கூசவில்லை அப். 5: 32. சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் அப். 8: 14. பவுல் அப்போஸ்தலன் யூதருக்கும் கிரேக்கருக்கும் பகிரங்கமாய்ச் சாட்சி கொடுத்ததாகக் கூறுகிறார் அப். 20: 21. இதேவிதமாக வேதமுழுவதிலும் பகிரங்க சாட்சி வற்புறுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஆதிகாலத்தில் இந்தியாவுக்கு வந்த மிஷனெரிமார் பகிரங்க சாட்சிகளின் மூலமாகக் கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பையும் தெளிவுபடுத்தினர். தற்காலத்தில் இம்முறை ஒருவாறு கைநெகிழப்படுவதுபோல் காணப்படுகிறது. இது சரியன்று. கிறிஸ்தவர்கள் இந்த முறையை அசட்டை செய்வதுபோல் காணப்படும் இக்காலத்தில் உலகத்துக்கடுத்த சில காரியங்களை பிரசித்தப்படுத்த விரும்புவோர் பகிரங்க சாட்சியை அதிகமாய்க் கையாடுவதைப் பார்க்கிறோம். பிரச்சாரகர் என்போர் ஏற்படுத்தப்பட்டு கள் குடியாமை, கதர் உடுத்தல் முதலிய விஷயங்களைப்பற்றியும், ஜனசங்க

விஷயமான சீர்திருத்தங்களைப்பற்றியும் பிரபலப்படுத்துவதைப் பார்க்கிறோம். அப்படியிருக்க நாம் இந்த நல்ல முறையைக் கையாடாமலிருக்கலாமா? மீன் பிடிக்கிற ஒருவன் பலவகையாக மீன் பிடிக்கிறன். சிறு குட்டைகளைக் கலக்கி மீனைப் பிடிக்கிறன், பெரியவலைகளை வீசி மீன் பிடிக்கிறன், தூண்டில்களைக்கொண்டும் தனித்தனி மீன்களைப் பிடிக்கிறன். தூண்டிலையும், வலையையும் உபயோகிக்கும்போது தான் பிடிக்கப்போகும் மீன்களின் தன்மைக்குத்தக்கதாக அவைகளை உபயோகிக்கிறன். அவ்வண்ணமே கிறிஸ்தவ சாட்சிகளும் பகிரங்கமாக சாட்சிபகர ஆயத்தமாயிருக்கவேண்டும்.

1. தெருப்பிரசங்கம்.
Street Preaching.



எவ்விதத்தில் இந்த ஊழியத்தைச் செய்யலாம்? அப். 17: 17. அப்போஸ்தலனுகிய பவுல் ஜெபாலயத்தில் யூதரோடும் பக்தியுள்ள

வர்களோடும் சம்பாஷணைபண்ணினதோடு, சந்தைவெளிகளில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணைபண்ணிவந்தான். அவன் சம்பாஷணை பண்ணினபொருள் "இயேசுவும் அவருடைய உயிர்த்தெழுதலுமே" இதன் பலனாக அநேகர் அவனை அழைத்து அவன் என்னசொல்லப்போகிறான் என்று ஆசையாய்க் கேட்டார்கள். அவன் கிறிஸ்துவைக் குறித்து மார்ஸ்மேடையினின்று சாட்சிபகர்ந்தான். சிலர் அவனை இகழ்ந்து அசட்டைபண்ணினபோதிலும் சிலர் அவனை ஏற்றுக்கொண்டார்கள் என்று பார்க்கிறோம். அப். 17: 32-34. நாம் கிராமங்களிலும் வீதிகளிலும் கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுத்து எச்சரிக்கவேண்டும்.

2. பண்டிகை காலங்களில் சாட்சிகூறல்.

Witness During Festivals.

நம்முடைய தேசத்தில் அநேக பண்டிகைகள் உண்டு. விசேஷமாக மதசம்பந்தமான பண்டிகைகள் அதிகம். இக்காலத்தில் கிறிஸ்துவை அறியாத ஆயிரக்கணக்கான ஜனங்கள் கும்பலாகக் கூடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றி சாட்சிகூறி, அவரைப் பிரசித்தப்படுத்தாமலிருக்கலாமா? ஒரு சாரார் நாம் இக்காலங்களில் சாட்சிகூறக்கூடாதென்பர். ஏனெனில் வந்திருப்பவர்கள் ஒரு நோக்கத்தோடு வந்திருக்க, அந்நோக்கத்துக்கு மாறாக வேறொரு மதத்தைக்குறித்துச் சாட்சி கூறுவது சரியல்லவென்பார்கள். என்றாலும் நாம் வேதத்தை வாசிக்கும்போது இப்படிப்பட்ட பண்டிகை நாட்களில் கிறிஸ்து பிரசங்கித்து சாட்சிகூறியிருக்கின்றாரென்று தெரிகிறது யோவா. 7. பஸ்காபண்டிகைத் தினத்தன்றே பேதுரு அப்போஸ்தலன் பெரிய பிரசங்கம்செய்து மூவாயிரம் பேரை ஆதாயப்படுத்தினர். நாமும் இந்தச் சமயத்தை உபயோகிக்கவேண்டும். இந்தியாதேசமானது கிராமங்களால் அமைந்துள்ள தேசம். கிராமவாசிகள் பொதுவாய் பல கிராமங்களினின்றும் பண்டிகைகளுக்கு வந்து

கூடுகின்றனர். இவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் இவர்கள் மூலமாக அக்கிராமங்களுக்கெல்லாம் சுவிசேஷ செய்தி செல்லும். ஆகையால் இப்படிப்பட்ட சமயத்தை கைநெகிழவிடக் கூடாது. திருவிழாவிற்குவந்து சுவிசேஷசெய்தியைக்கேட்டு, விற்கப்பட்ட வேதபங்குகளையும் சன்மார்க்கப் புஸ்தகங்களையும் வாங்கி வாசித்ததின் பலனாக கிறிஸ்தவர்களானவர் பலருண்டு. அவர்கள் மூலமாய் புதிய சபைகள் உண்டாயிருப்பதையும் நமது மிஷன் சரித்திரங்களில் வாசிப்போம். மதுரை மிஷனில் தென் லோக்கல் கவுன்சிலில் கொப்புசித்தன்பட்டி என்ற இடத்தில் உண்டான சபைக்குக் காரணம் திருப்பரங்குன்றத் திருவிழாவில் செய்யப்பட்ட பிரசங்கமும் விற்கப்பட்ட வேதாகம பங்குமே. திருப்பரங்குன்றத திருவிழாவிற்கு வந்திருந்த இன்னொருவர் அங்கு சொல்லப்பட்ட போதனைகளைக் கேட்டும், அங்கு கொடுக்கப்பட்ட ஒற்றைத்தாளை வாசித்தும், அதன் பலனாக மார்க்க ஆராய்ச்சிசெய்து சிவகாசியில் முதற் கிறிஸ்தவரானார். அவருடைய சந்ததியார் பல இடங்களிலும் இப்பொழுது கர்த்தருக்கு மகிமையாக ஊழியஞ்செய்து வருகிறாகள். ரோமாபுரிச் சபையும் பெந்தேகோஸ்துநாளில் சுவிசேஷத்தைக் கேட்டு கிறிஸ்தவர்களானவர்களால் உண்டானதே.

3. சந்தைகளில் சாட்சிகூறல்.


Witness in Market Places.

நமது ஜனங்களுக்கு வாரத்துக்கொருமுறை வைக்கப்படும் சந்தை மிகவும் முக்கியமானது. கிராமத்திலுள்ளோர் இங்கே வந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்ளுகிறார்கள். தங்கள் விளைபொருள்களையும் கைத்தொழிற் சாமான்களையும் உயிர்ப்பிராணிகளையும் விற்று முதலாக்கிக்கொள்ளுகிறார்கள். அதுமாத்திரமல்ல பலரோடும் பேசி பல இடங்களில் நடக்கும் சங்கதிகளைப்பற்றிய சமாச்சாரங்களையும் அறிந்துபோகிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தை கிறிஸ்தவர்கள் இழந்துபோகக்கூடாது. நூதன காரியங்கள் ஜனங்களின் கவனத்தை இழுக்கும். வழியெல்லாம் அதைப்பற்றிப்

பேசிக்கொண்டுபோவார்கள். தங்கள் ஊரிலுள்ளோருக்கும் இதைப் பற்றிச் சொல்லுவார்கள். ஆகையால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறி அவருக்குச் சாட்சிகொடுப்போமாகில் அது கிராமங்கள்தோறும் பரவும். அப்போஸ்தலனாகிய பவுல் சந்தைவெளியில் தங்களுக்கு எதிர்ப்பட்டவர்களோடு பேசிவந்ததாகப் பார்க்கிறோம். சந்தைவெளியிலே பவுல் அடிக்கப்பட்டதாகவும் பார்க்கிறோம். அப். 16: 19. சந்தையில் சாட்சிசொல்லும் வழக்கத்தை நாம் கையாடுவது நன்மையாகும்.

கிறிஸ்துவானவர் பெரிய விருந்தின் உவமையில் வீதிகளிலும், சந்துகளிலுமிருந்து விருந்துக்கு ஆட்களை அழைத்துக்கொண்டுவரும்படி சொல்லுகிறார் மத். 22: 9. அப்படியே இரட்சிப்பாகிய விருந்திற்கு நாம் சந்துகளிலிருந்தும் தெருக்களிலிருந்தும் நமது சாட்சி மூலமாய் ஆட்களை வரவழைக்கவேண்டும்.

4. கூடாரப்பிரசங்கம்.
Itineracy.



'கூடாரப்பிரசங்கம்' என்பது இருகருத்தைக் கொடுக்கக்கூடியது. ஒன்று கூடாரம் ஒன்றைப்போட்டு அதில் ஜனங்களை வர

வழைத்து அவர்களுக்குப் பிரசங்கிப்பதைக் குறிக்கும். இன்னொன்று கூடாரங்களைக் கிராமங்களுக்கு எடுத்துக்கொண்டுபோய், அங்கு அவைகளையும் போட்டு, அவைகளில் தங்கிப்பக்கத்துக் கிராமங் களுக்குச்சென்று கிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுப்பதாம்.

இந்த இரண்டாம் கருத்திலேயே நாம் இதை உபயோகிக்கிறோம். இந்தமுறை மிஷன் ஆரம்பகாலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்பட்டுவந்தது. இப்போது அதிகம் காணப்படுகிறதில்லை. இதற்குப் பலகாரணங்கள் உண்டு. சிலருக்கு இந்த முறைமேல் பிரியமில்லை. கிராமங்களைச் சந்தித்து அங்குள்ளோருக்குச் சுவிசேஷத்தைக்கூற முன்வரார். ஆனால் இந்தியாதேசம் கிராமங்களால் நிறைந்தது. ஏறக்குறைய 7,50,000 கிராமங்கள் உண்டு. லட்சம் பேருக்கு அதிகமாக ஜனங்கள் உள்ள பட்டணம் 33மாத்திரம். இந்திய கிராமங்களில்தான் அறிவீனமும், அஞ்ஞானமும் உண்டு. இந்தியா கிறிஸ்தவதேசம் ஆகவேண்டுமானால் இந்திய கிராமங்கள் கிறிஸ்துவண்டை கொண்டுவரப்படவேண்டும்.

சிலர்சொல்லும் காரணம் என்னவென்றால்: இப்போதுள்ள கிறிஸ்தவர்களைக் கவனிக்க உபதேசிமார் உபாத்திமார் இல்லையே அப்படியிருக்க புதிய்கிராமங்களுக்கு ஏன் போகவேண்டுமென்பார்கள். இது வாஸ்தவமானால் அந்தக் கிராமத்தாரின் கதியென்ன? சம்பளம் வாங்காத சபையாரை இந்த நல்ல வேலையில் பழக்கவேண்டும்.

தற்காலத்தில் கூடாரங்கள் கொண்டுபோக அவ்வளவு அவசியமில்லை. ஏனெனில் தங்கத்தக்கதாக வீடுகள், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள் பிரயாணிகளின் பங்களாக்கள் முதலியவை ஆங்காங்கு காணப்படும். அவசியமில்லாதபோது கூடாரங்களைக் கொண்டு போகவேண்டியதில்லை. ஆனால் இம்முறையால் குறிப்பிடப்படும் கிராம சுவிசேஷவேலையை விட்டுவிடலாகாது. சிலநாள் ஒரு கிராமத்தில்தங்கி அதை மையஸ்தானமாகவைத்துச் சுற்றி ஒழுங்காய் சுவி

சேஷ சாட்சிசொல்லிவரவேண்டும். "சிதறப்பட்டவர்கள் எங்குந் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்." என்று வாசிக்கிறோம். அவர்களைப்போல் நாமும் செய்யவேண்டாமா? பாடல்கள்பாடி கர்த்தரைப்போற்றி சுவிசேஷத்தை அனுபவ சாட்சியாய்க் கூறவேண்டும். வீடுகளைச் சந்தித்து வினவவேண்டும். இவ்விதமாய்க் கர்த்தருக்குச் சாட்சிகூறவேண்டும்.

இதில் கவனிக்கவேண்டிய இரண்டொரு காரியங்கள் உண்டு. (1) நாம் ஏற்ற இடத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆட்கள் கூட்டமாகப்போகும் இடங்கள் ஏற்றது. ஆயினும் ஜனங்களுக்குப் போக்குவரவுக்கு இடஞ்சலில்லாமல் ரஸ்தாவைவிட்டு ஒதுக்கான இடத்தில் நின்றுகொள்ளவேண்டும்.

(2) சாயந்திர நேரங்களில் பொதுவாக ஜனங்கள் மைதானங்களில் கூடுவார்கள். அல்லது மதிய நேரத்தில் தோப்புகளில் கூட்டமாய் இளைப்பாறுவார்கள். இவர்களுக்குச் சாட்சிகூறலாம்.

(3) நமது ஆலயங்களுக்கு முன்பாக நாம் பகிரங்க கூட்டங்கள் வைத்து சாட்சிகூற ஒழுங்குசெய்யவேண்டும். சில இடங்களில் இந்த பழக்கம் குறைந்திருப்பது விசனமே.

(4) ஜனங்களுடைய வசதியைக் கவனிக்கவேண்டும் அவர்கள் வெயிலில் நிற்காமலும் சூரியன் அவர்கள் கண்ணில் படாமலிருக்கவும் பார்க்கவேண்டும். பிரசங்கம்பண்ணுகிறவர்கள் காற்றுக்கு எதிராக நின்று பிரசங்கம்பண்ணாமல் காற்றோடு சப்தம் செல்லத்தக்கதாக நின்று பேசவேண்டும். பிரசங்கியார் சற்று உயர்வான இடத்தில் நிற்கவேண்டும். இப்படிச் செய்வதால் தூரத்தில் நிற்போருக்கும் தெளிவாய்க்கேட்கும்.

(5) இப்படிப்பட்ட கூட்டத்தை நடத்துகிறவர்கள் முதலாவது தேவன் தங்களை இந்த ஊழியத்தைச்செய்ய அழைக்கிறார் என்ற நிச்சயமுள்ளவர்களாய்ச் செல்லவேண்டும். பிறருக்குக் கொடுக்கும்

படியாக கைப்பிரதிகளைக் கொண்டுபோகவேண்டும். நல்ல பாடகரும் இதில் அவசியம் இந்தப் பாடகர்கள் வெறும் கூட்டத்தைச் சேர்க்கிறவர்களாயிராமல் சுவிசேஷ சாட்சியைக்கூறும் பாடகர்களாயிருக்கவேண்டும். இரட்சிப்பின் செய்தியைக்கூறி ஒருவரோ, இரண்டுபேரோ அதே சத்தியத்தை இனிமையாகப் பாடினால் அதனால் பலனுண்டு. இந்த வரத்தையுடையவர்கள் கிறிஸ்துவுக்கென்று அதை உபயோகிப்பது அதிகப் பலனைத்தரும்.

இரண்டாம் அதிகாரம்.

பகிரங்க சாட்சிகூறும் விதம்.

How to Witness in Public.

பகிரங்கசாட்சி சித்தியுடன் கூறப்படவேண்டுமென்றால் நாம் கையாடவேண்டிய சில முறைகள் உண்டு.

1. ஜனங்களின் கவனத்தை இழுத்துக்கொள்ளவேண்டும்.

Gain the Attention of the People.

ஜனங்களுடைய கவனத்தை நாம் இழுத்துக்கொள்ளாவிட்டால் நாம் கூறும் சாட்சி பலனற்றதாயிருக்கும். தெருக்களில் கூடும் ஜனங்கள் சோலிக்காரராயிருக்கலாம். தங்கள் மனதில் பல நினைவுடையவர்களாவுமிருக்கலாம். இவர்களுடைய கவனம் சிதைந்திருக்கும். அவைகளை ஒர்மைப்படுத்தி சத்தியத்தைக் கூறுவதே பலன் தரும். ஆகையால் நாம் எவ்விதம் ஆரம்பிக்கிறோமென்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(1) சாட்சி கூறுகிறவர்க்கும் ஜனங்களுக்கும் ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அவர்களுடைய மனம் எதிலே பதிந்திருக்கிறதென்று அறிந்து அதைச் சுட்டிக்காட்டி அதினின்று

சுவிசேஷ சத்தியத்திற்குள் ஜனங்களின் எண்ணத்தை நடத்திக் கொண்டுபோகவேண்டும். யோவான் ஸ்நாநகன் யோர்தான் நதியைக் கடந்து எருசலேம் ஆலயத்திற்குப் பலிக்காகச்சென்ற திரளான ஆடுகளைக் கவனித்துக்கொண்டிருந்த ஆட்களுக்கு “இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி” என்று இயேசுவைக் குறித்துச் சாட்சி கொடுத்தான். யோவான் 1: 29, 34, 37. ஐந்தப்பம் இரண்டு மீனால் போஷிக்கப்பட்ட ஜனங்களுக்கு ஜீவ அப்பத்தைக் குறித்து, இயேசு பிரசங்கித்தார் யோவா. 6: 26-27. பண்டிகையிலே தெருவில் அல்லது ஆலயத்திற்கு முன்பாக தண்ணீர் தெளிக்கப்பட்டதைக்கண்ட ஜனங்களுக்கு ஜீவதண்ணீரைக் குறித்துப் போதிக்கிறார். யோவா. 7: 37. பிறவிக்குருடனுக்கு கண் ஒளியைக் கொடுத்த அவர், உலகத்துக்குக் காணாதவர்கள் காணும்படி வந்ததாகச் சொல்லுகிறார். யோவா. 9: 39. யூத சபையாகிய மந்தையினின்று பிறவிக்குருடனைத் தள்ளிப்போட்டதை இயேசு கேள்விப்பட்டு ஆடுகளைத் தேடும் மெய்யான நல்ல மேய்ப்பனைக் குறித்துப் போதிக்கிறார். யோவா. 9: 35, 10: 11. அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தேகோஸ்தே நாளில் பல பாஷை பேசியதைப் பற்றி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் பரிசுத்தாவியைப்பற்றியும் சாட்சி கொடுக்கிறார். ஆத்துமாக்கள் குணப்படுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்தில் “அறியப்படாத தேவனுக்கு” என்று வரையப்பட்ட வாசகத்தை சுட்டிக்காட்டி சாட்சி பகருகிறார்.

இவ்விதமாகச் சித்தியுள்ள சாட்சிகள் தங்களுக்கும் ஜனங்களுக்கும் மத்தியில் ஒரு சம்பந்தத்தை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும். பயிரிடும் குடிகளின் மத்தியில் பயிர்களைப்பற்றிப்பேசி சுவிசேஷ சாட்சியைக் கூறலாம். ஒரு தடவை ஒரு துரை பிரசங்கக் கூட்டத்தாரோடு குதிரையின் மேல் ஏறிச்செல்ல, கிராமத்தார் குதிரையைப்

பார்த்துக் கூட்டங் கூடினார்கள். அச்சமயத்தில் அங்குள்ள ஒருவர் குதிரையையும், துரையையும் சுட்டிக்காட்டி, குதிரையைப் பார்க்கிலும் துரை விசேஷமென்று சொல்லி சுவிசேஷ சாட்சி கூறினார். அப்படியே ஜனங்களின் கவனத்தை இழுத்து சத்தியத்தைக் கூறி சாட்சி கொடுக்கவேண்டும்.

(2) ஜனங்களை கோபப்படுத்தக்கூடாது. சிலர் பொதுவாக மற்றவர்களின் மதத்தைக் கண்டனம் செய்து தங்கள் மதத்தை ஸ்தாபிக்கப் பிரயாசப்படுவார்கள். இது பரபக்ஷ கண்டனம், சுபபக்ஷ ஸ்தாபனம் என்று அழைக்கப்படும். இது சரியல்ல, இது ஒரு சாட்சியின் வேலையுமல்ல. சமயவாதம் செய்வது சமயவாதிகளின் வேலையாகும். சாட்சியோ நாம் இயேசுகிறிஸ்துவண்டை சென்றதால் அடைந்துகொண்ட பாவமன்னிப்பையும் அதால் வந்த மனச்சமாதானத்தையும், பாவத்தை மேற்கொள்ளத் தான் பெற்ற வல்லமையையும் குறித்து ஆத்ம தாகமுடையோருக்கு எடுத்துக் கூறுதலாகும். கிறிஸ்துவே அவர்களுடைய செய்தியின் சாராம்சமாயிருக்கவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி மனந்திரும்புதலைக் குறித்தும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்தும் சாட்சியாக அறிவிக்கவேண்டும். அப். 20 : 21, 1 கொரி. 1 : 2, 3, 2 : 2.

2. தைரியமாகச் சாட்சிகொடுக்கவேண்டும். Witness Boldly.

சங். 27 : 1—"கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர் யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்?" கர்த்தருக்குச் சாட்சி கொடுக்க நாம் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் நாம் அவர் கையிலிருக்கிறோம். அவர் நம்மைப் பாதுகாப்பார். ஆனால் நாம் கோபப்பட்டுக் கொள்ளக்கூடாது. நம்மைக் கோபப்படுத்தக்கூடிய காரியம் நடக்கலாம். ஒருவேளை ஒருவன் தூஷணமாகப் பேசலாம்; நாமோ கோ

பங்கொண்டு பதிலுக்குப்பதில் பேசக்கூடாது. அமைதியாக இருக்கவேண்டும். "மெதுவான பிரதி உத்தரம் கோபத்தை மாற்றும்" என்றபடி நாம் சாதுவாகச் சொல்லும் வார்த்தைகள் பெரிய மாறுதலையுண்டாக்கும். சில சமயங்களில் நம்முடைய சாட்சியைக் கெடுக்கும்படியாக சிலர் பிரயத்தனங்கள் செய்யலாம். அப்படிப்பட்ட சமயத்திலும் நாம் தைரியமாக அப்படிப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு தடவை ஒரு கிராமத்தில் சிலர் கூடிப் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது தன் தேகமெல்லாம் திருநீர் பூசித் தன் தலைமேல் ஒரு பெரிய தலைப்பாகையை வைத்துக்கொண்டு கையிலே ஒரு பிரம்பும் பிடித்து, கூட்டத்தைக் கலைக்கும் நோக்கமாய் ஒருவன் வந்தான். வந்து அவன் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டு தமிழ்க்கவிகள் பாட ஆரம்பித்தான். பட்டணத்தார் பாடல்களினின்றும் மாணிக்கவாசகரின் கவிகளினின்றும் சில பாடல்களைச் சொல்லித் தன்னுடைய கெட்டிக்காரத்தனத்தைக் காட்டி ஜனங்களைக் கலைக்க யோசித்தான். பிரசங்கியாரோ அதைரியப்படாமல் அவன் பாடின கவிக்கு அருத்தங் கூறச்சொல்லி அவனால் முடியாமல்போக பிரசங்கியார் அருத்தங்கூறி கிறிஸ்துவை எடுத்துக்காட்டினார். பாடுவது அவனுக்கு அதிக உற்சாகமாகயிருந்தது. பிரசங்கியார் வியாக்கியானப்படுத்தினது இன்னும் அதிக உற்சாகத்தைக் கொடுத்தது. கூட்டங் கலையவில்லை. அமைதியாய்க் கேட்டார்கள். கூட்டத்தைக் கலைக்க வந்தவன் பிரசங்கியாருக்கு நல்ல உதவியாளானான்.

சாட்சி சொல்லும்போது தர்க்கத்திற்கு இடங்கொடுக்கக்கூடாது. பதிலுக்குப் பதில் சொல்ல ஆரம்பிக்கும்போது சாட்சி சரியானபடி சொல்லப்படமாட்டாது. ஆனபடியால் தர்க்கத்திற்கு இடங்கொடாமல் சுருக்கமாக, தெளிவாக, திட்டமாக, நல்ல பாஷையிலே செய்தியைக் கூறவேண்டும். உபந்நியாச அலங்காரமல்ல, உள்ளான ஆத்திரமே நாம் சொல்லும் சாட்சியை ஜனங்களின் மனதில் பதிக்கவேண்டும்.

நம்மை ஆண்டவருக்கு முழுவதும் ஒப்புக்கொடுத்து அவர்மேல் சார்ந்திருந்து அவருடைய வார்த்தைக்கு இசைந்த விதமாய் ஆவியானவரின் ஒத்தாசையைக் கொண்டு சாட்சி பகரவேண்டும். நம்மோடுகூட ஆவியானவரும் சாட்சி கூறுகிறபடியால் (அப். 5 : 32.) நாம் சொல்லும் வார்த்தைகளை உபயோகிப்பார்.

மூன்றும் அதிகாரம்.

நாம் சொல்லவேண்டிய சாட்சி என்ன ?

The Content of Witness.

பகிரங்கமாக சாட்சி கூறும்போது நாம் என்ன செய்தியைக் கூறலாம்? நாம் முன்னே பார்த்திருக்கிறபடி இயேசுகிறிஸ்துவைப்பற்றியே நமது சாட்சியிருக்கவேண்டும். அப்போஸ்தலர் இதே பொருளைக் குறித்து சாட்சி பகர்ந்தனரெனப் பார்க்கிறோம். இயேசுவே கிறிஸ்துவென்று யூதருக்கு ரூபித்துவந்தார்கள். இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தைக் குறித்தும் அவருடைய மரணத்தைக் குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்தும் சாட்சி பகர்ந்தனர். பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு அறிக்கைசெய்து இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பைப்பெற்று பரிசுத்த ஜீவியம் பெற வல்லமை அடைந்துகொள்ளவேண்டுமென்று பலமாய்ப் போதித்து வந்தார்கள். இதுவே நமது செய்தியும், நமது சாட்சியுமாயிருக்கவேண்டும். இவ்விஷயத்தைக் குறித்து நம்முடைய அனுபவத்தை எடுத்துக்கூறவேண்டும்.

நம்முடைய ஜனங்கள் பலவகைப்பட்டவர்களாயும், பல பல எண்ணங்களுடையவர்களாயும், பலவகை நம்பிக்கையுடையவர்களாயும் இருப்பதைப் பார்க்கிறோம். இவர்களுக்கு நாம் என்னத்தை சாட்சியாகக் கூறலாம்?

இயேசுகிறிஸ்து பல முகங்களுள்ள இரத்தினக்கல்போலிருக்கிறார். ஒவ்வொரு முகத்தினின்றும் ஒளிவந்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம். அவர் இரத்தினக்கல் மாத்திரமல்ல சகல நோய்களையும் தீர்க்கும் குரு மருந்தாகவுமிருக்கிறார். ஆகவே இயேசுகிறிஸ்து பற்பல வகைப்பட்டோருக்கும் அவரவர் தேவையை திருப்தி செய்யும் ஒளியாகவும் சஞ்சீவியாகவுமிருக்கிறார். நாம் அந்தந்த ஜனங்களின் தேவையை அறிந்து, அதற்கேற்றபடி இயேசுகிறிஸ்துவை எடுத்துக்காட்டி சாட்சி கூறவேண்டும்.

(1) ஆவி வணக்கத்தார். நம்முடைய தேசத்தில் விசேஷமாய் ஏறக்குறைய ஒரு கோடிப்பேர் இருக்கிறார்கள். இவர்கள் ஆவிகளை வணங்குவதால் பேய்களுக்குப் பயப்படுகிறார்கள். அவைகள் குரூரமுள்ளவைகளென்றும், ஆதலால் அவைகளின் கோபத்தை நிவிர்த்திசெய்ய எப்போதும் பிரயாசப்படவேண்டுமென்றும் பயத்தோடு ஜீவித்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் போதிக்கவேண்டியதென்ன? கடவுள் அன்பாயிருக்கிறாரென்றும் அவர் நம்மை நேசித்ததால் தம்முடைய ஒரேபேறான இயேசுகிறிஸ்துவை அனுப்பினாரென்றும், அவர் நம்மை நேசித்து நமக்காக இரட்சிப்பைச் சம்பாதித்திருக்கிறாரென்றும் சாட்சிகூறவேண்டும். கடவுள் நமது தகப்பனென்பதை எடுத்துக்காட்டி அவருடைய பிள்ளைகளாக ஏவவேண்டும்.

(2) சைவ சமயத்தினர். இந்தக் கொள்கையுடையோரும் திரளாயிருக்கின்றனர். இவர்களுடைய விசேஷித்த கொள்கை கடவுள் குருவாகவந்து ஞானோபதேசம்செய்து இருளை நீக்கி மருளைப் போக்கி ஞானத்தை ஊற்றுவார் என்பதே. இப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்து சற்குரு என்று நாம் காட்டவேண்டும். "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னவர் இயேசுகிறிஸ்து. சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தவரும் அவரே. "எந்த

மனுஷனும் எக்காலத்திலும் போதியாவண்ணம்" போதித்தவரும் அவரே. "அவருடைய போதகத்தைக் குறித்தும் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" என்றும் வாசிக்கிறோம். ஆகையால் குருவாக அவரைப் பிரசித்தப்படுத்தவேண்டும். இவர் பிதாவைக் குறித்தும் தம்மைக் குறித்தும் சொல்லியிருக்கிறவைகளை நாம் எடுத்துக்காட்ட வேண்டும். அவர் உபதேசித்தது மாத்திரமல்ல அதை சாதித்தும் காட்டியிருக்கிறார்.

அவர் தெய்வீக இயற்கையுள்ளவர்.

தெய்வீக விஷயங்களைக் கற்பிக்கும் ஒருவர் தெய்வீகக் குணமுடையவராயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து தம்மைக் குறித்துச் சொல்லும்போது தாம் "பிதாவிடத்திலிருந்து வந்தவரென்றும்" தம்முடைய உபதேசம் தம்முடைய "பிதாவிடத்தில் கற்றவைகள்" என்றும் கூறுகிறார். யோவா. 7: 16. இவருடைய "உபதேசத்தில் நிலைத்திருந்தால்" சத்தியத்தை அறிவோமென்றும் "சத்தியம் நம்மை விடுதலையாக்கும்" என்றும் சொல்லுகிறார் யோவா. 8: 31-32.

அவர் நிச்சய அறிவுள்ள சற்குரு.

அவர் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" "நான் அறிந்ததைச் சொல்லுகிறேன்" என்று தம்முடைய உபதேசத்தைக் குறித்து நிச்சய அறிவுள்ளவராய்க் கூறியிருக்கிறார்.

அவர் பரிசுத்த நடக்கையுள்ளவர்.

இது முக்கியமானது. ஏனெனில் ஒருவன் அநேக ஞானமான மொழிகளைச் சொன்னபோதிலும் பரிசுத்த நடக்கையில்லாவிட்டால் அதனால் பிரயோஜனமில்லை. இயேசு தம்மைக் குறித்து பேசியபோது "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்" (யோவா. 8: 47) என்கிறார்.

அவர் அன்புள்ள குரு.

ஒரு குருவிடத்திலிருக்கவேண்டிய விசேஷித்த இலக்ஷணம் அன்பே. அவர் அன்பினால் ஏவப்பட்டு போதிக்கிறவராயிருக்க வேண்டும். அவர் "என் நுகம் மெதுவாயிருக்கிறது" என்று சொல்லுகிறார். பிதா தம்மில் அன்பாயிருக்கிறதுபோல தானும் சீஷரில் அன்பாயிருப்பதாகச் சொல்லுகிறார் யோவா. 15 : 10. "ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" யோவா. 15 : 13 என்று சொன்னாரே. பகைஞருக்காகத் தமது ஜீவனைச் கொடுத்தார். அவரே உகந்த சற்குரு. இவரைப்பற்றி கிருஷ்ண பிள்ளை என்பவர் சாட்சி கூறுவதாவது:—

அன்பு மயமே கருணை யானந்த வாரியே
அருள்பொழி மழைகொண்டலே.
ஆருயிர்க்கு யிரான அமிர்த சஞ்சீவியே
அடியர் இயாம் பரத்தில்
இன்புற உதித்திலகு மெய்ஞ்ஞான பானுவே
எத்தரும் சுகுண நிதியே
இக ரசமயா தீதநிலையமே வானிழிந்து
இம்பர்வரு ஜீவ நதியே
மன்பதை புரக்க நடுநின்றோங்கு ரக்ஷணிய
மாமேருவே யென்று நின்று
வன்புகழ் வழுத்தி மெய்யன் பினோடு சிந்தைபர
வசமாகி ஆவி அனல்கொண்டு
என் புருகி ஆனந்த பாஷ்பம் சொரிந்து நின்று
எத்தவருள் ஈவதென்றோ
ஏகநாயக சருவலோக நாயக கிறிஸ்து
இயேசு நாயக சுவாமியே.

வைஷ்ணவர். இவர்களை நாம் அநேக இடங்களில் பார்க்கிறோம். இவர்களுடைய விசேஷித்த கொள்கை கடவுள் அவதார புருஷனாகவந்து துஷ்ட நிக்கிர சிஷ்டபரிபாலனம் செய்தாரென்பதே இந்தத் திரு அவதாரக்கொள்கையின் விசேஷித்த கொள்கை. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி இயேசுகிறிஸ்து மனிதனாக வந்து முன்மாதிரியைக் காட்டி இரட்சிப்பின் வழியைத் திறந்தார். மெய் அவதாரப்புருஷனாகிய இயேசுகிறிஸ்துவின் அடியார்கள் அவரைக் குறித்துச் சாட்சி பகர்வது அவசியமே. அவரே மெய்யான திரு அவதாரமென்றும், அவர் பரிசுத்த ஜீவியம்செய்த அவதாரமென்றும், பரலோக ராஜ்யத்தைப்பற்றிப் பரிவுடன் போதித்தவர் என்றும், தம்முடைய ஊழியத்தைச் சரிவர முடித்த ஒரே அவதாரப் புருஷனென்றும், அவருடைய அவதாரம் எக்காலத்துக்கும் உரியதென்றும் சாட்சி கூறவேண்டும் பிலிப்பியர் 2: 4-11.

நான்காம் அதிகாரம்.

பர்மாவில் கையாடப்படும் சாட்சிமுறை.

Method used in Burma.

பர்மாவில் ஒரு விசேஷித்த முறை கையாடப்பட்டுவருகிறது. இதற்கு உன்னத சிநேகம் என்று பெயர்கொடுக்கப்படுகிறது. அதாவது ஜனங்களுக்கு சிநேகத்தைக் காட்டி அந்த சிநேகத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்தல். இந்த முறையை கனம் டயர் ஐயரவர்கள் உபயோகித்து வருகிறார்கள். உயர்தரக்கல்லூரியிலும், வேதசாஸ்திர சாலையிலுமுள்ள மாணாக்கர்களைத் தெரிந்துகொண்டு அவர்களைச் சாட்சி சொல்லும்படியாகச் சில காலம் பயிற்றுவித்து கிராமங்களுக்குக் கூட்டிக்கொண்டுபோய் சாட்சி சொல்வதுண்டு.

ஒரு கிராமத்திற்குப் போனவுடனே ஜனங்களின் அன்பைக் கவர்ந்துகொள்ளப் பிரயாசப்படுவார்கள். இதற்காகப் பின்வரும் முறைகளைக் கையாடுவதுண்டு.

1. பந்து விளையாட்டு. அந்தக் கிராமத்திலுள்ள வாலிபர்களைச் சேர்த்து அவர்களோடு பலவிதமான பந்து விளையாட்டு விளையாடுவதுண்டு. இதன் மூலமாக வாலிபரின் சிநேகிதத்தை அடைந்துகொள்ளுகின்றனர்.

2. சுகாதார உதவிகள் செய்தல். கிராமத்தில் அசுத்தமிருக்குமானால் அவைகளைச் சுத்தப்படுத்தி, அசுத்தத்தை குழிகள் தோண்டி புதைத்து தெருக்களைச் சுத்தம் செய்வார்கள். இதன் மூலமாய் ஜனங்களின் கவனத்தை இழுத்துக்கொள்ளுவார்கள்.



3. அற்ப சொற்ப வியாதிகளுக்கு மருந்துகொடுத்தல். தங்கள் கைகளில் கொஞ்சம் மருந்து கொண்டுபோய் சாதாரண வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்து உதவிசெய்வார்கள்.

4. வேத சரித்திரத்தை நடித்துக் காட்டுதல். வேதத்திலுள்ள சில சரித்திரங்களை நாடகமாகப் போட்டு ஜனங்களைப் பரவசப்படுத்தல். படிப்பறியாத ஜனங்களுக்கு சத்தியத்தைப் புகட்ட இது ஏற்றவழி. ஆயினும் வெகு எச்சரிப்போடு செய்யவேண்டிய வழி. வெறும் வேடிக்கைக்காக அல்ல, பயபக்தியோடு சத்தியத்தைப் புகட்டுவதற்காக நடிக்கப்படும் பிரசங்கமாகும். இப்படி இந்தக் கூட்டத்தார் ஒரு நாள் காணாமற்போன மகனின் சரித்திரத்தை நடிக்க அக்கூட்டத்திலிருந்த சிலர் அதின் முடிவில் "நாங்களும் காணாமற்போன மக்கள். நாங்களும் பிதாவினிடத்திற்கு வர ஆசைப்படுகிறோம்" என்று அறிக்கையிட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்.

அனுபவ சாட்சி கூறல்.

முன் சொன்னவைகள் எல்லாம் ஒருவித ஆயத்தமே. அவைக ளோடு முடிவடைகிறதில்லை. கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சி சொல்லுவதே இவர்களுடைய முக்கியவேலை. தனித்தனிமையாகவும், பகிரங்கமாகவும் தங்களுடைய அனுபவத்தைச் சாட்சியாகக் கூறுவார்கள். முன்னமே நான் இன்னின்ன விதமாய் இருந்தேன். கிறிஸ்துவுக்கு என்னை ஒப்புக்கொடுத்தபின் இப்போது முற்றிலும் மாறி புது ஜீவியஞ்செய்கிறேன் என்று கூறுவார்கள். இந்தச் சாட்சியைக் கேட்ட அநேகர் கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களோடு பேசியிருக்கிறேன் இவர்களுடைய அறிக்கைகளையும் வாசித்திருக்கிறேன். இந்த முறை ஒரு சித்தியுள்ள முறையாக இருக்கிறது. இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதியார் நமது சென்னை இராஜதானியின் ஒரு பாகத்திற்கு வந்து இந்த முறையை உபயோகித்து விளக்கிக் காட்டிப்போயிருக்கிறார்கள். இதில் நாம் உபயோகிக்கத்தக்க அநேக குறிப்புகள் உண்டு.

இந்தக் கூட்டத்தார் கவனிக்கவேண்டிய மூன்று பிரமாணங்கள் உண்டு.

1. கடவுள் ஒருவர் மாத்திரம் மறுபிறப்பைக் கொடுக்கக் கூடியவர். ஏனெனில் கடவுள் மாத்திரம் சரீர ஜீவனையோ ஆவிக்குரிய ஜீவனையோ கொடுக்கக்கூடியவர். எந்த மனிதனும ஒரு ஆத்துமாவைத் தானே இரட்சிக்கமுடியாது.

2. நாம் சுவிசேஷப் பிரபல்யத்தில் கடவுளோடு ஒத்து உழைக்கவேண்டும். ஏனெனில் நாம் கடவுளின் உடன் ஊழியர். 1 கொரி. 3 : 9.

3. யார், யார் உண்மையான எழுப்புதல் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்கள் அதற்காகப் படவேண்டிய பாடுகளைப்பட ஆயத்தமாயிருக்கவேண்டும். பாடில்லாமல் பலனில்லை.

இந்த மூன்று காரியங்களையும் திட்டமாய் அறிந்திருக்கவேண்டும்.

ஒருவன் சாட்சி கொடுக்கிறதற்குமுன் தன்னைத்தானே சில கேள்விகள் கேட்டு தன் சாட்சியின் உண்மைத்தனத்தை உறுதி பண்ணிக்கொள்ளவேண்டும்.

1. நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, என் ஜீவியத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவின் சமாதானம், சந்தோஷம், வல்லமையாகிய இவைகளைப் பெற்றுக்கொள்ளுமுன் என் ஜீவியம் எப்படிப்பட்டதாயிருந்தது?

2. எப்படி, எப்போது, எங்கே, ஏன் கிறிஸ்துவைப் பின் செல்லும்படி என் சித்தத்தை அவருக்கு ஒப்புக்கொடுத்தேன்?

3. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருப்பதால் என்னுடைய கடமை என்ன? சுகத்திலோ, வியாதியிலோ, ஜெயத்திலோ, சோதனையிலோ, துக்கத்திலோ என் ஜீவிய வேலையிலும், மரணத்திலும் கிறிஸ்துவுக்கும் எனக்குமுள்ள சம்பந்தமென்ன?

"ஒன்று எனக்குத் தெரியும். குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்". இந்தக் கேள்விகளைக் கேட்டு, தான் சொல்லப்போகிற சாட்சி தன் ஜீவியத்தை உள்ளபடி காட்டுகிறதாவென்று நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஒரு கூட்டத்தார் அல்லது தனித்தாள் சித்தியுள்ள சாட்சி சொல்லாதபடி தடுப்பதென்ன? நாம் சரியானபடி சாட்சி சொல்

லாதபடி தடுக்கும் சில காரியமுண்டு. இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவை என்னவென்று அறிந்து அவைகளைவிட்டுவிட திட்டமாய் ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.

1. அசுத்தம். இது கிரியைகளையும், நினைவுகளையும் குறிக்கும். (மத். 5: 8, 28; 15: 18-20; 1 கொரி. 6: 9-20; கலா. 5: 19-21; லூக். 7: 36-50; யோவா. 4: 4-30; 39-42; 8: 1-11; வெளி. 22: 15.)

2. புத்தியைக் கெடுக்கும் மதுக்களையும், மருந்துகளையும் சாப்பிடுதல்.

இயேசுவானவர் மருந்து கலந்த திராட்சரசத்தைக் குடிக்க மறுத்துவிட்டார் மாற். 15: 23.


3. அகங்காரம் அல்லது தன்னயம். இதில் பல வகைகள் அடங்கும். மன்னிக்கும் குணமின்மை மத். 6: 14, 15; 18: 35. அநேகர் தங்களை மிதமிஞ்சி நேசிப்பதால் மற்றவர்களை மன்னிக்க மனமற்றவர்களாயிருக்கிறார்கள்.

பகையும் பழிவாங்கும் தன்மையும். மத். 5: 20, 43, 48.

தற்பெருமை, சோம்பல்; கடமையைச் செய்யாதிருத்தல், எரிச்சல், மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்க மறுத்தல், மற்றவர்கள் செய்த நற்காரியத்தை ஒப்புக்கொள்ளாதிருத்தல், சகலத்தையும் தானே முடித்ததாகத் தன்னைப்பற்றி அதிகமாய் எண்ணல், புறங்கூறுதல் இப்படிப்பட்ட காரியங்களே சாட்சி சொல்வதற்குத் தடையானவைகள். இவைகளை நாமும் கவனித்து நடக்கவேண்டும்.

ஐந்தாம் அதிகாரம்.

தனித்தாளுக்குச் சாட்சிகூறல்.
Witness to Individuals.



கிறிஸ்துவும் நிக்கோதேமும்.
(தனித்தாள் சாட்சி.)

முந்தின அதிகாரங்களில் பகிரங்க சாட்சி கூறுதலைக் குறித்துப் பார்த்தோம். பகிரங்க சாட்சி கூறுதல் அவசியமென்றும், முக்கிய

மென்றும் அறிந்தோம். ஆயினும் பகிரங்க சாட்சிமட்டும் போதாது. குட்டையைக் கலக்கி மீன்பிடிப்போன் குட்டையைக் கலக்கியபின் தனித்தனியாக மீனைப் பிடித்துக் கூடையில் போடுகிறான். அவ்வண்ணமே நாமும் ஆட்களைக் கவனித்து தனித்தனியாய்ச் சாட்சிகூறி ஆதாயப்படுத்தவேண்டும். அதுமாத்திரமல்ல, எப்போதும் நாம் பகிரங்கச் சாட்சிகொடுக்கமுடியாமலிருக்கலாம், ஆனால் தனித்தனியாகவோ எப்போதும் சாட்சிகொடுக்க ஏதுவுண்டு. ஆகையால் பகிரங்க சாட்சியோடு திருப்தியடைந்திருக்காமல் தனியான சாட்சியும்கூற ஆயத்தமாயிருக்கவேண்டும். இதன் அனுகூலங்களைச் சற்று பார்க்கலாம்.

1. யாவரும் இதைச் செய்யலாம்.

ஒரு சபையை எடுத்துக்கொண்டால் அதில் பகிரங்க சாட்சி சொல்லக்கூடியவர்கள் வெகு சொற்பப்பேரே. ஆனால் தனித்தனியாக சாட்சிசொல்ல எல்லாராலும் கூடும். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு ஆளும் கிறிஸ்துவுக்காக இன்னொரு ஆளுக்குச் சாட்சிசொல்லலாம். பல வேலையினால் நெருக்கப்பட்டிருக்கிற ஒரு தாய் தன் பிள்ளைகளோடும், தன் வீட்டு வேலைக்காரரோடும், தன் வீட்டுக்குக் காய்கறி கொண்டுவரும் ஆட்களோடும் சாட்சிகூறலாம்.

வியாதியஸ்தருங்கூட சாட்சி பகர்ந்து ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணலாம். ஆஸ்பத்திரியில் வியாதியாயிருந்த ஒரு ஏழைப்பிள்ளை தனக்குச் சிகிட்சைசெய்துவந்த டாக்டருக்கு கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சிசொல்ல, தெய்வ பயமற்றிருந்த அவர், கிறிஸ்துவுக்கென்று தம்மை ஒப்புக்கொடுத்தார். ஒரு போலீஸ்காரன் தன்னுடைய கடமையைச் செய்துகொண்டிருக்கும்போதே கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகர்ந்தான். ரஸ்தாவில் நின்றுகொண்டு வண்டிகள் செல்லத் தக்க வழிகாட்டிய அவன் தன்னிடத்தில்வந்து பாதை கேட்ட ஜனங்களுக்கு மெய்யான வழியாகிய இயேசுகிறிஸ்துவையும் காட்டினான்.

இங்கிலாந்து தேசத்தில் பெரிய பரோபகாரியாய் விளங்கிய லார்ட் சேப்ஸ்பரி என்பவர் தெய்வ பயமற்ற ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவர். அங்கேயிருந்த வேலைக்காரப் பெண் அவரிடத்தில் கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சிகூறியதால் அவரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொண்டாள். கிராமங் கிராமமாய்ப்போய் பண்டமாற்றல் செய்யும் சிறு வியாபாரிகளும் இதைச் செய்யலாம். சில விசேஷித்த பிரசங்கிமார் இப்படிப்பட்ட தனிச்சாட்சியினால் முதலாவது ஆதாயப்படுத்தப்பட்டார்கள்.

தோட்டந்துரவுகளில் வேலைசெய்கிறவர்களும், காடு காக்கிறவர்களும், இதைச் செய்யலாம்.

2. இதை எந்த இடத்திலும் எக்காலத்திலும் செய்யலாம்.

இதற்கு ஆலயம் அவசியமில்லை. இதற்கு மணியடித்து ஜனங்களை அழைக்கவும் வேண்டியதில்லை. நாம் முன் பார்த்தபடி ரஸ்தாவில் போகும்போதோ, வேலைசெய்துகொண்டிருக்கும்போதோ அவர்களுக்குச் சாட்சிகூறலாம். யாரிடத்தில் சாட்சிசொல்லவேண்டியதிருக்கிறதோ அவர்களை நம்மோடு உலாவக் கூட்டிக்கொண்டுபோகலாம். அச்சமயத்தில் அவர்களுக்கு கிறிஸ்துவின் மகத்துவத்தைச் சொல்லி ஆதாயப்படுத்தலாம்.

3 எல்லாவகைப்பட்ட ஜனங்களுக்கும் இது ஏற்ற முறை.

சிலர் நம்முடைய ஆலயங்களில் வந்திருக்கமாட்டார்கள் ; பகிரங்கக் கூட்டங்களுக்கும் வராமலிருக்கலாம், ஆனால் நாமோ அவர்கள் இருக்கிற இடத்தில்போய் அவர்களுடன் தனித்துப்பேசி கிறிஸ்து பாவத்தினின்று இரட்சிக்கிறவர் என்ற சத்தியத்தைக் கூறலாம். பொதுவாக கூட்டத்தில் ஒரு மனுஷன் தன் மனதைத் திறந்து தன்

உள்ளத்திலுள்ளதை வெளியிடக் கூசுவான். ஆனால் தனிமையாகப் பேசும்போதோ தன் மனதிலுள்ளதைத் திறந்துசொல்லுவான். அப்போது அவனுடைய தேவைக்சேற்றபடி கிறிஸ்துவைக்குறித்து சாட்சி சொல்லலாம்.

4. இது அதிக பலனுள்ளதாகவிருக்கும்.

அநேகர் இவ்விதமாக ஆதாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மூடி துரையின் பிரசங்கத்திற்கும் அசையாதவர்கள் தனிச்சாட்சியின்மூலமாய் ஆதாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். "இரும்பை இரும்பு கருக்கிடும்" என்றபடி ஒரு தனித்தாள் இன்னொரு தனித்தாளோடு ஊக்கத்தோடும் ஆத்திரத்தோடும் பேசினால் நிச்சயமாகவே பலனுண்டாகும். ஆகையால் தனிச்சாட்சி முறையை சையாடுவோமாக.

இந்த ஊழியத்தை நாம் எவ்விதம் செய்யலாம். இந்த வேலையை ஆரம்பிப்பது இலேசான காரியமல்ல. ஆரம்பித்தபின் கூடியமட்டும் இலேசாகச்செய்யுக்கூடும்.

1. முதலாவது நாம் சாட்சிசொல்லத்தக்கதாக ஒரு ஆளைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆள் சம்பாதித்தபின் அவரோடு நாம் பேசக்கூடியவர்களாகவிருப்போம், ஆயினும் எந்த ஆளென்று எவ்விதமறிந்துகொள்ளலாம்? நாம் முன் பார்த்தபடி ஏற்ற ஆளை நமக்குக் காட்டும்படியாக ஆண்டவரை நோக்கிப் பிரார்த்தனை செய்யவேண்டும். அவர் தாமே நமக்கு ஏற்ற ஆளைக் காட்டுவார்; அதோடுகூட 'தூண்டிக்காரனுக்கு மிதப்பின் மேல்கண்' என்றபடி சாட்சிசொல்ல ஆசிக்கும் ஒருவன் ஆட்களின் பேரில் கண்ணுயிருக்கவேண்டும். அனுபவமுண்டாக உண்டாக அவன் இலேசாக அறிந்துகொள்ளக்கூடியவனுயிருப்பான். ஒரு சமயத்தில் மூன்று மனிதர் ஒரு காட்டின் ஊடே நடந்துபோனார்கள். அங்கே நின்றுகொண்டிருந்த பெரிய கருவாலி மரத்தைப் பார்த்து

அவர்களில் ஒருவன் பன்றிகள் நன்றாய்க் கொழுப்பேற இது ஏற்ற மரமென்றான். இன்னொருவன் தோல் பதனிட இதன் பட்டை விசேஷித்தது என்றான். மூன்றாவதாள் இந்த மரத்தி னின்று அதிகக் கரிக்கொட்டை விழுமென்று சொன்னான். இந்த மூன்றுபேர் வார்த்தையினின்றும் அவரவர் தொழில் இன்னதென்று அறிந்துகொள்ளுகிறோம். முதல் ஆள் ஒரு கசாய்கடைக்காரன்; அவன் அந்த மரத்தைப் பார்த்தபோது அந்த மரத்தின் கனியை பன்றி கள் தின்று கொழுப்பேறி தனக்கு லாபம் கிடைக்குமென்று எண்ணி னான். இரண்டாவது ஆள் தோல் பதனிடுகிறவன்; அவன் மரத்தின் பட்டையைக்கொண்டு தோல் நன்றாய்ப் பதனிடலாமென்று உணர்ந் தான். மூன்றாவது ஆள் மரங்களைச் சுட்டு கரி விற்கிறவன்; இவன் இந்தப் பெரிய மரத்தைச் சுட்டால் அதிகக் கரி கிடைக்குமென்று, எண்ணினான். ஆக, இம்மூவரும் சாட்சிசொல்வோருக்கு ஒரு பாடத் தைக் கற்பிக்கின்றனர். ஒவ்வொரு ஆளும் நாம் யாரிடம் சாட்சி சொல்லி யாரை ஆதாயப்படுத்தலாமென்று கவனமாயிருக்கவேண்டும்.

ஒருநாள் நான் பிரயாணம்செய்த மோட்டார்வண்டியில் வேறு சிலர் வந்தார்கள். அது மாலை மயங்குகிற நேரம். என் பக்கத்திலி ருந்தவர் ரஸ்தாவுக்கு சற்று தூரத்திலுள்ள மலைகளைப் பார்த்துக் கொண்டே வந்தார். சிறிது நேரத்துக்கப்பால் திடீரென்று தன்னோடு வந்தவர்களைப் பார்த்து இதோ மலையில் யாரோ நெருப்பு வைத்துவிட் டார்கள்; உடனேபோய் அணைக்கப்பார்க்கவேண்டுமென்று சொன் னார். அப்போது நான் அவர்களை மலைகளிலுள்ள காடுகளைக் கவனிக் கும் உத்தியோகஸ்தர்கள் என்று அறிந்துகொண்டேன். நான் அந்த நெருப்பை ஆரம்பத்தில் கண்டுகொள்ள முடியவில்லை, அவர்களுடைய கண்களோ அதைப் பார்க்கத்தக்கதாகப் பழகியிருந்தன. இதே மாதிரிதான் சாட்சி சொல்லுகிற ஒவ்வொரு ஆளும் தனக்கேற்ற உசித சமயத்தைக் கண்டுகொள்ள பழகி இருக்கவேண்டும்.

ஒருநாள் சில சிநேகிதர்கள் சம்பாஷணை செய்துகொண்டு நின் றார்கள். சாயங்காலமான அந்நேரத்தில் நீர்வாத்துகள் பெரிய கூட்ட

மாக அவர்கள் தலைக்குமேல் தாழ்வாய்ப் பறந்துகொண்டுபோயின. இதைப் பார்த்தவர்களில் ஒருவர் 'இப்போது என் துப்பாக்கி என் கையிலிருந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்' என்றார். வேட்டையின்மேல் பிரியமுள்ள இவர் அந்தப் பட்சிகள் வந்த சமயத்தை ஆதாயப்படுத்த விரும்பினர். அவ்வண்ணமே சாட்சிசொல்லும் ஒருவன் தனக்கேற்ற ஒரு ஆளைக் கண்டு சாட்சிகொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் சிலரோடு தனியாய்ப் பிரயாணம்பண்ணலாம். அல்லது அவர்கள் நமது வீடுகளுக்கு வரலாம், அல்லது வேறுவிதமாக நாம் அவர்களோடு சம்பந்தப்படலாம். அப்படிப்பட்ட சமயங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டும்.

2. ஆளைக் கண்டபின் சம்பாஷணை ஆரம்பிக்கவேண்டும். நம்முடைய தேசத்தில் இது கஷ்டமல்ல. சாதாரணமாய் ஒருவரோடொருவர் இலேசாகப் பேசிக்கொள்ளுவார்கள். ஆகையால் நாம் மற்றவர்களோடு சம்பாஷணையை ஆரம்பித்து நம்முடைய முக்கிய விஷயத்திற்கு வரலாம். தேசத்தின் நிலைமையை எடுத்துக்காட்டி இது முன்னேறத்தக்கவழி என்னவென்று கேட்டு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி பகரலாம். சொந்த ஜீவியத்தில் உண்டாகும் சோதனைகளை மேற்கொள்ளும் விதத்தைப்பற்றிப் பேசி கிறிஸ்து தனக்கு கொடுத்திருக்கும் வல்லமையைக்குறித்துச் சாட்சிபகரலாம். எவ்விதம் சந்தோஷமாய் இருக்கலாம் என்று கேட்டு உலகம் தரக்கூடாத சமாதானத்தைக்கூறும் இயேசுகிறிஸ்துவைக்குறித்துப் பேசலாம். இவ்விதமாக பல கேள்விகளின் மூலமாய் சம்பாஷணையை ஆரம்பித்து கிறிஸ்துவுக்குச் சாட்சிகூறலாம்.

இன்னொரு வகை என்னவெனில் நல்ல கைப்பிரதி ஒன்றை அல்லது சிறு புஸ்தகமொன்றை ஆட்களுக்குக் கொடுத்து அவர்கள்

வாசிக்கும்படி செய்யவேண்டும். வாசித்தபின் அதைப்பற்றிக் கேள்வி கேட்டு கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சி கொடுக்கவேண்டும். சில நல்ல கைப்பிரதிகளைத் தெரிந்து ஏற்கனவே வாசித்து அதன் அருத்தத்தை அறிந்துகொள்ளவேண்டும்.

பட்சம் காட்டுவதால் சாட்சிசொல்ல சமயத்தை உண்டாக்கிக் கொள்ளலாம். கஷ்டப்படுகிறவர்கள் அநேகர் உண்டு. அப்படிப் பட்டவர்களுக்கு நாம் உதவிசெய்யவேண்டும் ரெயில் வண்டியில் போகும்போது இடமில்லாமல் ஒருவர் கஷ்டப்படலாம்; அப்படிப்பட்டவருக்கு நமது பக்கத்தில் இடம்கொடுத்தால் சம்பாஷணையை ஆரம்பிக்கலாம். இன்னும் இவைபோன்ற முறைகளை உபயோகப்படுத்தலாம். நாம் யூகமாகமாத்திரம் இவைகளைச் செய்யவேண்டும்.

3. சம்பாஷணையை ஆரம்பித்தபின் அந்த ஆளினுடைய நிலைமை இன்னதென்று அறிந்துகொள்ளவேண்டும்.

இதுவும் அனுபவத்தின்பேரில் படிப்படியாய்வரும். பல கேள்விகளைக் கேட்பதால் அவனுடைய மனநிலைமையை அறிந்துகொள்ளலாம். அவனுடைய முகத்தைப் பார்ப்பதினாலும் 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்றவாறு அவனது உள்ள நிலைமையைத் தெரிந்துகொள்ளலாம். நாம் கேட்கும் கேள்வி அல்லது நாம் சொல்லும் வார்த்தைகள் அவனுக்குள் வருத்தத்தை அல்லது சந்தோஷத்தைப் பிறப்பிக்கலாம் இதை முகம் தெளிவாய்க் காட்டும், அவனுடைய குரலும் அவன் நடந்துகொள்ளும் விதமும் அவனுடைய மனப்பான்மை எப்படிப்பட்டதென்றும் காட்டும். அதோடு ஆவியானவரும் நமக்கு ஒருவாறு அந்த ஆளின் நிலைமையைக் காட்டுவார். இவ்விஷயத்தில் நாம் ஆவியானவரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவருடைய நடத்துதலுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

4. நாம் முடிவாக கிறிஸ்துவை இரட்சகராகக் காட்டி அவருக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும்படி ஏவி கடவுளுடைய வசனத்தைக் கொண்டு பாவமன்னிப்பையும் நித்திய ஜீவனைக்குறித்தும் சொல்லி (அப். 10: 43; 13:39; யோவா. 3:36; 5: 24) சித்தியுள்ள கிறிஸ்தவ ஜீவியம்செய்யும் வழியைக் காட்டவேண்டும்.

ஆரும் அதிகாரம்.

தனிச்சாட்சி சொல்வதில் கவனிக்கவேண்டிய சில முக்கிய குறிப்புகள்.

Suggestions to Individual Workers

நாம் சித்தியுடன் தனிச்சாட்சி கூறவேண்டுமானுல் கவனிக்க வேண்டிய சில ஆலோசனைக் குறிப்புகள் உண்டு.

(1) பொதுவாக தனிச்சாட்சி சொல்லுகிறவர்கள் ஆண்பாலர் ஆண்பாலருக்கும், பெண்பாலர் பெண்பாலருக்கும் சாட்சி கூற வேண்டும். இந்தப் பிரமாணத்திற்கு புறநடையிருக்கலாம், வயது சென்ற தாய்மார் பாலியருக்கும் வாலிபருக்கும் சாட்சி சொல்லக் கூடும். ஆவியானவர் சில சமயங்களில் நமக்கு எதிர் பாலருக்கு சாட்சி கூற ஏவலாம். இப்படித் திட்டமாய் ஏவப்பட்டாலொழிய மற்றபடி மேற்கூறிய பிரமாணத்தைக் கையாடுவது நன்று.

(2) அந்தந்த வயதுக்குத் தக்கபடி ஆட்களைத் தெரிந்து கொண்டு சாட்சி கொடுக்கவேண்டும். வயோதிபருடைய வார்த்தையைப் பார்க்கிலும், வாலிபரின் வார்த்தையை வாலிபர் கேட்க விரும்புவார்கள். ஏனெனில் இருவருடைய அனுபவமும் ஒன்று போலிருக்கும்.

(3) சாட்சி சொல்லுகிறவன் தன்னுடைய சொந்த சாமர்த்தியத்தின் பேரில் சார்ந்திருக்காமல் ஆவியானவரின் பேரிலேயே சார்ந்திருக்கவேண்டும். வேத புஸ்தகத்தைத் தாராளமாய் உபயோகப்படுத்தி அதை அவர்கள் மனதில் பதிக்கப் பிரயாசப்படவேண்டும்.

(4) மரியாதையாகப் பேசவேண்டும். கோபமாகாது. தர்க்கத்திற்கு இடங்கொடுக்கக்கூடாது. அவசரப்படாமல் கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி கொடுக்கவேண்டும். கூடுமானுல் யாரிடம் சாட்சி

கொடுக்கிறோமோ அவர்கள் நம்மோடு ஜெபம் பண்ணும்படி தூண்ட வேண்டும். இவ்விதமாக நாம் அந்த ஆளை ஆதாயப்படுத்தக்கூடிய தாய்ச் சாட்சி கூறவேண்டும்.

சாட்சி கூறுவதில் தளர்ச்சியடையாமல் ஊக்கத்தோடு முயற்சி செய்வோமானல் சித்தியுள்ள ஊழியம் செய்வோம்.

நாலாம் பாகம்.

பற்பல வகைப்பட்ட தனி ஆட்களுக்கு சாட்சி சொல்லும் விதம்.

Witness to Individuals of Different Kinds.

சாட்சி சொல்லுதல் முக்கியமான காரியமென்று முன்னமே பார்த்திருக்கிறோம். ஆயினும் அந்தந்த ஆளின் தேவைக்குத்தக்கதாக நம்முடைய சாட்சி இருக்கவேண்டும். அந்தந்த ஆளின் நிலைமையை அறிந்து அதற்குத்தக்கதாக சாட்சி கூறவேண்டுமேயன்றி பொதுப் படக் கூறுவது பலன் தராது. இன்னொரு விதமாகச் சொன்னல் வியாதிக்கேற்ற மருந்து கொடுக்கவேண்டுமேயன்றி பொதுப்பட மருந்து கொடுக்கக்கூடாது. ஆகையால் அந்தந்த ஆளின் தேவையை அறிந்தே நாம் சாட்சி கூறவேண்டும்.

முதலாம் அதிகாரம்.

கிறிஸ்துவையறியாத இந்து பக்தனுக்குச் சாட்சி பகர்தல்.

Witness to a Hindu Bakta not Knowing Christ.

நாம் ஆட்களை பாகுபடுத்தும்போது பொதுப்பட இரண்டு வகையாய்ப் பிரிக்கலாம். ஒன்று புறமதஸ்தர் மற்றது கிறிஸ்தவர். நாம் முதலாவது புறமதஸ்தரை எடுத்துக்கொள்வோம். இவர்களில் அநேகர் தங்கள் மதத்தின்மேல் பக்தியுடையவர்கள். தங்களுடைய

மார்க்கானுச்சாரங்களைக் கைக்கொள்ளுவதில் ஜாக்கிரதையுடையவர்கள். இப்படிப்பட்ட ஒருவன் கிறிஸ்துவை அறியாதவனாயிருக்கிறான். இவனுக்கு நாம் சாட்சி சொல்லுவதெப்படி? முதலாவது கவனிக்கவேண்டியது, இந்த ஆளை மதிக்கவேண்டும். மரியாதையாக நடத்தி தான் சத்தியமென்று ஒப்புக்கொண்ட விஷயத்தில் உண்மையாயிருப்பதற்காகச் சந்தோஷப்படவேண்டும். அவர் நம்மோடு தமது மனதில் உள்ள விஷயங்களைத் தாராளமாய்ப் பேசும்படி இடங்கொடுக்கவேண்டும். அதற்குப் பிற்பாடு "ஐயா இந்த வழியைத் தவிர நீங்கள் வேறு வழியை கேள்விப்பட்டதில்லையா" என்று கேட்கவேண்டும். அவர் இல்லை என்று சொல்லலாம். அல்லது பல மார்க்கங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்களென்று சொல்லலாம். அதற்கு மறுமொழியாக "நான் ஒரு வழியைப் பற்றிக்கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி நீங்களும் அறிவது நன்மையாக இருக்கும்" என்று சொல்லி யோவா. 10 : 9-ஐ வாசித்துக் காட்டலாம். அந்த வாசல் இயேசுகிறிஸ்து என்றும், அவர் உலகத்துக்கு மனிதரை இரட்சிக்கிறதற்கு வந்தவர் என்றும் சொல்லவேண்டும். கடவுள் அன்பு நிறைந்த தகப்பனென்றும், மனுஷர் ஒவ்வொருவர்மேலும் அன்பு கூறுகிறாரென்றும், அவர்கள் ஈடேற்றம் பெற இயேசுகிறிஸ்து தம்மைத் தியாகமாகக் கொடுத்தாரென்றும், இன்றைக்கும் அவர் உயிருள்ளவராய்த் தம்மிடம் வருபவரை ஏற்றுக்கொண்டு, பாவமன்னிப்பருளுகின்றாரென்றும் கூறவேண்டும். இயேசுகிறிஸ்து குருவாக மனிதருக்கிருக்கும் மயக்கத்தை நீக்கி ஞானத்தைத் தருகிறவர் என்றும் காட்டவேண்டும். ஒரு கிறிஸ்தவ பக்தன் பாடியபடி இயேசுவின் நாமம் விசேஷித்ததென்று காட்டவேண்டும்.

நன்னெறி புகுத்திடும் நவையி னீக்கிடும்
இன்னலை யகற்றிடும் இகல் செகுத்திடும்
உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும்
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே.

அன்பினுக் குருவம் நல்லறத்துக் காலையம்
மன்பதைக் கருள்மழை வழங்கு பைம்புயல்
நின்பர மென்றினை வோர்க்கு நித்யபேர்
இன்பசஞ்சீவிதம் யேசு நாமமே.

தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஓதலால் கருதில் யாதுமோர்
அருமையும் பயனும்ஒன் றில்லை யாதலால்
இருமையுந் துணையெனக் கியேசு நாமமே.

இன்னொரு வசனமும் இவருக்குச் சொல்லக்கூடியது. மாற். 7: 21-23. இந்த வசனத்தை எடுத்து வாசித்து பாவமாவது என்ன என்று சற்குரு யேசு போதித்திருக்கிறார். அது வெறும் சடங்காசாரத்திற் குரியதாயிராமல் உள்ளான தன்மையுடையது. அது அவனுடைய ஜீவியத்தைக் கறைப்படுத்திக் கடவுளின் திருக்கோயிலாயிருப்பதற்குப் பதிலாக பிரயோஜனமற்ற அசுத்தம் நிறைந்த இடமாய்ப் போகிறதுயென்று விளக்குக.

யோவா. 3: 3. இந்த வசனத்தை வாசித்து பாவ ஜீவியத்தினின்று விலகி இரட்சிப்படைய வேண்டுமென்றால் சற்குரு காட்டிய வழி மறுபிறப்பே என்று காட்டவேண்டும். "மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை" யென்று நமது தேச பக்தனும் கூறி இருக்கிறார். ஆகவே இரட்சிப்பென்பது இனி எப்போதோ வரப்போகிற ஒரு சம்பவமாயிராமல் இப்போது நாம் அனுபவிக்கவேண்டிய ஒரு அனுபவமாயிருக்கிறதென்று காட்டவேண்டும்.

யோவா. 3: 16. இந்த வசனத்தை வாசித்துக் காட்டி இரட்சிப்படையும் வழி இயேசுகிறிஸ்துவே என்று காட்டவேண்டும். அப். 16: 30-31-ஐயும் வாசித்து விளக்கிக் காட்டவேண்டும். இப்படி கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவன் அவருடைய உதவி

யைப்பெற்று நல்ல ஜீவியம் செய்யக்கூடியவனுயிருக்கிருன். தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டவைகளை முடிவுபரியந்தம் காத்துக்கொள்ளுகிறவரென்றும் காட்டவேண்டும். முடிவில் சொந்த அனுபவத்யும் சாட்சியாகக் கூறவேண்டும்.

முன் சொன்னதுபோலவே மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்.

இரண்டாம் அதிகாரம்.

கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்பட்டும் அதற்கு விரோதமாகப் பகை சாதிக்கிறவர்களுக்குச் சாட்சி கூறும் விதம்.

Witness to those who know Christ but hate Him.

இவர்களுக்குச் சாட்சி கொடுப்பது நமது ஜீவியந்தான். இவர்களுக்கு நம்மால் கூடியபோதெல்லாம் அன்பைக் காட்டி உதவிசெய்யவேண்டும். இப்படிச் செய்வதால் கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ்தவர்களைப்பற்றியுமுள்ள தப்பிதமான எண்ணங்களை எடுத்துப்போடலாம். அப்படி எடுத்துப்போடும்போது நம்முடைய வார்த்தைக்குச் செவிகொடுப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு ஆளை நாம் சந்திக்கச் சகவாசம் கிடைக்கும்போது அவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய விதம் என்ன? நாம் அவர்களை மரியாதையாய் ஏற்றுகொள்வதே. அதன்பின் ஊரின் செய்திகளைப்பற்றியும் இயற்கையின் புகழைப்பற்றியும் பேசி முடிவாக ஒரு உபமானத்தைக் கூறி சத்தியத்தைச் சாட்சியாய்க் கூறலாம்.

ஒரு மனுஷன் தன் ஊரிலுள்ள வைத்தியரைப்பற்றி தப்பிதமான எண்ணங்கொண்டிருந்தான். அவர் தனக்கு விரோதியென்றும், அவரிடத்தில் சகவாசம் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும்

எண்ணியிருந்தான். வைத்தியரோ வெகு நல்ல மனுஷன். அவனுக்கு உதவிசெய்யவேண்டுமென்பதே அவருடைய ஆசை. இந்த மனுஷனுக்கு ஒரு வியாதியுண்டாயிற்று. வைத்தியனிடம் போகவே இவனுக்கு மனமில்லை. சிநேகிதர் சொல்லியும் கேட்கவில்லை "அவரிடத்தில் என் வியாதியைச் சொல்லமாட்டேன்" என்று வைராக்கியமாயிருந்தான். என்றாலும் வியாதி முற்றினது. சிநேகிதர் மறுபடியும் ஆலோசனை கூறினார்கள்; வைத்தியரிடம் சொன்னார்கள். வைத்தியர் சந்தோஷமாக அவனைப் பார்க்க வீட்டிற்குப்புறப்பட்டார் வைத்தியரை பார்த்த மாத்திரத்தில் இவனுக்குக் கோபமும், வெறுப்புமுண்டாயிற்று. என்றாலும் வைத்தியர் இதைக் கவனிக்காமல் அவனிடம் பட்சமாய்ப் பேசி, அன்பாகத் தொட்டு, கவனமாய்ச் சோதித்து கைகண்ட மருந்தைக் கொடுத்துவந்தார். படிப்படியாக இவன் குணம் மாறிற்று. தனக்குள்ள உபத்திரவத்தைத் தாராளமாகச் சொன்னான். அன்புள்ள டாக்டர் இரணவைத்தியம் செய்து அவனைச் சுகப்படுத்தினார். இருவரும் பின்னால் பிராண சிநேகிதர்களானார்கள்.

இந்த மனுஷனைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அவன் முதவில் நடந்துகொண்டது சரியா என்று கேட்கலாம். அப்போது அந்த ஆள் அவன் ஒரு பைத்தியகாரன் என்றாவது, புத்தியில்லாதவனென்றாவது சொல்லலாம். அப்படி அவன் இருந்திருக்கக்கூடாதென்றும் கூறலாம். அப்போது இப்படித் தான் தற்காலத்திலும் சிலர் இருக்கிறார்கள் என்று சொல்லி இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி சொல்லலாம்.

ஏசா. 53 : 6. "எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள் நன்மைசெய்கிறவனில்லை, ஒருவனாகிலுமில்லை" என்ற வேதவாக்கியத்தை எடுத்துக்காட்டவேண்டும். சிலர் பாவத்தைச் செய்து மறைத்துக்கொண்டிருந்தாலும் அது அவர்களைத் தொடர்ந்து

பிடிக்கும் ஏசா. 57: 21. "துன்மார்க்கனுக்குச் சமாதானமில்லை யென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்". இந்த வசனங்களை எடுத்துக்காட்டி பாவத்தைப்பற்றி உணர்த்தவேண்டும் 2 கொரி. 5: 21, நம்முடைய பாவம் நீங்கும்படியாக கிறிஸ்துவே நமது பாவங்களை ஏற்றுக்கொண்டாரென்று சொல்லி, அவருடைய பாடுகளைப்பற்றியும் உயிர்த்தெழுதலைக் குறித்தும் கூறவேண்டும்.

மத். 11: 28 இந்த வசனமானது பாவத்தினால் வருந்துபவர்கள் இரட்சிப்படையும்படி அழைக்கிற கிறிஸ்துவின் சத்தம் என்று காட்டவேண்டும். கிறிஸ்து ஒரு சிநேகிதனென்றும் அவர் யாவருக்கும் உதவிசெய்யக்காத்திருக்கிறாரென்றும் காட்டவேண்டும்.

கிறிஸ்துவைப்பற்றி நம்முடைய சொந்த அனுபவத்தைக் கூறி அந்த ஆளைப் பார்த்து உமக்கும் கிறிஸ்து சிநேகிதர்தான்; அவரை ஏற்றுக்கொள்ளுமென்றும் அழைக்கவேண்டும்.

மூன்றும் அதிகாரம்.

தனக்கு இரட்சகர் வேண்டுமென்று தேடும் ஆள்.

Those who seek a Saviour.

முந்தின இரண்டு ஆட்களுக்கும் வித்தியாசமான ஆளைப்பார்க்கிறோம். வாஸ்தவத்திலே தங்களுடைய பாவங்களை உணர்ந்து இரட்சிப்படையும் வழியைத் தேடும் ஆட்களுமுண்டு. இவர்கள் விஷயத்தில் நாம் என்னசெய்யலாம்?

1. இயேசுகிறிஸ்துவே பாவத்தைச் சுமக்கிறவராகக் காட்டவேண்டும்.

ஏசா. 53: 6. இதை வாசிக்கும்படி செய்யவேண்டும். "இந்த வசனத்தின் முதற்பாகம் உனக்கு இரட்சிப்புத் தேவையென்று காட்டுகிறது. இரண்டாவது பாகமோ உனக்கு இரட்சிப்புண்டாக கடவுள் ஏற்படுத்தின வழியைக் குறிக்கும்." என்று சொல்லி முதலாம் பாகத்தைத்திரும்பவும் வாசிக்கச் சொல்லவேண்டும், "நாமெல்லாரும் ஆடுகை

ளைப்போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்". இதனுடைய அர்த்தமென்ன? இது உன் விஷயத்தில் உண்மையாவென்று கேட்கவேண்டும். அவன் 'ஆம்' என்று சொல்வான். அப்போது நீ என்ன நிலைமையிலிருக்கிறாயென்று கேட்டு "நான் இழந்துபோன நிலைமையிலிருக்கிறேன்" என்று சொல்லச் செய்யவேண்டும்.

இப்பொழுது அக்கிரமத்தை யார்மேல் சுமத்தியிருக்கிறார்? இரண்டாவது பாகத்தை வாசிக்கவேண்டும். "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்". அவர் என்பது யாரைக் குறிக்கிறது? கிறிஸ்துவைக் குறிக்கிறதென்று காட்டவேண்டும். பாவமானது கிறிஸ்துமேல் சுமத்தப்பட்டிருப்பதால் அவரைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொள்ளத் தூண்டவேண்டும்.

கலாத். 3: 13 கிறிஸ்து நமக்கு சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். யாரைமீட்டுக்கொண்டார் என்றும் எவ்விதம் மீட்டுக்கொண்டாரென்றும் கேள்விகேட்டு நீ இதை விசுவாசிக்கிறாயாவென்று கேட்கவேண்டும். தன்னுடைய பெயரை வைத்து அந்த வசனத்தை வாசிக்கும்படிச் செய்யவேண்டும்.

2 கொரி 5: 21. இந்த வசனத்தையும் விளக்கிக்காட்டி தன்னுடைய சொந்தப் பெயரை வைத்து வாசிக்கும்படி செய்யவேண்டும்.

2. கடைசிமட்டும் இரட்சிக்க இரட்சகர் வல்லவரேன்றும் இயேசு கிறிஸ்துவை உயிரோடிருக்கும் இரட்சகர் என்றும் காட்டவேண்டும்.

பாவ சுமைதாங்கியாகமட்டும் காட்டுவது போதாது. அவர் பாவமன்னிப்பருளுகிறவர் மாத்திரமல்ல, நம்மை பாவத்தின் வல்லமை

யினின்று மீட்டு கடைசிமட்டும் காத்துக்கொள்ள வல்லவரென்றும் காட்டவேண்டும். இதற்கேற்ற வசனம் எபிரே. 7 : 25. தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராதலால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்கவல்லவராயுமிருக்கிறார். இந்த வசனத்தை வாசிக்கும்படிச்செய்து இயேசு எப்போதும் உயிரோடிருக்கிறவர் என்று வற்புறுத்துக.

இன்னொரு நல்ல வசனம் யூதா. 24. வழுவாதபடி இவர்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சி யோடே அவர்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர், இந்த வசனத்தில் கிறிஸ்து வழுவாதபடி காக்கக்கூடியவர் என்று எடுத்துக் காட்டுக. உயிரோடிருக்கிற கிறிஸ்து ஒருவர்தான் விழாத படி காக்கக்கூடியவர் என்று காட்டுக.

மத். 28 : 18. இந்த வசனத்திலிருந்து கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவன் தன் சொந்த பெலத்திலல்ல. அவருடைய பெலத்தில் நிற்கவேண்டுமென்று காட்டுக.

1. பேது. 1 : 5, 1 கொரி. 5 : 1-4. இந்த வசனங்களும் இதற் கதிக உதவியாயிருக்கும். கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்பது மாத்திரமல்ல, அவர் உயிருள்ளவராக இருந்து பாவத்தை மேற்கொள்ள உதவிசெய்கிறார் என்று தெளிவாய்க் காட்டுக.

3. இயேசுவானவரை கர்த்தரும் ஆண்டவருமாகக் காட்டவேண்டும்.

அப். 2 : 36 நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவை யே தேவன், ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார். ஆண்டவர் கிறிஸ்து என்ற வார்த்தைகளை விளக்கிக்காட்டி இயேசுவை தெய்வீக ராஜா வாக ஏற்றுக்கொண்டு அவருக்கு முழு இருதயத்தையும் எண்ணத்

தையும் வார்த்தையும் செய்கையும் ஒப்புக்கொடுக்கவேண்டும். ரோ. 10: 9. இதற்குதவியாயிருக்கும். தன் சொந்த ஜீவியத்திற்கும் இயேசுவையே ஆண்டவராக வைக்கும்படி ஏவவேண்டும்.

4. இயேசுவைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கோள்ளும் வழியைக் காட்டவேண்டும்.

இயேசுவானவரை பாவசுமைதாங்கியாகவும் உயிருள்ள இரட்சகராகவும் ஆண்டவராகவும் அறிவது போதாது. அவரைச் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும்.

யோ. 1: 12. இது ஒரு நல்ல வசனம் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேருக்கும் கடவுளுடைய பிள்ளைகளாகும் அதிகாரத்தைக் கொடுத்தார். இந்த வசனத்தை வாசித்து அவரை எப்படிப்பட்டவராக ஏற்றுக்கொள்ளவேண்டும்? பாவ சுமை தாங்கியாகவும் உயிருள்ள இரட்சராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுகொண்டவருக்கே இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று காட்டி அவரை ஏற்றுக்கொள்ளத்தூண்டுக.

யோ. 3: 16. "விசுவாசிக்கிறவர்கள் எத்தனை பேரோ" விசுவாசம் என்ற பதத்தில் மூன்று காரியங்களடங்கும். அறிவு, ஒப்புக்கொள்ளுதல், கீழ்ப்படிதல். அதாவது மேற்சொன்ன மூன்று விதமாக கிறிஸ்துவை அறிந்து அதை ஒப்புக்கொண்டு அதின்படி செய்தலைக் குறிக்கும். பின்வரும் வசனங்களையும் உபயோகிக்கலாம் அப். 10: 43, 13: 39.

5. பகிரங்கமாக கிறிஸ்துவை அறிக்கையிடுவதின் அவசியத்தைக் காட்டவேண்டும்.

பகிரங்கமாக அறிக்கையிடாத ஒரு ஆளினுடைய குணப்படுதல் பூரணமான குணப்படுதலென்று சொல்லமுடியாது. ஆகையால்

வாயினால் அறிக்கையிடும்படி செய்யவேண்டும். இதற்கேற்ற வசனம் ரோ. 10: 9-10. இந்த வசனத்தை வாசிக்கும்படிசெய்து அவன் பகிரங்கமாக அறிக்கைசெய்யும்படி கேட்டு சமயத்தையுண்டாக்கவேண்டும்.

6. இரட்சிப்பின் நிச்சயத்தைக் காட்டவேண்டும்.

இதைப்பற்றி சந்தேகமிருப்பது ஜீவிய வளர்ச்சிக்கு உதவியாயிராது. இரட்சிப்பு நிச்சயம் என்று காட்டுவதற்கேற்ற வசனம் யோவா. 3: 36, இதை விளக்கிக்காட்டுக.

7. கிறிஸ்தவ ஜீவியம் செய்வதற்கு உதவியான ஆலோசனைகளைக் கூறவேண்டும்.

இது முக்கியமானது. ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்கொப்புக் கொடுக்கும்போது கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பிக்கிறான். இந்த ஜீவிய பிரயாணத்தில் பலவித கஷ்ட நஷ்டங்கள் வரும். அவைகளை மேற்கொள்ள வழிவகை தெரிந்திருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவன் சிறு குழந்தையாய் பிறந்திருக்கிறான். உயிரோடெழுப்பட்ட சிறுமிக்கு ஆகாரம் கொடுக்கும்படி ஆண்டவர் சொன்னதுபோல், புதிதாய்க் குணப்பட்ட அவனுக்கும் ஆகாரம் கொடுக்கவேண்டும். அது நாம் கொடுக்கும் ஆலோசனைகளே.

(1) அறிக்கை செய்தல்,

மத். 10: 32. ஒவ்வொருவரும் சமயம் கிடைக்கும்போதெல்லாம் கிறிஸ்துவை அறிக்கைசெய்யவேண்டும்.

(2) ஒழுங்கான வேத தியானம்.

சங். 119: 11; 1 பேது. 2: 2. களங்கமில்லாத பாலாகிய வேதத்தைப்படித்து கிறிஸ்தவ ஜீவியம்செய்யப் பழகவேண்டும்.

(3) ஜெபம்.

இதுவும் முக்கியமானது. 1 தெச. 5: 17; ஏசா. 40: 31. இடைவிடாமல் ஜெபித்து ஆண்டவரிடத்தில் வல்லமையைப் பெற்றுக்கொள்ளச்செய்யவேண்டும்.

(4) பூரணமாய் ஒப்புக்கொடுத்தல்.

அப். 5: 32. தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பூரணமாய்த் தங்களை ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு ஆவியானவரின் உதவியுண்டு. இது முக்கியமான காரியம்.

(5) தாராளமாய்க் கர்த்தருக்கென்று கொடுத்தல்.

2 கொரி. 6: 8; மல்கி. 3: 10. அநேகர் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளராமலிருப்பதின் காரணம்: தேவனுடைய நாமத்துக்கென்று தங்கள் பொருள்களைக் கொடுக்காமலிருப்பதே. நாம் கொடுக்கும் காணிக்கையின் விசேஷ மென்னவென்றால் சகலமும் கடவுளுக்குச் சொந்தமென்றும், நாம் அவர் கையினின்று வாங்கி உபயோகிக்கிறவர்கள் மாத்திரமென்றும் ஒப்புக்கொள்ளுகிறோம். • இன்னொரு விதமாய்ச் சொன்னால் கடவுளை நமது ஜீவியத்தின் முதலாளாக வைக்கிறோம். இந்த சிந்தை கிறிஸ்தவ ஜீவிய வளர்ச்சிக்கு மிகவும் பிரயோஜனமானது. இந்த சத்தியத்தை வற்புறுத்திக் காட்டவேண்டும்.

(6) கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்தல்.

இது முக்கியமானது. நம்முடைய ஜீவியம் பலமுள்ளதாயிருக்க வேண்டுமென்றால் நாம் மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவரப் பிரயாசப்படவேண்டும் மத். 25: 13-30. தன்னுடைய ஒரு தாலந்தை உபயோகப்படுத்தாத மனுஷனின் நிர்ப்பாக்கிய நிலமையை எடுத்துக்காட்டிக் கிறிஸ்துவுக்காக உழைப்பதின் முக்கியத்தைக் கூற வேண்டும்.

இவ்விதமாக மேற்சொன்ன ஆறு காரியங்களையும் திரும்பத் திரும்பச் சொல்லி மனதில் பதிக்கவேண்டும்.

நான்காம் அதிகாரம்.

சாக்குப்போக்குச் சொல்லுவோர்க்குச் சாட்சி.

Those who give Excuses.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதின் அவசியத்தை அறிந்திருந்தும் அவரை ஏற்றுக்கொள்ளாமல் பல சாக்குப்போக்குச் சொல்வோருமுண்டு. அவர்களில் சிலர் சொல்லும் காரணங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கவைதான். ஆயினும் நாம் உள்ளாக ஆராய்ந்து பார்ப்போமானுல் அவைகள் பலமற்ற காரணங்களென்று காட்டலாம்.

(*a*) **நான் கிறிஸ்தவனுனல் என் வியாபாரத்தில் அல்லது தொழிலில் சித்திபெறமுடியாது.**

இதை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளவேண்டும். எபேசுப்பட்டணத்துத் தட்டார் அப்படி நினைத்தார்கள் அப். 19 : 23-27 பிலிப்புப் பட்டணத்திலுள்ள சில எஜமான்களும் தங்களுடைய ஆதாயத்தின் நம்பிக்கை அற்றுப்போயிற்று என்று எண்ணிஞர்கள் அப். 16 : 16-21. மாயவித்தைக்காரருடைய சம்பாத்தியங்களும் நஷ்டமாயிற்று அப். 10 : 19 இவை போன்ற வசனங்களை நாம் பார்க்கும்போது சில வியாபாரங்களுக்கும், தொழில்களுக்கும் நஷ்டமுண்டாகும். இதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். சொல்லப்போனுல் வற்புறுத்தவேண்டும். தற்காலத்தில் சாராய கள்ளுக்கடைகள் குத்தகை எடுப்பதாலும் இப்படிப்பட்ட இடங்களில் வேலை செய்வதாலும் ஊதியமடைவோர் கிறிஸ்தவனுகும்போது அவைகளை விடவேண்டியதிருக்கும். இவர்களுக்கு நாம் காட்டவேண்டிய முக்கிய சத்தியம் மாற். 8 : 31-ல் காணப்படும். உலகமோ? ஆத்துமாவோ? எது விசேஷமென்பதை எடுத்துக்காட்ட வேண்டும். ஆத்துமாவே விசேஷமென்பதை வற்புறுத்திக்காட்டி அதை ஒத்துக்கொண்டால் மத். 6 : 33-ம் வசனத்தை வாசித்து, தேவனுடைய ராஜ்யத்தைத் தேடு

றவர்களுக்கு சகலமும் கூடக் கொடுக்கப்படுமென்றும், அவர்களைக் குறித்துக் கடவுள் கவலை எடுத்துக்கொள்வாரென்றும் காட்டவேண்டும். இதற்கனுசரணையான வசனம் மாற். 10: 29.

சிலர் நாங்கள் கம்பளியை விரித்து அதன் மேல் உட்கார்ந்து விடிந்தது முதல் படுக்கைக்குப் போகும்வரை பொய் சொல்லவேண்டி யிருக்கிறதே. நாங்கள் எப்படி கிறிஸ்தவர்களாவது என்பார்கள். இவர்களுக்கு நாம் சொல்லவேண்டியது நீதி. 12 : 22.

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானதென்று எடுத்துக் காட்டி ஆத்துமாவின் விலைமதிப்பை முன்போல் எடுத்துக்கூறவேண்டும். மீகா 6: 9-15, ஓசியா 12: 7, நீதி. 11: 1. கள்ளத்திராசும் கள்ளப்படிகளும் வைத்துச் சம்பாதிப்பாருமுண்டு. இப்படிப்பட்டவர்களுக்கு கள்ளத்திராசு கர்த்தருக்கு அருவருப்பானதென்னும் சத்தியத்தை வற்புறுத்தவேண்டும். இதற்குப்பின் முன் சொன்னபடி ஆத்துமாவின் விலைமதிப்பை எடுத்துக்காட்டி கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும்படி செய்யவேண்டும்.

கூலிகளைக் குறைத்து ஒப்புக்கொண்டதற்கு மாறுக ஜாமான்களை குறைத்துக்கொடுக்கும் கண்டிராக்டர் முதலியோரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தாமதிக்கலாம். அவர்களுக்கு நாம் சொல்லக்கூடிய கர்த்தருடைய வசனம் ஆபகூக். 2: 9-11, எரே. 22: 13-14. இந்த இரண்டு இடங்களிலும் அநியாயத்தினுல் வரும் ஆதாயத்தை நாடுகிறவர்களின் துயரமான நிலைமை காட்டப்படுகிறது. இவர்களுக்கும் இந்த வசனங்களை எடுத்துக்காட்டி ஆத்துமாவின் விலைமதிப்பை வற்புறுத்தவேண்டும். இதன்பின் கிறிஸ்துவால் வரும் இரட்சிப்பை எடுத்துக்கூறுக.

இலஞ்சம் வாங்குகிறவர்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன் வரார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் எடுத்துக் காட்டக்கூடிய வசனங்கள் ஆமோ. 5: 11-13, லூக். 3: 14, இலஞ்சம்

வாங்குவதின் தீமையை எடுத்துக்காட்டி ஆத்துமாவின் விலைமதிப்பை வற்புறுத்துக. இதைக்காட்டியபின் முன் சொன்னபடி கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பதைப்பற்றிப் பேசுக.

இப்படிப்பட்டவர்களுக்கு நாம் பொதுவாய்ச் சொல்லவேண்டியது என்னவெனில் இப்பேர்ப்பட்ட பலவித நிலைமைகளில் இருந்தாலும் உத்தம கிறிஸ்தவர்களாய் ஜீவிக்கும் பலருடைய ஜீவியத்தைச் சுட்டிக்காட்டி சாட்சிகூற வேண்டும். கிறிஸ்தவ வியாபாரிகளும், கிறிஸ்தவ உத்தியோகஸ்தர்களும், கிறிஸ்தவ முதலாளிகளும் தங்கள் தங்களுடைய ஜீவியத்தின் மூலமாய் உத்தம சாட்சி சொல்லக்கூடுமானால் எத்தனை மகிமையாக விருக்கும்.

(b) நான் கிறிஸ்தவனானால் எனக்கு உபத்திரவமுண்டாகும்.

என்று சொல்வோருமுண்டு. இது நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய காரியம். கடவுள் அப்படிச் சொல்லியிருக்கிறார் 2 தீமோ. 3 : 12 வாசிக்க. நம்முடைய தேசத்தில் கிறிஸ்தவராகிறவர்களுக்கு பலவித இடுக்கண் உண்டாகிறது. துன்பமே வராதென்று ஒருக்காலும் சொல்லக்கூடாது. சாத்தான் தன்னுடைய ஆளை இலேசாய் விடமாட்டான். என்றாலும் நாம் சாட்சிகூற வேண்டியதென்னவென்றால் மத். 5 : 10-12 இதை வாசிக்கும்படி செய்து நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கு வரும் சிலாக்கியத்தைக் காண்பிக்க வேண்டும். 2 தீமோ. 2 : 12 நாம் துன்பப்படுவோமானால் கிறிஸ்துவுடனே கூட ஆளுகை செய்வோமென்றும் காட்டவேண்டும். நமக்கு வரப்போகிற மேலான சிலாக்கியங்களோடு இந்தத் துன்பங்களை ஒப்பிட்டால் அவைகள் மிகவும் அற்பமென்று காட்டவேண்டும். ரோ. 8 : 18 ; 2 கொரி. 6 : 14 இவைகளை எடுத்து வாசிக்க.

அப். 5 : 40-41. ஆதித்திருச்சபையார் கிறிஸ்துவுக்காகத் துன்பப்படுத்தப்பட்டபோது அது தங்களுக்குக் கிடைத்த ஒரு சிலாக்கியமென்றெண்ணி சந்தோஷமாயிருந்தார்கள் என்று பார்க்கிறோம்.

1 பேது. 2 : 20-21. கிறிஸ்து பாடுபட்டார். நமக்குண்டாயிருக்கிற உபத்திரவத்தினிமித்தமாய் அவரோடுகூட அந்தப் பாடுகளில் பங்காளிகளாகிறோம்.

உபத்திரவமானது நமக்குக் கஷ்டத்தைக் கொடுத்தாலும் நாம் சுத்தப்படவும் ஆண்டவரின்பேரிலுள்ள விசுவாசத்தில் பலப்படவும் செய்கிறது. பெருங்காற்று அடிக்கும்போது ஒரு மரம் விழுந்துபோகும் அல்லது உறுதிப்படும். வேரில்லாவிட்டால் காற்றசைக்கவும் கீழே விழுந்துபோம். அப்படிக்கில்லாமல் வேரு பலமாயிருக்கும்போது காற்று அடிக்க அடிக்க மரம் அசைந்து வேர்கள் ஆழமாகச் சென்று உறுதிப்படுகிறது. அப்படியே கிறிஸ்துவின்பேரிலுள்ள நமது விசுவாசம் பலமாக இருக்கும்போது உபத்திரவம் சொற்பக்காலமிருந்து நீங்கிப்போம். நாமோ கிறிஸ்தவ ஜீவியத்தில் பலப்படுவோமென்று எடுத்துக்காட்டவேண்டும்.

(c) என் பழைய தீய வழிகளை விட்டுவிட முடியவில்லை.

என்போருக்கு நாம் என்ன சொல்லலாம்? இப்படிப்பட்டவர்களோடு நாம் அனுதாபமாய்ப் பேசவேண்டும். அதே சமயத்தில் கண்டிப்பாகவும் பேசவேண்டும்.

(1) அவர்கள் தீமையான வழியை விடவேண்டும், அல்லது நித்திய ஜீவனை இழக்கவேண்டும். ஜீவனை அல்லது மரணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். இதற்கு நாம் உபயோகப்படுத்தத்தக்க வசனங்கள் ரோம. 6 : 23 ; கலாத். 6 : 7-8 ; யாத். 27 : 8 ; இந்த வசனங்களை வாசித்து தீமையான வழிகளை விட்டுவிடாவிட்டால் அழிவு நேரிடும் என்று வற்புறுத்திக் காட்டவேண்டும்.

(2) இயேசுகிறிஸ்துவின் உதவியால் மேற்கொள்ளலாமென்று காட்டவேண்டும். பிலி. 4 : 13 ; யோவா. 8 : 36 இந்த வசனங்களை வாசிக்கச்செய்து விளக்கிக்காட்டுக.

(3) வல்லமையுள்ளவராக வீற்றிருக்கும் கிறிஸ்தேசுவைக் காட்டவேண்டும். அவருடைய வல்லமையினால்தான் நாம் தீய வழக்க

பழக்கங்களை மேற்கொண்டு ஜெயவீரராய் விளங்குவோம். இதற்கனுசரணையான வசனங்கள் 1 கொரி. 15: 1-4; மத். 28: 18; எபி. 7: 25.

ரோம. 6: 12-16 இதை வாசித்து என்னசெய்யக்கூடாதென்றும், என்னசெய்யவேண்டுமென்றும் கூறி இருப்பதை எடுத்துக்காட்டுக. கடவுளுக்குப் பூராவாக ஒப்புக்கொடுப்பதே அந்த வழி என்று உன் சொந்த ஜீவியத்திலிருந்து சாட்சிகூறுக.

(*d*) கிறிஸ்தவர்கள் தாங்கள் சொல்லுகிறபடி ஜீவிக்கிறதில்லை என்று சாக்குப்போக்குச் சொல்லுகிறவர்களுமுண்டு. அநேக தடவைகளில் புறமதஸ்தர் கிறிஸ்தவர்களின் குறைவான ஜீவியத்தை எடுத்துக்காட்டி அதினிமித்தம் தாங்கள் கிறிஸ்தவர்களாகவில்லையென்று சொல்லுவார்கள். சில கிறிஸ்தவர்களுடைய தாழ்வான ஜீவியத்தை விசனத்தோடு ஒப்புக்கொள்ளவேண்டும். அதன்பிற்பாடு ரோம. 14: 12-ஐ வாசிக்கச் சொல்லவேண்டும். ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து கடவுளுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டுமென்பதை வற்புறுத்தவேண்டும். விசேஷமாக "ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து" என்பதைச் சுட்டிக்காட்டவேண்டும். இதற்கனுசரணையாக ரோம. 2: 1-5 வசனங்களை வாசிக்கும்படி செய்யவேண்டும். வாசித்து முடிந்தபின் நீ செய்துகொண்டிருக்கிற தப்பிதங்களை மற்றவரும் செய்வதினிமித்தம் அவர்களைக் கண்டிப்பது நியாயமா? என்று கேட்டு அங்கே கூறப்படும் ஆக்கினையை எடுத்துக்காட்டி மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களைக் கவனியாமல் நீ உன் ஜீவியத்தைக் கவனித்து உன் உத்திரவாதத்தை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று காட்டுக. மத். 7: 1-5-ஐயும் வாசிக்கலாம்.

(*e*) ஒரு கிறிஸ்தவன் எனக்குத் தீமைசெய்துபோட்டான். ஆதலால் நான் கிறிஸ்தவனாயிருக்கமுடியாது என்று சொல்வோருமுண்டு.

(1) இப்படிச் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஒரு காலத்தில் சிலர் கிறிஸ்தவர்களாயிருந்து விலகிப்போனவர்கள் இன்ன உபதேசியார், அல்லது போதகர், அல்லது விசேஷித்த ஒரு கிறிஸ்தவன் எனக்குப் பெரிய அநியாயம் செய்துபோட்டார். ஆகையால் கிறிஸ்தவனாயிருக்க முடியாதென்பார்கள். அவர்களோடு அனுதாபப்பட வேண்டியது வாஸ்தவந்தான். என்றாலும் முதலாவது அவர்களுக்குச் சொல்லவேண்டியது "அவர்கள் உனக்கு அநியாயம் செய்திருந்தாலும் நீ கிறிஸ்துவுக்கு அநியாயம் செய்யலாமா?" வென்று கேட்கவேண்டும். எரே. 5: 2 உபயோகிக்க. கடவுள் உனக்கு ஒரு தீமையும் செய்யவில்லை என்று காட்டி ஏசா. 53: 5-ஐ வாசித்து உனக்காக கிறிஸ்து செய்திருக்கிற நன்மைகளைப் பார் என்று எடுத்துக்காட்ட வேண்டும்.

(2) மற்றவர்கள் உனக்குத் தீமைசெய்ததினிமித்தம் நீ உனக்கு அதிகத் தீமையைச் செய்துகொள்ளலாமா? என்று வினவவேண்டும். கிறிஸ்துவை மறுதலிப்பதினால் நித்திய ஜீவனை இழந்துபோகிறவனாயிருப்பாய். யோவா. 3 : 36 ; 2 தெச. 1 : 7-9 இந்த வசனங்களை விளக்கிக்காட்டவேண்டும்.

ஐந்தாம் அதிகாரம்.

மார்க்கத்தைவிட்டு விலகிப்போனவர்களுக்குச் சாட்சி கூறல்.

Witness to Backsliders.

நம்முடைய சபைகளில் ஒருகாலம் அங்கங்களாகவிருந்து பலர் பின்வாங்கிப்போயிருப்பதைப் பார்க்கலாம். இவர்கள் ஒரு காலத்தில் உற்சாகமான கிறிஸ்தவர்களாகவிருந்து அப்புறம் ஏதோ சில காரணத்தினிமித்தம் படிப்படியாய் விலகிப் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் எவ்விதம் சாட்சிகூறி இவர்களை ஆதாயப்படுத்தலாம்? இவர்களை இரண்டு பிரிவாய்ப் பிரிக்கலாம்.

இரட்சகரிடம் திரும்ப மனமற்றவர்கள்.

(1) இவர்களுக்கு நாம் சாட்சியாகக்கூறக்கூடிய வசனம் எரே. 2 : 5. கடவுளிடம் அவர்கள் என்ன தீமையைக் கண்டார்களென்றும் என்ன தீங்கைப் பார்த்தார்களென்றும் கேட்கவேண்டும். இந்த வசனத்திலுள்ள சத்தியத்தை அவர்கள் மனதில் பதிப்பிக்கவேண்டும். ஆண்டவரை விட்டதினால் அவர்கள் செய்த இருவிதத் தீமையை எடுத்துக்காட்டவேண்டும். எரே. 2 : 13-ஐ வாசித்து விளக்கவேண்டும். இன்னும் எரே. 2 : 19-யும் உபயோகிக்கலாம். நீதி 14 : 14 ; 1 இரா. 19 : 19-ஐ வாசித்துக் காட்டுக. லூக். 15 : 13-17-ஐ வாசித்துத் தன் தகப்பன் வீட்டைவிட்டு தூரதேசத்திற்குப்போன மகனின் நிர்ப்பந்தங்களை விளக்கிக்காட்டி பின்வாங்கிப்போனவனின் ஆவிக்குரிய நிலைமையும் இப்படிப்பட்டதென்று காட்டவேண்டும்.

(2) அந்த ஆளைப்பார்த்து பின்வாங்கிப்போன இஸ்ரவேலருக்குக் கடவுள் கொடுத்த செய்தியொன்றிருக்கிறது. அந்தச் செய்தி உனக்குப் பொருந்தும் ; நான் அதை வாசிக்கட்டுமா என்று சொல்லி, ஆமோ. 4 : 12-ஐ வாசிக்க. "உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" என்று வற்புறுத்திப்பேசவேண்டும்.

2. பின்வாங்கி இப்போது கர்த்தரிடத்தில் திரும்பிவர ஆசைப்பட்டவர்களுக்குச் சாட்சிசொல்லல்.

இவர்களை இலேசாய் ஆதாயப்படுத்திக்கொள்ளலாம். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை விட்டு விலகிப்போய் கெட்டகுமாரனைப்போல தவிட்டைத் தின்று தகப்பனின் வீட்டுக்குவரத் தவித்துக்கொண்டிருப்பவராவர்.

எரே. 3 : 12, 13, 22, கடவுள் அவர்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறாரென்றும் அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவரிடம் திரும்பவேண்டுமென்றும் காட்டவேண்டும்.

ஓசி. 14: 1-4 வழிவிலகிப்போயிருந்து திரும்ப மனந்திரும்புவோர்க்கு ஆண்டவர் கொடுக்கும் அன்பான அழைப்பு. ஆண்டவர் தம்மிடம் வர அவர்களை அழைக்கிறாரென்றும், அவர்களுடைய தப்பிதத்தை மன்னிக்கிறாரென்றும், அவர்கள்மாத்திரம் தங்கள் கோணலான வழிகளைவிட்டு அவரிடம் திரும்பவேண்டுமென்றும் இந்த வசனம் சொல்லுகிறதென்று எடுத்துக்காட்டவேண்டும். பின்வரும் வசனங்களும் இதற்கு உதவியாயிருக்கும் ஏசா. 43 : 22-24, 25 ;. 44: 20-22 ; எரே. 29 : 11-13 ; உபாக. 4 : 28, 31 ; 1 யோவா, 1 : 9 ; 2 : 1, 2.

பின்வாங்கிப்போனவர்கள் திரும்ப வந்தபோது ஏற்றுக்கொள்ளப்பட்டதைப்பற்றிய உதாரணங்கள் கூறலாம் மாற். 14:7. இயேசுவானவரை மறுதலித்த பேதுருவுக்கு ஆண்டவர் சொல்லி அனுப்பின செய்தியை எடுத்துக்காட்டலாம்: 2 நாளா. 15 :14; 33 : 1-9, 12, 13, வசனங்கள் இங்கே கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள் திரும்பி வந்தபோது அவர்களை ஏற்றுக்கொண்டதைப்பற்றி வாசிக்கிறோம். லூக். 15: 11-21 இந்த வசனங்களை நன்றாய் விளக்கிக் காட்டுவது அதிக உதவியாயிருக்கும்.

ஆறும் அதிகாரம்.

கிறிஸ்தவர்களுக்குச் சாட்சிசொல்லுதல்.

Witness to Christians.

இதுவரைக்கும் புறமதஸ்தர்களுக்குள்ளும், பின்வாங்கிப்போனவர்களுக்குள்ளும் எவ்வண்ணம் வேலைசெய்யவேண்டுமென்று பார்த்தோம். இப்பொழுது, கிறிஸ்தவர்கள் என்று பேர்பெற்றிருந்தும் கிறிஸ்தவ அனுபவத்தில் வளராமலிருக்கிறவர்களுக்கு உதவியாக என்ன சாட்சிசொல்லலாமென்று பார்க்கலாம்.

1. கிறிஸ்துவைப் பகிரங்க அறிக்கைசெய்யாமலிருக்கும் கிறிஸ்தவர்கள்.

இவர்கள் கிறிஸ்துவைப்பற்றி பகிரங்கமாய்ச் சொல்ல வெட்கப்படுகிறார்கள். தாங்கள் குடியிருக்கிற தெருக்களிலும், தாங்கள் வேலை செய்யும் இடங்களிலும் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவெட்கப்படுவார்கள். இப்படிச்செய்தால் அவர்கள் கிறிஸ்துவை அவமதிப்பதோடு தங்களுக்கே தீமை விளைவித்துக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவை அறிக்கையிடாமலிருந்தால் கிறிஸ்தவ ஜீவிய வளர்ச்சி குன்றும்; ஆகையால் இப்படிப்பட்டவர்களை ஆதாயப்படுத்தத்தக்கதாக நாம் சாட்சிகூறவேண்டும் இதற்கனுசரணையான வசனம் மத். 10: 32-33, இது தன்னில்தானே தெளிவாயிருக்கிறது. ரோம. 10: 9-10 வாயினால் நாம் அறிக்கையிடுவது நம்முடைய இரட்சிப்புக் கேதுவானதென்று கூறுகிறது. இன்னொரு உதவியான வசனம் யோவா. 12: 42, 43 இதிலே அறிக்கையிடாததற்குக் காரணம் கூறியிருக்கிறது. மாற். 8 : 38 வெகு தெளிவாக ஒரு சத்தியத்தைக் கூறுகிறது. அதாவது மனுஷர் முன்னே அறிக்கையிட வெட்கப்படுகிறவர்களைப்பற்றி கிறிஸ்துவும் வெட்கப்படுவாரென்று எடுத்துக் காட்டவேண்டும்.

2. வேதத்தை அவமதிக்கிற கிறிஸ்தவர்கள்.

வேதத்தைக் கையாடாததால் அநேகர் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளராதிருக்கிறார்கள். சிலர் வேதத்தின்பேரில் நம்பிக்கை வைக்கிறதில்லை, சிலர் நம்பிக்கை வைத்தாலும் அசட்டைசெய்கிறார்கள். இரண்டாந்தலைமுறை கிறிஸ்தவ மாணுக்கரோடு ஆவிக்குரிய விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்தபோது முக்கால்வாசிப்பேர் வேதத்தை வாசிக்கிறதில்லையென்று அறிந்தோம். தேவ ஊழியரிலுங்கூட அப்படிப்பட்ட குறையிருப்பதாகப் பார்க்கிறோம். ஆகையால் அவர்களுடைய ஜீவியம் குன்றியிருப்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. உத்தம

கிறிஸ்தவ ஜீவியம் செய்யவேண்டுமென்ருல் வேதத்தை வாசித்துத் தியானிக்கவேண்டும். இவர்களுக்கு நாம் உபயோகிக்கத்தக்க வசனங்களாவன: 1 பேது. 2: 2, கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த பிள்ளைகள் ஞானப்பாலாகிய வேதத்தை உட்கொள்ளவேண்டும். அப். 27: 32; யாக். 1: 21, 22; 2 தீமோ. 3: 13-17; எபே. 6: 17; சங். 119: 19; 11: 130; 1: 1-2; அப். 17: 11. இந்த வசனங்கள் எல்லாம் வேதத்தைப் படிப்பதின் முக்கியத்தைக் காட்டும். நீ வேதத்தை எவ்விதம் தினம் படித்துவருகிருய் என்று உன் சொந்த ஜீவியத்திலிருந்து காட்டுக. ஒவ்வொரு அதிகாரமாக புஸ்தகம் புஸ்தகமாக வாசித்துக்கொண்டுபோகிருயா? அல்லது ஒரு பொருளைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ற வேதபாகங்களை வாசித்துக்கொண்டு போகிருயா? எது உன் அநுபவத்திற்கு உதவியாயிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டுக.

3. ஜெபத்தை அசட்டைசெய்கிறவர்கள்.

ஜெபம் ஒருகிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் முக்கியமானது. அவன் அதை அசட்டைபண்ணினுல் அந்த ஜீவியத்தில் வளர முடியாது. ஆகவே ஒருவன் தன் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ச்சியில்லையென்றுசொன்னுல் அதற்குக் காரணம் ஜெபம்செய்யாததேயென்று அறிந்துகொள்ளலாம். அப்படிப்பட்டவர்களை ஆதாயப்படுத்த பின்வரும் வசனங்கள் மிகவும் பிரயோஜனமாயிருக்கும். யாக். 4: 2 கேட்காததினுல் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. லூக். 11: 9-11 தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு பரிசுத்தாவியை அருளுகிருர்.



யாக். 5 : 13-18. நீதிமானின் ஊக்கமான ஜெபம் அதிக பலனுள்ளது. லூக். 22 : 46 சோதனைக்குட்படாமல் ஜெபம்பண்ணுங்கள். ஏசா. 40 : 31. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலனடைவார்கள். சங். 55 : 17 இது ஒழுங்காக ஜெபிக்கிறதைக் குறிக்கும். பின்வரும் வசனங்களும் உதவியாயிருக்கும். மாற். 1: 35 ; தானி. 6 : 10 ; மாற். 6 : 46 ; லூக். 6 : 12 ; தெச 5 : 17.

4. கவலையீனமான ஜீவியம்செய்யும் கிறிஸ்தவர்கள்.

சில கிறிஸ்தவர்களைக் குறித்து அவர்கள் பூரணமான கிறிஸ்தவர்களென்று நாம் சொல்லமுடியாமலிருப்போம்; அவர்கள் தங்கள் ஜீவியத்தைக்குறித்துக் கவலையீனமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உற்சாகமான கிறிஸ்தவர்களாகும்படி நாம் நமது சாட்சியின்மூலமாய்த் தூண்டிவிடவேண்டும். நாம் உபயோகப்படுத்தத்தக்க வசனங்களாவன : 2 கொரி. 6 : 14 முதல் 7 : 1. " அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்போங்கள் " என்ற சத்தியத்தை வற்புறுத்தவேண்டும். மத். 6 : 24-ஐ வாசித்து கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய முடியாதென்ற சத்தியத்தை மனதில் அழுத்தவேண்டும். பின்வரும் வசனங்களில் உலகத்தோடு ஒத்து வாழ்வதின் தீமை கூறப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டவேண்டும். 1 யோவா. 2 : 15-17 ; யாக். 4 : 4, 6-8 ; லூக். 8 : 14. முட்செடியானது பயிர் வளராதபடி எவ்விதம் தடுத்ததோ அவ்வண்ணமே உலகத்தின் கவலைகளும் ஐசுவரியத்தின் மயக்கமும், உலகத்தின் ஆசாபாசங்களும் கிறிஸ்தவ ஜீவியத்தை அமுக்கிக் கெடுத்துப்போடுமென்று காட்டவேண்டும்.

பின்வரும் வசனங்களையும் உபயோகப்படுத்தலாம். லூக். 21 : 34-36 ; 12 : 35-38 ; ரோம. 12 : 1-2 ; 14 : 23 ; 2 தீமோ. 4 : 7-8.

5. கிறிஸ்துவுக்காக ஊழியம்செய்யாத கிறிஸ்தவர்கள்.

நாம் சபைகளைப் பார்ப்போமானால் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யாமல் அநேகர் இருப்பதை அறியலாம். இவர்கள் ஊழியம்

செய்யாமலிருப்பதால் தங்களுடைய ஜீவியத்தில் வளராமலிருப்ப தோடு மற்றவர்களுக்கும் தடையாயிருப்பதையும் பார்ப்போம். ஆகை யால் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரையும் ஊழியத்தில் தூண்டிவிடக் கூடுமானால் நாம் விசேஷித்த காரியத்தைச் செய்துமுடிப்போம்; தனித்தனி ஆட்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளருவார்கள். சபையும் மொத்தத்தில் ஆவிக்குரிய விஷயத்தில் சிறந்து விளங்கும். ஆகையால் கிறிஸ்துவுக்காக ஊழியஞ்செய்யாத ஒரு ஆளுக்கு எவ்விதம் சாட்சி கூறலாம்? இப்படிப்பட்டவர்களுக்கு நாம் உபயோகிக்கத்தக்கதான அநேக வேதவாக்கியங்கள் உண்டு மாற். 13 : 34-37 இந்த பாகத் தில் "அவனவனுக்குத் தன்தன் வேலையையும் நியமித்து" என்று சொல்லியிருப்பதை வற்புறுத்திக் காட்டுக. மத். 24 : 44-51 ; 25 : 14-30. இந்த வசனங்களையும் வாசித்துக் காட்டவேண்டும். எபே. 4 : 14-16. இந்த வசனத்தில் ஒவ்வொரு அவயவமும் தன்தன் அள வுக்குத்தக்கதாய் கிரியைசெய்கிறது என்பதை சுட்டிக்காட்டி அதினால் சபை முழுவதும் பிரயோஜனமடைகிறதென்பதை எடுத்துக்கூற வேண்டும். பின்வரும் வசனங்களும் உதவியாயிருக்கும் மாற். 12 : 8 ; யாக். 5 : 20 ; தானி. 12 : 3 ; வெளி. 22 : 12.

ஒரு ஆள் பத்தாள் வேலையைச் செய்கிறதைப்பார்க்கிலும், பத் துப்பேர் வேலைசெய்யப் பழக்கிவைப்பதே விசேஷம்.

6. பரிசுத்தாவியைப் பெறாத கிறிஸ்தவர்கள்.

பரிசுத்தாவியைத் திட்டமாய்ப் பெற்றுக்கொள்ளாத கிறிஸ்தவர் கள் தற்காலத்திலுமுண்டு. சமாரியாவிலிருந்ததுபோலும் (அப். 8 : 15-16) எபேசிலிருந்ததுபோலவும் (அப். 19 : 2) தற்கால சபையி லும் பரிசுத்தாவியைப்பற்றி அறியாமலும் அவரைப் பெற்றுக்கொள் ளாமலுமிருப்பதுமுண்டு. அப்படிப்பட்டவர்கள் ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி வழியைக் காட்டவேண்டும்.

(1) கலாத். 3 : 2 ஆவியை விரும்புகிறவன் தன் சொந்த புண் ணிய கிரியைகளினாலல்ல, இயேசுகிறிஸ்துவினால்மாத்திரம் கிடைக் கும் ஒரு ஈவு என்று உணரவேண்டும்.

(2) அப். 2 : 38 மனந்திரும்பி பாவங்களை விட்டுவிடவேண்டும்.

(3) அப். 5 : 32 பூரண கீழ்ப்படிதல் வேண்டும்.

(4) லூக். 11 : 13 ஆவியானவருக்காகத் திட்டமாய்க் கேட்க வேண்டும்.

அப்படிக் கேட்டுப் பெற்றுக்கொண்டதற்கு உதாரணங்களையும் கூறுக. அப். 2 : 1-4 (அப். 1 : 14-ஐயும். ஒத்துப்பார்க்க). அப். 4 : 31.

(5) மாற். 11 : 24 விசுவாசத்தின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்விதமாக உத்தம சாட்சிகள் அந்தந்த ஆளின் நிலைமைக்கேற்றதாக ஆண்டவரின் வார்த்தைகளை எடுத்துக்கூறி தன் சொந்த அநுபவத்தினின்று சாட்சிபகர்ந்து ஆண்டவருக்கென்று உகந்த வேலை செய்யவேண்டும். தன்னை மறந்து, தலைவன்மேல் சார்ந்து, தன் பிறனை நேசித்து, தைரியமாய், திட்டவட்டமாய், தெளிவாய், தன் சாட்சியைக் கூறவேண்டும். அப்பொழுது பரிசுத்தாவியானவரும் உன்னோடுகூட சாட்சிகூறுவார். ஆத்துமாக்கள் கர்த்தருக்கென்று ஆதாயப்படுவார்கள்.

ஐந்தாம் பாகம்.

மகமதியர்க்குச் சுவிசேஷ சாட்சி கூறல்.

Witness to the Mohamedans.



இந்திய பிரதேசத்தில் எத்தனையோ கோடி மகமதியர்கள் இருந்தபோதிலும் அவர்களுக்குள்ளே சுவிசேஷ வேலை வெகு சொற்பமாய்ச் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் குறைவை நிவிர்த்தி செய்யும்படியாக, இப்போது விசேஷித்த முயற்சி செய்யப்பட்டுவருகிறது. அரபி தேசத்திலும், எகிப்து தேசத்திலும் மகமதியர்க்குள் கடந்த 37 வருஷமாக விசேஷித்த வேலை வெகு சித்தியுடன்செய்துவந்திருப்பவரும், மகமது மார்க்கத்தைப்பற்றியும் மகமதியரின் வழக்கப் பழக்கத்தைப் பற்றியும் அதிகமாய் அறிந்து அநேக நூல்களை யெழுதியிருக்கும் கனம் எஸ். சுவிம்மர் பண்டிதரவர்கள் இந்தியாவின் முககிய ஸ்தலங்களைச் சந்தித்து கிறிஸ்தவ ஊழியருக்கென்று ஆலோசனைக் கூட்டம் வைத்து மகமதியருக்குள் வேலைசெய்யும் விதத்தைப்பற்றி உபந்நியாசஞ் செய்துவந்தார்கள். மதுரையில் சில நாட்களாகத் தங்கி தேவ ஊழியருக்கு ஆறு உபந்நியா யாசஞ் செய்தார்கள். அவைகளைத் தொகுத்து இங்கு எழுதியிருக்கிறோம். கனம் சுவிம்மர் பண்டிதரவர்கள் மேற்பார்வை செய்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

முதலாம் அதிகாரம்.

இஸ்லாமிய நூல்கள்.

பொதுவாகச் சொல்லப்படும் குறை மகமது மார்க்கத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் நூல்கள் வெகு சொற்பமென்பதே. ஆனல் அதைப்பற்றி அநேக நூல்கள் சிறிதும் பெரிதுமாக எழுதப்பட்டிருப் பதாகத் தெரிகிறது. இவைகளை ஏழு பிரிவாகப் பிரிக்கலாம். ஒவ் வொரு பிரிவிலும் அநேக விதமான புஸ்தகங்களுண்டு.

1. இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி

பொதுவான குறிப்புகளடங்கிய புஸ்தகங்கள். இவைகள் அநேக பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன.

2. இஸ்லாமிய தேசங்களும் ஜனங்களும்.

இஸ்லாம் எவ்விதம் பரம்பினதென்றும் அது பரம்பியிருக்கிற தேசங்களில் அதன் நிலைமையென்னவென்றும் வெகு சவிஸ்தார மாய்க் கூறுகின்றன. இந்தியாவில் இஸ்லாம் மார்க்கம் பரம்பி இருப்பதைப்பற்றி 3 விசேஷித்த புஸ்தகங்களுண்டு. அவைகளில் ஒன்று "இந்தியா தேசத்திலுள்ள இஸ்லாமிய ஸ்திரீகள்" இது Mrs. அமிர் அலி என்ற மாதுவால் எழுதப்பட்டது. மற்றவை "இந்தியா வில் இஸ்லாம்" என்ற தலைப்புள்ள இரண்டு புஸ்தகங்களாகும்.

3. தேச சம்பந்தமான இஸ்லாமிய சரித்திரம்.

இவைகள் தேச அரசாக்ஷி விஷயத்தில் இஸ்லாம் மார்க்கம் என்ன செய்கிறதென்று கூறுபவை: கிலாபத்து, லெப்பைமார், மாப்பிலா ஜாதிகள் இவைபோன்ற விஷயங்களைப்பற்றி சவிஸ்தார மாய்க் கூறும்.

4. இஸ்லாம் மார்க்கத்தின் உள்ளான குறிப்புகள்.

இதில் அநேக பிரிவுகளுண்டு. இஸ்லாம் மார்க்கத்தின் மூல ஆதாரம் விசேஷித்தவை. யூத மார்க்கத்தினின்றும் கிறிஸ்து மார்க்

கத்தினின்றும் அக்காலத்தில் அரேபியாவிலிருந்த அஞ்ஞான மார்க்கத்தினின்றும் சில விசேஷித்த சத்தியங்களை யெடுத்துக்கொண்டு தன் மதத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. இவைகளைப்பற்றி சவிஸ்தாரமாய்ச் சொல்லும் நூல்களுண்டு. மகமது நபியின் ஜீவியத்தையும் போதகத்தையும்பற்றிக் கூறும் பல புஸ்தகங்களுண்டு. அவைகளில் ஒன்று சென்னபட்டணத்திலுள்ள கனம் செல் ஐயரவர்களால் எழுதப்பட்டது. கொரானும், ஆடிஸ் என்ற பரம்பரை நூலும் விசேஷித்தவை. மகமது மார்க்கமானது கொரான் பேரிலும் பரம்பரையான கொள்கையின் பேரிலும் கட்டப்பட்டது. கொரான் தமிழ் பாஷையிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர மகமது அல்லது இஸ்லாமிய சட்டம் பிரத்தியேகமான புஸ்தகமாயிருக்கிறது. மகமதியரோடு வியாபாரஞ்செய்யும் விஷயத்திலோ காடுகரை வாங்கும் விஷயத்திலோ நாம் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயம் யாவும் இதில் அடங்கும்.

வேத சாஸ்திரம்.

இதைப்பற்றிய நூல்களில் முன் தீர்மானம், ஒருத்துவம், பாவம் முலியவைகளைப்பற்றிய போதனையுண்டு. யோகாப்பியாசத்தைப் பற்றியும் அதாவது கடவுளோடு தனி தியானம்பண்ணி அவருடன் ஐக்கியப்படுகிற கூட்டத்தாரைப்பற்றியும் சொல்லும் புஸ்தகங்களுண்டு. இவர்கள் தமிழருக்குள் அதிகம். கதரி என்ற வகுப்பார் வியாழக்கிழமை இரவு 10.30-11 மணிக்குப்போல் ஒன்ருகக்கூடி அல்லாவை நோக்கித் தியானம் பண்ணுவார்கள். இவர்கள் ஜெபமாலை உபயோகப்படுத்துவார்கள். பரிசுத்தவான்களைப்பற்றிய புஸ்தகங்களுண்டு. கதரி வகுப்பாருக்குள் இரண்டு பிரிவுண்டு. ஒன்று ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளப்போகும் மியூரில் என்பவர்கள். ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் பீர் என்ற தலைவருமுண்டு. பீர் என்பவரை ஜனங்கள் தொட்டு முத்தமிடுவார்கள், அவர் மரித்தால் அற்புதஞ்

செய்கிறவராக எண்ணப்படுவார். அவருடைய கல்லறைக்கு அநேகர் சென்று வரங்களைக் கேட்பதுண்டு. இப்படிப்பட்ட பீர் மரிக்கிற நாளுக்கு உர்ஸ் அதாவது விவாக நாள் என்ற பேர் உண்டு. ஏனெனில் அவர் மரிக்கும் அந்த நாளில் ஆண்டவரோடு ஐக்கியப்படுகிறார் என்பார்கள். இதைத்தவிர மந்திரத்தைப்பற்றிக் கூறும் புஸ்தகங்கள் தமிழில் மூன்றுண்டு. சாதாரண ஜனங்கள் இந்த மந்திர புஸ்தகத்தின்மேல் அதிக நம்பிக்கையுடையவர்கள். ஒருவனைக் கொல்ல, ஒருவனுக்கு வியாதியுண்டாக்க இன்னும் பல தீமைகளைச் செய்யத்தக்கதான வழி வகைகள் இந்த புஸ்தகங்களில் காணப்படும். மந்திரம் நிறைந்த தாய்த்துகளை சிறு பிள்ளைகள் அணிந்திருக்கப் பார்க்கலாம். மகமதியர்களுக்குள்ள அநேக பிரிவுகளைக் கூறும் புஸ்தகங்களுண்டு. மகமதியரை பொதுவாக இரண்டு வகுப்பாக பிரிக்கலாம். சன்னி, சியா, சன்னி வகுப்பார் நாலு பிரிவாக பிரிக்கப்படுவார்கள். அனுபி (Hanafi), ஹன்பாலி (Hanbali), ஷாவை (Shafai), மாகிட்ஸ் (Mahiks). சியா வகுப்பாருக்குள் பூர்வ கொள்கைக்காரரென்றும், கோஜா வகுப்பாரென்றும், அகமதிய வகுப்பாரென்று மூன்று வகைப்பட்டவருண்டு. இவர்கள் தங்களுடைய புஸ்தகங்களை அநேக பாஷைகளில் எழுதிவைத்திருக்கிறார்கள்.

5. மகமது மார்க்கத்தின் தத்துவசாஸ்திரங்களைப்பற்றிய புஸ்தகங்களுண்டு.

6. மகமதிய சித்திரவேலைகளைப்பற்றியும் சங்கீதத்தைப்பற்றியும் அநேக புஸ்தகங்களுண்டு. இவர்கள் முன்சொன்னபடி அநேக பாஷைகளில் தங்களுடைய நூல்களைப் பிரசுரித்து வருகிறார்கள். தமிழ் பாஷையிலும், இங்கிலீஷ் பாஷையிலும் புஸ்தகங்கள் வாங்கலாம். ஆகையால் இம்மார்க்கத்தைப்பற்றி அறிய வழியில்லையென்று சொல்ல வழியில்லை. நம்மைச் சுற்றியிருக்கும் மகமதிய சகோதரரின் நூல்களை வாங்கிப் படித்து அவர்களைப்பற்றியறிந்து அவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுவோமாக.

இரண்டாம் அதிகாரம்.

மகமதியருக்கு நாம் சொல்லவேண்டிய செய்தியென்ன? அவர்களுடைய மனநிலைமை யாது?

நாம் மகமதியருக்கு கிறிஸ்துமார்க்க உபதேசத்தைச் சொல்லுவதற்கு முன்னுக அவர்களுக்கும் கிறிஸ்துமார்க்கத்துக்குமுள்ள சம்பந்தம் அல்லது ஒற்றுமையென்னவென்று அறியவேண்டும். பின் வரும் ஏழு காரியங்கள் கிறிஸ்துமார்க்கத்துக்கும் மகமது மார்க்கத்திற்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டும்.

1. கடவுளின் ஒருத்துவம்.

கடவுள் ஒருவர் மாத்திரமுண்டு. அவர் அல்லாவென்பார்கள். பல தெய்வக்கொள்கைகளையுடைய மற்ற மார்க்கங்களுக்கு இது மாறுனது. கிறிஸ்துமார்க்கத்தைப்போல ஒரு தெய்வக்கொள்கையுடையது.

2. கடவுள் உண்மையாக இருக்கிறவர்.

அவர் வெறும் போதனைக்குரியவராய் அல்லது உத்தேசத்திற்குரியவராய் இராமல் உண்மையாகவே கிரியை நடப்பிக்கும் கடவுள்.

3. பாவம்.

நிச்சயமான ஒரு சம்பவம்: வெறும் பேச்சல்ல.

4. ஒவ்வொரு தனித்தாளும் உத்தரவாதி. பாவஞ்செய்கிறவன் பாவத்திற்கு உத்தரவாதி.

5. ஜெபத்தில் நம்பிக்கை.

கடவுள் ஜெபிக்கிறவர்களுக்கு செவிகொடுக்கிருரென்று பலமாய் நம்புகிருர்கள். இவர்களுடைய ஜெபம் மூன்று வகைப்படும். (1) நமஸ் இது மெக்காவை நோக்கி தானுக ஐந்து தரம் செய்யும் ஜெபமாகும். இதை மகமதியர் மாத்திரஞ் செய்யலாம். தங்களைச்

சுத்தஞ்செய்துகொண்டு இந்த ஜெபத்தை செய்வார்கள். (2) தூவா இது எந்தச்சமயத்திலும் எந்த இடத்திலும் யாருஞ்செய்யக்கூடியது. வியாதிக்காரரின் பக்கத்தில் அல்லது கடவுளின் உதவி தேவையா யிருக்கிற சமயத்தில் நாமும்கூட ஜெபிக்கலாம். தூவா சொல்லு வோமென்றால் அவர்களும் மரியாதையாக ஜெபத்திற்கு இருப்பார் கள். (3) சிக்கார் கையிலே ஜெபமாலையை வைத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான தடவை செய்யும் ஜெபமாகும்.

6. வெளிப்படுத்தலில் நம்பிக்கை.

கடவுள் நம்மோடு பேசியிருக்கிறார். மோசேயின் மூலமாய்ப் பேசினவர் குரான் மூலமாயும் பேசியிருக்கிறார். இவ்விதம் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறாரென்று விசுவாசிக்கிறார்கள்.

7. நியாயத்தீர்ப்பில் நம்பிக்கை.

கடவுள் நம்மை நியாயந்தீர்ப்பாரென்று விசுவாசிக்கிறார்கள். ஒரு மனுஷனுடைய ஜீவியம் இந்த மரணத்தோடு நின்றுபோகிற தில்லை என்ற நம்பிக்கையுண்டு.

ஆகவே இந்த ஏழு விஷயங்களில் அவர்களுக்கும் நமக்கும் அதிக ஒற்றுமையுண்டென்று பார்க்கிறோம். ஆயினும் இந்த ஒற்று மையோடு நாம் நின்றுபோனால் பிரயோஜனமில்லை. இந்த ஒற்று மையை ஆதாரமாகவைத்து இன்னும் மேலான சத்தியத்துக்குள் அவர்களை நடத்தவேண்டும். அவர்களுக்கும் நமக்குமுள்ள வித்தியா சத்தை விளக்கிக்காட்டி நடத்துவதே நமது கடமை. இந்த வித்தி யாசங்கள் ஏழு (1) மகமதியர்கள் ஒருத்துவத்தை விசுவாசித்தபோ திலும் கடவுள் பிதாவென்றும் திரியேகரென்றும் விசுவாசிக்கிற தில்லை. நாம் கடவுள் நமது பிதாவென்றும் காட்டவேண்டும் (2) கடவுள் சன்மார்க்க இலக்ஷணமுடையவர் அவர் பரிசுத்தரென்று காட்டவேண்டும். மகமதியர் கடவுள் வல்லமையுள்ளவரென்றும் அவர் பகைக்கிறவர்களை கொடுமையாய்த் தண்டிக்கிறாரென்றும், ஆனால்

தாம் நேசிக்கிறவர்கள் என்ன பாவஞ்செய்தாலும் அவர்களைப் பக்ஷமாய்ப் பார்க்கிறாரென்றும் சொல்வார்கள். நாமோ அவருடைய பரிசுத்த தன்மையை வற்புறுத்துகிறோம். (3-7) வித்தியாசங்கள் [8-ம் 9-ம் பக்கம் 3-7 பார்க்க.]

மூன்றாம் அதிகாரம்.

வேதாகமமும் கொரானும். வேதாகமம் உண்மையானதென்றும் நம்பப்படத்தக்க நூலென்றும் காட்டவேண்டும். இவ்விஷயத்தில் நாம் வேதாகமத்தைப்பற்றி நன்றாயறிந்தும் அதின் உண்மையை யுணர்ந்துமிருக்கவேண்டும். பழைய ஏற்பாடும் தேவ வெளிப்படுத்தலாக கிறிஸ்தவர்களுக்கு அவசியமான நூலே. ஏனெனில் புதிய ஏற்பாட்டில் அநேக விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுமானால் பழைய ஏற்பாட்டையறியவேண்டும் (உ-ம்) தேவாட்டுக்குட்டி, பிராயச்சித்தம், ஆபிரகாம், தீர்க்கதரிசிகள், தாவீது முதலிய பதங்களின் உள்ளான அர்த்தத்தை அறிய பழைய ஏற்பாட்டை நன்றாய்க் கற்றிருக்கவேண்டும். ஆயினும் இப்போது புதிய ஏற்பாட்டைக் கவனிப்போம். புதிய ஏற்பாட்டிற்கு விரோதமாய் மூன்று ஆக்ஷேபனைகளை மகமதியர் சொல்வார்கள்.

1. புதிய ஏற்பாடு அல்லது சுவிசேஷங்கள் எடுக்கப்பட்டுப் போயின. இப்போது சுவிசேஷ நூல் இல்லை. அதாவது மர்க்ஃவா என்பார்கள்.

2. சுவிசேஷத்தின் வசனங்கள் கறைப்பட்டுப்போயிற்றென்றும் மாற்றப்பட்டுப்போயிற்றென்றும் சொல்லுவார்கள். இதற்கு முக்ராவ் என்பார்கள்.

3. இந்தச்சுவிசேஷம் பின்னால் வந்த வெளிப்படுத்தலால் அவசியமில்லையென்று தள்ளப்பட்டுப் போயிற்றென்றும் கூறுவார்கள். இதற்கு மன்சூக் என்பார்கள். இந்த ஆக்ஷேபனைகளை நாம் ஒவ்வொன்ருய்ப் பார்ப்போம்:—

1. இன்ஜில் என்ற சுவிசேஷத்தை கிறிஸ்து எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்பவர்கள் சொல்லும் நியாயங்களாவன: மோக்ஷலோகத்திலிருந்து ஆண்டவன் நூற்றிநாலு புஸ்தகங்களை வெளிப்படுத்தலாகத் தந்தருளினுரென்றும், அவைகளில் 100 ஆகமங்கள் காணுமல் போயிற்றென்றும் 4 மாத்திரம் மீதியாயிருக்கிறதென்றும் கூறுவார்கள். அவையாவன:—

1. மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்ட தோரா என்ற நியாயப்பிரமாணம்.

2. தாவீதின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட ஜபூர் என்ற சங்கீதாகமம்.

3. இயேசுவின் மூலம் கொடுக்கப்பட்ட இன்ஜில் என்ற சுவிசேஷம்.

4. மகமது மூலமாய்க்கொடுக்கப்பட்ட கோறன். முதல் மூன்று புஸ்தகங்கள் எடுபட்டுப்போயின அல்லது வேண்டாமென்று தள்ளப்பட்டுப்போயின என்பார்கள்.

இன்ஜில் இயேசுவினுல் எடுத்துக்கொண்டு போகப்பட்டது என்று சொல்லுகிறவர்களுக்கு நாம் கூறக்கூடிய பதிலென்ன?

1. இயேசுவானவர் பரலோகத்திற்குப் போகும்போது எடுத்துக்கொண்டுபோனுரென்று சொன்னுல் ஓர் ஆச்சரியமான காரியம். ஏனெனில் இயேசுவானவர் போனகாலத்தில் சுவிசேஷம் எழுதப்படவில்லை. அவர் சென்று அநேக வருஷங்களுக்குப் பின் எழுதப்பட்டது. அப்படியானுல் அவர் சுவிசேஷத்தைக் கொண்டுபோயிருக்க முடியாது.

2. இயேசுவானவர் சுவிசேஷத்தைக் கொண்டுபோய் இருப்பாரானால் கோறன் சுவிசேஷத்தைப்பற்றி அதிகமாகப் புகழ்ந்து சொல்வதேன்.

3. மகமதியர் பர்னபாவின் சுவிசேஷமே மெய்யான சுவிசேஷமென்பார்கள். ஆனால் அந்தப் புஸ்தகம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் மகமதியனாக இருந்த ஸ்பானியா தேசத்து மனுஷனொருவனால் எழுதப்பட்டது. இதில் அநேகங்கட்டுரைகள் காணப்படும். சரித்திரத்திற்கும் பூமிசாஸ்திரத்திற்கும் ஒவ்வாத குறிப்புகள் இதிலுண்டு.

ii சுவிசேஷத்தைக் கிறிஸ்தவர்கள் மாற்றி சிலவற்றைக் கூட்டியும் சிலவற்றைக் குறைத்தும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதற்கு அவர்கள் சொல்லும் நியாயங்களாவன :—

1. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டாரென்று இன்ஜிலில் எழுதப்பட்டிருக்கிறது.

2. மகமதுவின் பேர் இதில் வரவில்லை.

3. கொரானுக்கும் புதிய ஏற்பாட்டிற்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. ஆதலால் இது மிகவும் மாறி கறைப்படுத்தப்பட்ட புஸ்தகமென்பார்கள். இவ்விஷயத்தை நாம் பல நியாயங்களைக் கொண்டு மாற்றி அவர்களைச் சமாதானப்படுத்தவேண்டும். இதில் நாம் கேட்கவேண்டிய கேள்விகள் மூன்றுண்டு. எப்போது மாற்றப்பட்டது, யாரால் மாற்றப்பட்டது, என் மாற்றப்பட்டதென்ற கேள்விகளைக் கேட்கவேண்டும். இது மகமதுவின் காலத்திற்கு முன் மாற்றப்பட்டிருந்தால் மகமது இன்ஜிலைப்பற்றி அவ்வளவு அதிகமாக என் புகழ்ந்து பேசினார் என்ற கேள்வியைக் கேட்கலாம். அவருடைய காலத்திற்கு பின்னாகவானால் அக்காலத்திலிருந்த பல நூல்களைக்கொண்டு இந்தத் தப்பிதத்தை இலேசாக அறிந்துகொண்டிருக்

கலாம். அக்காலத்தில் அநேக மூல கைப்பிரதிகள் இருந்தன. ஆறு திருப்புதல்களிருந்தன. சீரியாக்கு, காப்டிக்கு, லத்தின், அர்மீனியன், கோதிக்கு, எதியோப்பியா முதலிய இந்த நூல்களைக் கொண்டு இதன் மாறுதல்களை இலேசாய்க் கண்டித்துப்போடலாம்.

யாரால் மாற்றப்பட்டது: முன் பார்த்தபடி பல பாஷைகளில் இது இருப்பதால் ஒருவர் எதையாவது மாற்றினால் மற்ற திருப்புதலினின்று இலேசாக அதின் பிசகையறிந்துகொள்ளக்கூடும். ஆகவே ஒருவரும் இதை மாற்றுவது கூடாதகாரியம். ஆனால் மொழிபெயர்ப்புகளிலும் ஒன்றிலிருந்து இன்னொன்றில் பெயர்த்து எழுதினபோது வார்த்தைகளை கைப்பிசகாய் மாற்றியோ, கூட்டியோ, குறைத்தோ எழுதிய அற்ப சொற்ப வித்தியாசங்களுண்டு. ஆனால் உள்ளான சத்தியத்தில் யாதொரு மாறுதலும் கிடையாது. இப்படிப்பட்ட அற்ப சொற்ப குறைகளை நீக்கி குறைவில்லா நூலாக திருச்சபையுண்டாக்கப் பிரயாசப்படவில்லை. பூர்வக்கொரானில் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட சில விகர்ப்பங்கள் காணப்பட்டன. இதைப்பார்த்த உஸ்மான் என்பவர் வித்தியாசமாயிருந்ததெல்லாவற்றையுமழித்துப்போட்டு ஒரேவிதமான கொரானை எல்லாரும் உபயோகிக்கக் கட்டளையிட்டார். கிறிஸ்தவ சபையோர் அப்படிச் செய்யவில்லை. சத்தியவேதத்தில் மொழிபெயர்ப்பு எழுத்து முதலியவற்றில் காணப்படும் விகர்ப்பங்கள் அந்த நூலின் மேன்மையைக்காட்டும் பல காலங்களில் பல இடங்களில் பலரால் எழுதப்பட்டும் பல பாஷைகளில் திருப்பப்பட்ட இந்நூலில் அற்பசொற்ப மாறுதல் காணப்படுவது ஆச்சரியமல்ல. ஆனால் உள்ளான சத்தியத்தில் எவ்வித மாறுதலுமில்லை. ஒரு நீதிஸ்தலத்தில் சாக்ஷி சொல்லுகிறவர்கள் ஒரேவித வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டுவந்தால் அந்த வழக்குக்குப் பலமிருக்கமாட்டாது. ஆனால் முக்கிய விஷயத்தைப்பற்றி எல்லாரும் பிசகாமல் சொல்லி அதன் தனிவிபரங்களில் மாறுதல்படச் சொல்லியிருந்தாலும் அவர்கள் சாக்ஷியம் உண்மையாக ஏற்றுக்

கொள்ளப்படும். ஒரு ஐந்து ரூபாய் நாணய நோட்டில் சர்க்காரின் குறிகளும் கையெழுத்தும் சரியாய் இருக்கிறதா என்று பார்க்கிறார்களேயொழிய அதிலுள்ள துவாரத்தை அல்லது அழுக்கைக் கவனிக்கிறதில்லை. அவ்வண்ணமே சத்தியவேதமும அற்பசொற்ப வித்தியாசங்களையுடையதாயினும் அது தேவனால் அருளப்பட்ட மெய்யான நூலாகும். மகமதியர்கள் இப்படிப்பட்ட வித்தியாசங்களை வெகு திட்பநுட்பமாய் ஆராய்ந்து குற்றம் எடுத்துக்கூறுவார்கள். ஆகையால் நாம் கவலையோடு அவர்களுக்கு நியாயஞ்சொல்லவேண்டும்.

iii சுவிசேஷங்கள் பின்னாலே வந்த கொரானினால் அவசியமில்லாததாகத் தள்ளப்பட்டதென்பார்கள். மோசேயின் நியாயப்பிரமாணமாகிய தோராவை தாவீதின் சங்கீதமாகிய ஜபூர் மேற்கொண்டதென்றும் இதை இன்ஜிலாகிய சுவிசேஷம் மேற்கொண்டதென்றும் அப்படியே சுவிசேஷத்தை கொரான் மேற்கொண்டு தள்ளிப்போட்டதென்றும் சொல்லுவார்கள்.

இதற்கு நாம் சரியான விடை கொடுக்கவேண்டும். புதிய ஏற்பாட்டில் அல்லது இன்ஜிலில் என்ன அடங்கி இருக்கிறது? பொதுவாக நாலு முக்கிய அம்சங்களை கவனிக்கலாம்: (1) சரித்திரம், (2) ஜெபங்களும் வாக்குத்தத்தங்களும், (3) தீர்க்கதரிசனங்கள், (4) சட்டங்களும் பிரமாணங்களும். இந்த நான்கு விஷயத்தையும் நாம் ஆராய்ச்சிசெய்தால் சுவிசேஷம் தள்ளப்படவேண்டிய நிமித்தமில்லை.

1. சரித்திரத்தை எவரும் மாற்றமுடியாது. கர்ஸான் பிரபு இந்தியாவின் இராஜபிரதிநிதியாய் இருந்தாரென்பதையொருவரும் மாற்ற முடியாது. அப்படியே கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையொருவரும் மாற்றமுடியாது. அது சரித்திரம்.

2. ஜெபங்களையும் வாக்குவாதங்களையும் மாற்றமுடியாது. ஒருவேளை ஜெபத்திற்கு பதில் கொடுக்காமலிருக்கலாம்; ஆனால் அதை மாற்றக்கூடியதல்ல.

3. தீர்க்கதரிசனங்களும் மாறக்கூடியதல்ல.

4. சட்டங்கள் அல்லது நியாயப்பிரமாணங்கள். இவைகள் மேலான சட்டங்களால் மாற்றப்படக்கூடும். கண்ணுக்குக் கண் என்ற சட்டம் கிறிஸ்துவால் சத்துருக்களை நேசியுங்கள் என்று மாற்றப்பட்டது. அப்படியே பெண்களைத்தள்ளிவிடுகிற விஷயத்திலும் கிறிஸ்து அவர்களுடைய மனக்கடினத்தினிமித்தம் கொடுக்கப்பட்ட கட்டளையென்கிறார். ஆகவே நாம் மகமதுவின் கட்டளைகள் இயேசுவின் கட்டளைகளுக்கு மேற்பட்டதாவென்று பார்க்கவேண்டும். பத்துக்கற்பனைகளை இயேசுவின் பிரமாணத்தோடும் மகமதுவின் பிரமாணத்தோடும் ஒப்பிட்டுப்பார்த்தால் இயேசுவின் பிரமாணம் எவ்வளவு சிறந்ததென்று பார்க்கலாம். ஆகவே புதியஏற்பாடு கடவுளால் அருளப்பட்ட புஸ்தகமோ அல்லவோவென்பதை அவர்கள் ஆராய்ந்து நிதானிக்கச் செய்யவேண்டும். அவர்கள் மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தை வாசிக்கக் கேட்கவேண்டும். மகமதியருக்கு ஏற்ற நூல் மத்தேயு சுவிசேஷமே.

நான்காம் அதிகாரம்.

திரித்துவ உபதேசம் :—யூதர் வணங்கும் கடவுளும், மகமதியர் வணங்கும் கடவுளும், கிறிஸ்தவர்கள் வணங்கும் கடவுளும் ஒன்றென்றே சொல்லவேண்டும். மகமதியர் கடவுளைப்பற்றி மேலான எண்ணமுடையவர்களாயினும் அவரைப்பற்றி எண்ணவேண்டிய அவ்வளவு எண்ணுகிறதில்லை. ஒருத்துவக்கொள்கை அல்லது ஒரு தெய்வத்தின்பேரில் நம்பிக்கைவைத்தல் நமக்கு இரட்சிப்பைத்தராது. தெய்வத்தைப்பற்றி நாம் எண்ணும்போது புது எண்ணத்தையவர்களுக்குக் காட்டவேண்டும். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிப்பதே நித்திய ஜீவன் என்ற சத்தியத்தைப் போதிக்கவேண்டும். திரித்துவ உப

தேசத்தைப் பற்றியவர்களுக்குப் போதிப்பது மிகவும் கஷ்டமான காரியம். இவ்விஷயத்தில் நாம் கையாடவேண்டியமுறை :—1 மகமதியருக்குள் இவ்விஷயமாயிருக்கும் தப்பிதத்தை நீக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் மூன்று தெய்வங்களை வணங்குவதாகச் சொல்லுகிறார்கள். கடவுள் மரியம்மாளின் புருஷனென்றும், மரியம்மாள் கடவுளால் பிள்ளை பெற்றாளென்றும், இயேசு அவருடைய பிள்ளையென்றும் ஆக மூன்றுபேரை வணங்குகிறோமென்று மகமதியர்கள் சொல்லுவார்கள். இது சரியல்ல. கிறிஸ்தவர்கள் மூன்று தெய்வத்தைப் பற்றிப் பேசுகிறதில்லை. மரியம்மாளை தெய்வமாக ஒருவரும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆனால் பிதாவாகிய கடவுளை விசுவாசிக்கிறோம். பவுலும் ஒரே தெய்வத்தைப்பற்றி வற்புறுத்துகிறார். திரித்துவ உபதேசம் ஒரு ஆராயப்படாத இரகசியம். நாம் கடவுளைப்பற்றிப் பேசும்போது பன்மையில் பேசாமல் ஒருமையில் பேசுகிறோம். 2. திரித்துவ உபதேசத்தைப்பற்றிய கிறிஸ்தவ உபதேசத்தை வேத வார்த்தையிலேயே சொல்லவேண்டும். எபேசியர். 4 : 6-ம் வசனம் ; 2 கொரிந்தியர் 13 : 14 ; மத்தேயு 28 : 18. இவைபோன்ற வசனங்களில் திரித்துவ உபதேசத்திற்கு அடுத்த விஷயங்களைப் பார்க்கிறோம். எபேசியர் 4 : 6-ம் வசனத்தில் தத்துவசாஸ்திரத்திற்குரிய முறையில் இந்த உபதேசம் போதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதில் மூன்று காரியங்களைக் கவனிக்கிறோம். 1. ஒரே கடவுள் எல்லாருக்கும் மேலானவர். இது தத்துவசாஸ்திரத்தின்படி அவர் சகலத்தையும் கடந்தவரென்று காட்டுகிறது. சகல இராஜரீகமும் பொருந்தியவர். அவருடைய இருப்புக்கு எவ்விதச் சிருஷ்டியுமவசியமில்லை. சுயம்புவாய் தனித்து எல்லாவற்றிற்கும் மேலாக நிற்பவர். 2. ஒரே கடவுள் எல்லாரிலுமுள்ளவர். அதாவது இவர் உள்ளடங்கியவர். சகலத்திலும் கடவுளுண்டு. இது சர்வம் பிரம்மமென்ற கொள்கைக்கு அடுத்தது. 3. ஒரே கடவுள் உங்களுக்குள்ளிருக்கிறவர். இது அவருடைய அவதாரத்தைக்குறிக்கும். கடவுள்

தம்மை ஒவ்வொரு மனுஷனுக்கும் காட்டியிருக்கிறூர். இந்த மூன்றும் கடவுளின் மூன்று நிலையைக்காட்டும். முதல் இரண்டு விஷயங்களையும் வேதம் போதித்தாலும் அவைகளைத் தனித்தனியே வற்புறுத்துகிறதில்லை. இரண்டுலக்ஷணத்தையும் ஒன்று சேர்த்தே போதிக்கிறது. இது தத்துவசாஸ்திரத்திற்கு அடுத்த உபதேசமாயிருந்தபோதிலும் வேதம் நேராகப் போதிப்பதென்ன? புதிய ஏற்பாட்டில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இந்த உபதேசம் பழைய ஏற்பாட்டில் நிழலாட்டமாக அல்லது ஜாடையாகக் காட்டப்பட்டிருக்கிறது. பின்வரும் வசனங்கள் அதைக்காட்டும்:—ஆதி. 1: 1-3, எண்ணு. 6: 24; சங்கீதம் 2. ஏசாயா 48: 16; நீதிமொழி 8-ம் அதிகாரம்.

புதிய ஏற்பாட்டில் இது தெளிவாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறது. மத். 11-ம் அதி. 28-ம் அதி. யோ. 1: 14; 17-ம் அதி. சுவிசேஷங்களுக்கு முன்னதாக எழுதப்பட்ட எபேசியர், கொலோசெயர் நிருபங்களும் இதைப் போதிக்கின்றன. எபிரேயர் நிருபமும் வெளிப்படுத்தின விசேஷமும் திரித்துவத்தைப்பற்றிப் போதிக்கின்றன. இவைகளையெல்லாம் திரட்டிச்சொன்னல் கடவுளுக்குரிய பேர்கள், உரிச்சொற்கள், தொழில் வணக்கம் ஆகிய யாவும், இயேசுவுக்கும் பரிசுத்த ஆவியானவர்க்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, திரியேகத்துவக் கொள்கையைப் புதிய ஏற்பாட்டில் பார்க்கிறேம்.

சில உதாரணங்கள்:—அகுஸ்தீன்யென்ற சபைப் பிதாவிடம் ஒரு மாணுக்கன்போய்க் கேட்டபோது அவர் அவனை யோர்தான் நதிக்குப்போ, அங்கே திரித்துவத்தைப்பற்றி யறிந்துகொள்வாய் என்ருராம். அந்த இடத்தில் குமாரனுக இயேசு நிற்கிறூர். ஆவியானவர் புருவைப்போல் வருகிறூர் பிதாவாக இவர் என் நேசகுமாரன் என்கிறூர். 2. இதை மெழுகுவர்த்திக்கு ஒப்பிடுவார்கள். இது ஒன்ருயிருந்தாலும் மூன்று காணப்படும். திரி, அக்கினிநாவு, வெளிச்

சம் 3. சூரியன் இதில் மூன்று காணப்படும். சூரியமண்டலம், காங்கை, வெளிச்சம் ஒரு மனுஷனுக்கு ஒப்பிடலாம். இவன் சரீரம், மனது, ஆத்துமா, ஆயினும் ஒரு மனுஷனே. முப்பிரி நூலைப்போ லிராமல் வித்தியாசமான பூதங்கள் அடங்கிய தண்ணீரைப்போ லிருக்கிறார். இந்தத் திரித்துவ உபதேசம் தெய்வத்தைப்பற்றிய எண்ணத்தை மேன்மைப்படுத்துகிறது.

3. நாம் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவைப் போதிக் கிறோம். இதின் மூலமாக திரு அவதார உபதேசத்தை நாம் வற் புறுத்த அவர்களோ அப்படிப் போதிக்கிறதில்லை.

4. நாம் வேதாகமத்தை தேவ வெளிப்படுத்தலாக ஒப்புக் கொள்ளுகிறோம். அவர்களோ கொறானை வெளிப்படுத்தலாக நினைக்கிறார்கள்.

5. நாம் சிலுவையையும் பிராயச்சித்தத்தையும் வற்புறுத்து கிறோம். அவர்கள் அப்படியல்ல.

6. நமது மார்க்கத்திலும், நமது குடும்பங்களிலும் ஸ்திரீ களுக்கு விசேஷித்த இடங்கொடுக்கிறோம். அவர்கள் ஸ்திரீகளை பள்ளிவாசலுக்குப் பிரவேசிக்க இடங்கொடுக்கிறதில்லை. அவர்கள் அசுத்தரென்று எண்ணப்படுகிறார்கள்.

7. நாம் வற்புறுத்தும் மூல லக்ஷணங்களுக்கும் அவர்கள் வற்புறுத்தும் மூல லக்ஷணங்களுக்கும் வித்தியாசமுண்டு. அவர்கள் வற்புறுத்தும் லக்ஷணங்களாவன :— 1 பொறுமை, 2 மரியாதை, 3 உபசரிப்பு. ஆனால் கிறிஸ்துமார்க்கம் வற்புறுத்தும் மூன்று விசே ஷித்த லக்ஷணங்களாவன :- 1 சன்மார்க்க வைராக்கியம், 2 உண்மை, 3 யோக்கியம்.

கிறிஸ்துவானவர் இந்த மூன்று லக்ஷணங்களையும் உடைத்தா யிருந்ததோடு மகமதியர் வற்புறுத்தும் மூன்று லக்ஷணங்களையும் உடையவராயிருந்தாரென்று அவர்களுக்குக் காட்டவேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள மகமதியரை மூன்றுவகைப்படுத்தலாம். 1. பூர்வகொள்கையைக் கைப்பிடிப்போர்: இவர்கள் பரிசேய வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மேற்கத்திய நாகரீகத்தையொப்புக் கொள்ளுகிறதில்லை. அவர்கள் அதைக் கேவலமாய் நினைப்பதோடும் தங்களைத் தவிர மற்றசமயத்தார் யாவரும் அசுத்தர்களென்றும் நினைப்பார்கள். இவர்களுடைய மார்க்கம் கமாலியேல், நாத்தான்வேல், சவுல் முதலியவர்களுடைய மார்க்கத்தைப்போன்றது. இவர்களுக்கு வேதபுஸ்தகம் உண்மையானதென்றும் கிறிஸ்து சகலருக்காகவும் மரித்தாரென்றும் காட்டத்தக்க பத்திரிகைகளைக் கொடுக்கவேண்டும். இந்த வகுப்பார் சுத்தமானவுடை தரித்து வெள்ளைத் தலைப்பாகை வைத்திருப்பார்கள்.

2. **மிஸ்டிக்ஸ்.** சந்நியாசக் கூட்டத்தாரைப்போன்றவர்கள். இவர்கள் ஆதிகாலத்திலுள்ள எசேனரைப்போன்றவர்கள். கையிலே எப்போதும் ஜெபமாலைவைத்து அல்லாவின்பேரை உச்சரித்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் முன்சொன்னபடி கடவுளோடு ஐக்கியப்பட ஆசைப்பட்டவர்கள். இவர்களுக்கு நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் என்ற சத்தியத்தைப் போதிக்கவேண்டும். இந்த இரண்டு வகுப்பாரும் கூடியமட்டும் தங்கள் ஜீவியத்தில் சுத்தமானவர்கள்.

3. **சுயாதீனக் கூட்டத்தார்.** அல்லது தற்கால ஐதீகமுள்ளோர். இவர்கள் தங்கள் சொந்த தேசத்தைப்பற்றிய அபிமானமுடையோர். இவர்களைச் சதுசேயருக்கு ஒப்பிடலாம். இவர்கள் மார்க்கத்தில் அதிக அபிமானமுடையவர்களல்ல. இவர்களுடைய நடக்கையும் முந்தினவர்களைப்போல் அவ்வளவு சுத்தமானதல்ல. இவர்கள் ஒருவாறு தெய்வமற்றவர்கள். இவர்களுக்கு ரினன், இங்கர்சால் முதலிய வேதவிரோதிகளுக்கு எழுதப்பட்ட புஸ்தகங்களைக்

கொடுப்பது நன்று. The Fact of Christ by Carniege Simpson. இப்படிப்பட்ட புஸ்தகங்களைக் கொடுப்பது இவர்களை ஆதாயஞ்செய்யும் முறை.

ஐந்தாம் அதிகாரம்.

இந்தியாவில் இஸ்லாம் மார்க்கம் :—இந்தியாவில் ஏழுகோடி மகமதியர்கள் வசிக்கிறார்கள். இவர்களைப்பற்றி நன்றாய் அறிவது நமது விசேஷித்த கடமையாகும். பின்வரும் எட்டுக்காரியங்களை கவனிக்கலாம் :—1 இஸ்லாமிய புஸ்தகங்கள். மிஷனெரிமார் இதைப்பற்றி யதிகமாகக்கவலையெடுத்தாகத் தெரியவில்லை. இப்போது நேஷனல் கிறிஸ்டியன் கவுன்சில் ஒரு புஸ்தகம் பிரசுரித்திருக்கிறது. இதின் விலை பன்னிரண்டணா. இந்தப்புஸ்தகம் இந்தியாவிலுள்ள மகமதியரைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறது. ஆயினும் மகமதிய பத்திரிகைகளைப்பற்றி யொன்றும் கூறுகிறதில்லை. இந்தியாவில் மாத்திரம் 222 பத்திரிகைகள் மகமதியரால் பிரசுரிக்கப்படுகிறது. விசேஷித்த புஸ்தகங்களைப்பற்றி முதலாம் உபந்நியாசத்தில் கூறியிருக்கிறோம். அதைத் திருப்பிப் பார்த்துக்கொள்ளவும். 2. மகமதுமார்க்கம் இந்தியாவில் பிரவேசித்த சரித்திரச் சுருக்கம். பின்வரும் தேதிகள் மகமதுமார்க்கத்தைப்பற்றிய விசேஷித்த சம்பவங்களைக் குறிக்கும்.

(a) கி. பி. 712. முதல் முதலாக சிந்துதீரத்தில் மகமதியர்கள் உட்பிரவேசித்தார்கள்.

(b) கி. பி. 1001. கஜினிமகமது இந்தியாவுக்கு வந்து இந்து ஆலயங்களைக் கொள்ளையிட்டது.

(c) 1193. டில்லி மகமதியரால் கைப்பற்றப்பட்டது.

(d) 1347. முதல் 1518. பாரசீக மகமதியராகிய ஷிய்யா வகுப்பார் தென் இந்தியாவில் வந்து அநேகரை மகமதியராக்கினார்கள்.

(e) 1526 முதல் 1707. முகலாயவம்சத்தாரான இராஜாக்கள் அரசாண்டார்கள். இவர்களில் அக்பர், அவுரங்கசீப்பு என்பவர்கள் விசேஷித்தவர்கள்.

இனி தற்கால மகமதிய சரித்திரம் ஆரம்பிக்கிறது. 1820. வாகாப்பியர் என்ற அரேபியக்கூட்டத்தார் எழும்பி மகமது மார்க்கத்தை விசேஷப்படுத்தி எழுப்புதல் உண்டாக்கினர்.

மகமது மார்க்கத்தில் புதுவல்லமையும் பரபரப்பும் காணப்பட்டது. சர்க்காருக்கு விரோதமான கிளர்ச்சி ஏற்பட்டது.

(f) 1857. மேற்கண்ட கிளர்ச்சியின் பலனாக பெரிய கலகம் இந்தியாவில் உண்டாயிற்று.

(g) 1875. முன்காணப்பட்ட பரபரப்புக்கு விரோதமான முயற்சி. மகமதியர் கல்வியின்மேல் பிரியப்படவும், இராஜாங்க விசுவாசமுடையவர்களாயுமிருக்கவும் ஆரம்பித்தனர். அலிக்காரில் பெரிய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

(h) 1906. மகமதியருக்குள்ளே தேச சிலாக்கியங்களைப் பெற வேண்டுமென்கிற எண்ணமுண்டாயிற்று. மகமதிய ஐக்கிய சங்கங்கள் அநேகம் ஏற்படுத்தினர். இந்துக்களுக்கும் மகமதியருக்கும் பிரிவினை காணப்பட்டது. முஸ்லீம் லீக் என்ற ஐக்கிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

(i) 1919. இக்காலத்தில் மகமதியர் இந்துக்களோடு சேர்ந்து சர்க்காருக்கு விரோதமான முயற்சி செய்தார்கள். கிலாபத்து மிகவும் முக்கியமாக ஆதரிக்கப்பட்டு வந்தது.

(j) 1925. கிலாபத்து தவறிப்போனதால் அதைப்பற்றிய உற்சாகம் குறைந்தது. மகமதியருக்கும் இந்துக்களுக்கும் மீண்டும் ஐக்யக் குறைவுண்டாயிற்று. மகமதியரில் ஒற்றுமையாக் கக்ஷியிலும், வேறு சிலர் ஒற்றுமைக்கும் கக்ஷியிலும் சேர்ந்தார்கள்.

3. மகமதியரின் ஜனசங்கை.

பின்வருமாறு மகமதியரின் ஜனத்தொகை இருப்பதாய்ப் பார்க்கலாம்.

காஸ்மீர்	100க்கு	77	பேர் மகமதியர்.
பஞ்சாப்	ஷை	55	ஷை
பெங்கால்	ஷை	54	ஷை
அசாம்	ஷை	29	ஷை
அசிமீர்	ஷை	20	ஷை
பம்பாய்	ஷை	19	ஷை
ஐக்ய மாகாணம்	ஷை	14	ஷை
ஐதராபாத்து	ஷை	10	ஷை
பீகார்	ஷை	10	ஷை
ராஜபுதனம்	ஷை	8	ஷை
சென்னை	ஷை	6	ஷை
மைசூர்	ஷை	5	ஷை
பர்மா	ஷை	4	ஷை
மத்திய மகாணம்	ஷை	4	ஷை

4. வகுப்புகளும் பிரிவுகளும்.

மகமதியர் இரண்டு வகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். 1. பூர்வ ஜாதியைக் கவனித்து இதில் 7 பிரிவுண்டு. இந்தப்பிரிவு மார்க்கத்திற்கடுத்த பிரிவல்ல. ஆனால் அவர்களுடைய ஆதிபூர்வ உற்பத்தியைக்காட்டும். 1. சையது. இவர்கள் மகமது நபியின் வழியைச் சேர்ந்தவர்கள். அவருடைய இரத்தக்கலப்பானவர்கள். 2. சே

யாகீஸ். இவர்கள் மகமதுமார்க்கத்தை முதலாவது தழுவியவர்களின் வம்சத்தார். 3. மாப்பிலா. மலையாளத்தில் அராபியர்கள் வந்த காலத்தில் அரபிய தகப்பனுக்கும் மலையாளத்தாய்க்கும் பிறந்தவர்களின் சந்ததியார். 4. லெப்பைகள். இவர்கள் தமிழ் தெலுங்கு தாய்மார்க்கும் அரபிய தகப்பன்மார்க்கும் பிறந்தவர்கள். இவர்களைத்தவிர மரக்காயரென்றும், தூதிக்காலரென்றும், பட்டாணிகளென்றும் பல் வகுப்பார்களுண்டு.

2. மார்க்கத்தின்படி இவர்கள் இரண்டு பிரிவாய்ப் பிரிக்கப் படுவார்கள். 1. சன்னிவகுப்பார். 2. சீயாவகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களைப்பற்றி முதலாம் அதிகாரத்திலே கூறியிருக்கிறோம்.

5. மகமதிய சங்கங்களும் சபையமைப்புகளும்.

மகமதியர்களுக்குள் வெகுதிறமையுடன் அமைக்கப்பட்ட சங்கங்களும் சபாக்களுமுண்டு. அதிலும் தென்இந்தியாவில் வெகு திறமையுடன் அமைக்கப்பட்டவைகள் பலவுள. இந்தச்சங்கங்களையெல்லாம் மூன்றுவகையாகப் பிரிக்கலாம். 1. இராஜாங்க விஷயமான காரியங்களை ஆலோசித்து நடப்பிக்கும் சபை. இவைகளில் விசேஷித்தவை கிலாபத்து என்பதும் முஸ்லீம் லீக் என்பதுமே. இவைகளின் விசேஷ நோக்கம் இஸ்லாமியர் எவ்விதம் அரசாக்ஷி விஷயத்தில் முன்னேறலாமென்பதை யோசிப்பதே. இவர்கள் இந்துக்களையும் சர்க்காரையும் வெகு கவலையுடன் கவனித்துத் தங்கள் காரியம் முன்னேற்றமடைய ஜாக்கிரதையாயிருந்து வருகிறார்கள். 2. மதப்பிரபல்லியம் மகமதிய மார்க்கத்தைப் பிரபல்யமாக்க வேண்டுமென்பதே இச்சங்கத்தின் நோக்கம். இதற்கு தப்லிக் தான்சிம் என்ற பேருண்டு. அதாவது மார்க்கத்தைப் பிரபல்யப்படுத்தும் சங்கமென்றர்த்தம். இந்தச் சங்கத்தார் பத்திரிகைகளின் மூலமாயும் பிரசங்கங்களின் மூலமாயும் பிரபல்லியம் செய்துவருகின்றனர். லாகூரில் மாத்திரம் லக்ஷக்கணக்கான ரூபாய் இதற்காகச் செலவிடப்பட்டு வருகிறது.

3. ஆவிக்குரிய சங்கங்கள். வடஇந்தியாவில் செஸ்டி என்ற கூட்டத்தாருண்டு. தென் இந்தியாவில் காதிரி என்ற கூட்டத்தாருண்டு. இவர்களுக்குள் நச்சிபந்தி, ஜாபாலி என்ற இருவகையுண்டு. இந்தக் கூட்டத்தாரெல்லாம் கடவுளோடு ஐக்கியப்படும்படி பிரயாசை யெடுத்துக்கொள்கிறவர்கள். ஜாபாலி என்ற கூட்டத்தார் யோகிகளைப் போன்றோர். இவர்கள் கடவுளோடு ஐக்கியப்படும்படியாகக் கொருனை வாசிப்பதும் ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுவதுமுண்டு. இவர்கள் பொதுவாக நல்ல நடக்கையுள்ளோர்.

6. அச்சுப்பிரசுரம்.—இந்தியாவில் மாத்திரம் முன்சொன்னபடி 222 பத்திரிகைகளும் பிரதிகளும் அச்சிடப்படுகின்றன. தமிழிலும் அநேக பத்திரிகைகளுண்டு. தாருல் இஸ்லாம் என்ற பத்திரிகை மகமதிய உலகம் எவ்வாறு நினைக்கிறதென்றும், செய்கிறதென்றும் காட்டுகிறது. மகமதியரைப் பற்றியறியவேண்டுமென்றால் இப்பத்திரிகையை வாசிப்பது நன்று. சத்திய மித்திரன், தூதன், சேவ்வுன், இஸ்லாம் என்ற பத்திரிகைள் விசேஷித்தவைகள். தமிழிலும் தெலுங்கிலும், மலையாளத்திலும், கன்னடத்திலும், ஆங்கிலத்திலும், அரபி பாஷையிலும் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளை வாங்கி வாசிப்பது நல்லது. அப்படிச் செய்வோமானல் அநேக காரியங்களை அறிந்துகொள்வோம்.

7. கல்வி.—இஸ்லாமியருக்குள் 100-க்கு 96½ பேருக்கு வாசிக்க எழுதத் தெரியாது. ஆனல் இப்போது கல்வியை விர்த்திபண்ணும்படி விசேஷித்த முயற்சிசெய்து வருகிறார்கள். பொதுவான கல்விக்காக கவர்ன்மெண்டு கலாசாலையும், அலிகார் கலாசாலையும், ஐதராபாத்திலுள்ள இஸ்லாமிய கலாசாலையும், இன்னும் அநேக உயர்தரப் பாடசாலைகளுமுண்டு. இதைத்தவிர மார்க்கசம்மந்தமாக வேதசாஸ்திர சாலைகள் எட்டு இடங்களிலுண்டு. கான்பூர், தேயோபந்து, லக்னே, அலகபாத், அவுரங்கபாத், வாணியம்பட்டி, வேலூர்

முதலிய இடங்களில் இப்படிப்பட்ட வேதசாஸ்திர பாடசாலைக ளுண்டு. இங்கு கொருனே வெகு திட்பநுட்பமாய்ப் படிப்பதுடன் மிஷனெரிகளாகப் போகும்படி பயிற்சியுமடைகிறார்கள். அதோடு மற்ற மார்க்கத்தைத் தர்க்சத்தில் வெல்லும்படியாகவும் பயற்றுவிக்கி றார்கள். இவர்களிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் காரியம் நாம் நமது வேதத்தை நன்றாய்ப் படிக்கவேண்டுமென்பதே.

8. ஜனசங்க நிலே.—இதிலே அநேக கஷ்டமான காரியங்க ளுண்டு. ஸ்திரீகளுடைய நிலைமை மிகவும் பரிதாபமான நிலைமை. அவர்களுடைய ஜனசங்க ஜீவியத்தைப்பற்றி நாம் நன்றாய்ப் படிக்க வேண்டும். குழந்தை பிறக்கும்போது 7 அல்லது 8 வயதாகும்போதும் என்னென்ன காரியஞ் செய்யப்படுகிறதென்றறியவேண்டும். திரைக ளுக்குள் அடைபட்டிருக்கும் ஸ்திரீகளின் நிலைமையப்பற்றியும் அறி வது நமது கடமை. அவர்களுக்குள் பலதார வழக்கம் எம்மட்டும் பலமாய் இருக்கிறதென்றும், மனைவிகளைத் தள்ளிவிடும் விஷயம் எவ்வளவாயிருக்கிறதென்றும் அறிவோமானால் அதிக நன்மையே. இவைபோன்ற காரியங்களை நாம் கவனித்துப் படிப்பது நமது கட மையாம்.

ஆறும் அதிகாரம்

இந்தியாவிலுள்ள மகமதியருக்குள் நூல்களை 100-க்கு 96 பேர் வாசிக்க எழுதத் தெரியாதவர்கள் என்பது விசனமான காரியம். ஆயி னும் வாசிக்கத்தெரிந்த மீதியான 4 பேர் மிகவும் விசேஷித்தவர்கள் அவர்களைக்கொண்டு நாம் பலத்தவேலை செய்யலாம். எப்படியெ னில்: (1) படித்தவர்கள் தலைவர்கள். இவர்கள் ஜனங்களை நடத்தக் கூடியவர்களாயிருக்கிறார்கள். படித்த முல்லாக்களை சாதாரண ஜனங் கள் வெகுவாக மதிப்பார்கள். (2) வாசிக்கத் தெரிந்தவர்கள் சத்த மாக பிறருக்கும் வாசித்துக் காட்டுகிறார்கள். ஒருவருக்கு ஒரு புஸ்த

கம் கொடுத்தால் அதை மற்றவர்களுக்கும் வாசித்துக் காட்டக்கூடிய வர்களாய் இருக்கிறார்கள். (3) எல்லா மகமதியரும் புஸ்தகங்களை அதி கம் மதிக்கிறார்கள். கீழே புஸ்தகத்தாள் கிடக்க விரும்பார்கள். அவர் கள் புஸ்தகத்திற்கு முத்தமிட்டு அப்புறம் வாசிப்பார்கள். (4) தற் காலத்தில் பள்ளிக்கூடங்களின் தொகை யதிகரித்துக்கொண்டேவரு கிறது. ஆகையினால் அவர்களுக்கென்று புஸ்தகங்களையும் கைப்பிரதி களையும் தயாரித்துக்கொடுக்கவேண்டும். ஏனெனில் அவைகள் மிக வும் விசேஷித்த காரியங்களென்று பார்க்கலாம். அப்போஸ்தலனா கிய பவுல் விசேஷித்த பிரசங்கியாக இருந்தார். ஆயினும் அவரு டைய விசேஷித்த வேலை அவர் எழுதிய நிருபங்களே. பனியன் பெரிவராக இருந்தார். அவருடைய பிரசங்கத்தை நாம் மறந்துபோ கலாம். ஆனால் அவர் எழுதிய மோக்ஷபிரயாணம் என்ற புஸ்தகம் மறக்கப்பட்டதல்ல. இருவரும் தங்கள் புஸ்தகங்களின் மூலமாய் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். ஆகவே அச்சடித்த புஸ்தகங் களைப்போல வேறெந்த மிஷன் வேலையின் முறைகள் அவ்வளவு மேன்மையானதல்ல. ஏனெனில் (1) அச்சடித்த புஸ்தகத்தைப் போல் வேறெந்த ஊழியமும் அவ்வளவு ஆழமாய் உட்செல்லுகிற தில்லை. அரமனைக்குள் பிரவேசிக்கக்கூடாமல் நாமிருக்கலாம். ஆனால் நாம் அனுப்பும் புஸ்தகம் அல்லது கைப்பிரதி அரமனைக்குள்ளும் பிர வேசித்து அரசரும் வாசிக்கக்கூடியதாயிருக்கும். (2) அச்சிட்டதாள் போல வேறெதுவும் அவ்வளவு தைரியமாய்ச் சாக்ஷிகொடுக்கிறதில்லை. ஒரு மனுஷனை நேராக அவனுடைய தப்பிதத்திற்காகக் கண்டிக்க நமக்குத் தைரியமில்லாதிருக்கலாம். ஆனால் நாம் அனுப்பும் வேத வாக்கு அவன் பாவத்தைக் கண்டிக்கலாம். புஸ்தகம் பயப்படுகிற தில்லை. 3. அச்சடிக்கப்பட்ட தாள்போல் எப்போதும் நிலைத்தி ருக்கக்கூடிய வகை வேறொன்றுமில்லை. ஒருவரும் அதிகக்காலம் ஜீவிக்கப்போகிறதில்லை. ஆனால் ஒருபுஸ்தகம் அதிக காலமிருக்கக்கூடு ம். அது தன்னுடைய கிரியையைச் செய்யக்கூடும். 4. அச்சடிக்கப்ப ட்ட பிரதிகளைப்போல அவ்வளவு செல்வாக்குச் செலுத்தக்கூடியவை

வேறொன்றுமில்லை. அவைகள் மனுஷரைப் பலமாய்ப் பிடித்துக் கொள்ளுகிறது. 5. அச்சடிக்கப்பட்ட தாள்களைப்போல அவ்வளவு குறைந்த செலவில் வேலை செய்யக்கூடிய முறையுமில்லை. ஒரு ரூபாய்க்கு பஞ்சாப் புஸ்தக சங்கத்தினின்று (Punjab Tract Society) படம் போட்ட உருடு கைப்பிரதிகள் ஈராயிரம் வாங்கலாம். ஆகவே இந்த அச்சுப்பிரதிகளின் மூலமாக நாம் பெரியவேலை செய்யக்கூடும். ஆயினும் நாம் செய்கிறதில்லை. இதற்குக் காரணமென்ன? மூன்று காரணங்களைச் சொல்லலாம். (1) எளிமை. இந்த எளிமைத்தனம் புஸ்தகக்குறைவில் காணப்படும். மகமதியருக்கு ஏற்ற நூல்கள் தமிழில் வெகுசொற்பமே. ஒன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். இந்தத் தரித்திரம் நீங்கவேண்டும். அதோடு சாதரண ஜனங்களுக்குப் பணக்கஷ்டமுண்டு. என்றாலும் நம்மால் கூடியமட்டும் பணஞ்செலவழிக்கவேண்டும். (2) முன் எண்ணம். ஜனங்கள் கிழித்துப்போடுவார்களென்றும் இதனால் பிரயோஜனமில்லையென்றும் முன் எண்ணமுண்டு. 10 பேரில் 9 பேர் கிழித்துப் போட்டாலும் ஒருவன் அதை வாசிக்கக்கூடுமானால் அதுவே போதும். நஷ்டத்தை நாம் நினைப்போமானால் நாம் நன்மை செய்யமுடியாது. (3) பெருமை. பீடத்தினின்று பிரசங்கம் செய்யஆசை. ஆனால் சாதாரண ஜனங்களிடத்தில் பேசி பத்திரிகை கொடுப்பது கனவீனமென்று நினைக்கிறார்கள். போதகன்மாரும் மிஷனெரிமாரும் தாங்கள் பிரயாணம்பண்ணும்போது எம்மட்டிற்குப் பத்திரிகை கொடுத்து வருகிறார்கள். நமது பெருமை நீங்கவேண்டுமானால் பத்திரிகை கொடுப்போமாக. இந்த ஊழியத்தால் பெரிய நன்மையுண்டு. அதினால் வரும் சந்தோஷத்தை யனுபவிப்போமாக.

மகமதிய மார்க்கத்தைப்பற்றிப் புஸ்தகங்கள் வாங்க விரும்புவோர் பின் கண்ட இடங்களுக்கு எழுதவும்:—

1. The Punjab Tract Society, Lahore.
2. The Nile Mission Tract Society, Cairo, Egypt.

ஆறும் பாகம்.

சில சாட்சிகளின் சுருக்க ஜீவியமும் அவர்கள் அனுசரித்த முறைகளும்.

Lives of some Witnesses and their Experience.

இந்தப் பாகத்தில் சித்தியுள்ள சாட்சிகளாக விளங்கின சிலருடைய ஜீவியத்தைச் சுருக்கமாக ஆராய்ந்து அவர்கள் சாட்சிகளாக அனுசரித்த முறைகள் என்னவென்றும் பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டுப் பக்தர்களில் சிலர் பலத்த சாட்சிகளாயிருந்திருக்கிறார்கள். யெகோவாவின் விசேஷித்த தன்மைகளைக் குறித்துத் திட்டமான சாட்சி பகர்ந்திருக்கின்றனர். அதனால் அவர்களுக்கு உண்டான துன்பங்கள் பல உள. அவைகளைப் பொருட்டாயெண்ணாமல் தாங்கள் சரியென்று ஒப்புக்கொண்ட சத்தியங்களைத் திட்டமாகத் தெளிவாகக் கூறிவந்திருக்கின்றனர்.

புதிய ஏற்பாட்டை வாசித்தாலும் கிறிஸ்துவுக்காகச் சாட்சி கொடுத்த அநேகரைப்பற்றி வாசிக்கலாம். இதைவிட்டு திருச்சபை சரித்திரத்தை ஆராய்வோமானால் தீக்கும், பட்டயத்திற்கும், படுகொலைக்கும் அஞ்சாத வீரர்களின் சாட்சியங்களைப் பார்க்கலாம்.

மிஷன் சரித்திரத்தை நாம் தீர வாசித்தால் இதிலும் வல்லமையுள்ள சாட்சிகளைக் காண்போம். ஒவ்வொரு மிஷனிலும் இவர்களைப் பார்க்கலாம். இவர்கள் தங்களுடைய ஜனங்களுக்குச் சாட்சிகூறி அவர்களைக் கிறிஸ்துவண்டை கொண்டுவர விசேஷித்த முயற்சி எடுத்திருக்கின்றனர். இவர்களைப்பற்றியும் சற்று ஆராய்வோம்.

முதலாம் அதிகாரம்.

பழைய ஏற்பாட்டுச் சாட்சிகள்.

Old Testament Witnesses.

1. ஜெபத்தில் வல்ல எலியா தீர்க்கதரிசி.

எபி. 11-ம் அதி.; 1 இரா. 17: 15 23-ம் அதி. 18-23; 19: 5, 19; 21: 17; 2 இரா. 1: 3, 19; 2: 11; யாக். 5: 17-18.

சரித்திரம்.

எலியாவினுடைய ஆரம்ப ஜீவியத்தைப்பற்றி நாம் ஒன்றும் அறியோம். அவன் யாருடைய மகனென்றாவது, அவனுடைய குடும்ப சரித்திரமென்னவென்றாவது நமக்கொன்றும் தெரியாது கடவுளைப் பற்றி அசட்டை நிறைந்த காலத்தில் திடீரென்று இவன் தோன்றி சுடரொளியாய்ப் பிரகாசித்தவன். எலியா என்ற பெயருக்கு 'யெகோவா என் கடவுள்' என்று அர்த்தம். இன்னொருவிதமாய்ச் சொன்னால் "யெகோவாவைத் தனக்குக் கடவுளாகக்கொண்டவன்" என்று அர்த்தப்படும். "கிலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய" என்ற சொற்றொடர் எபிரேயப் பாஷையில் பின்வரும் அர்த்தத்தைக் கொடுக்கும். "கிலேயாத்தில் குடியிருந்த ஜனங்களினின்று வந்த குடி" என்பதாம். இதைத் தவிர நமக்கொன்றும் தெரியாது. இவன் மலைவாசியாகவிருந்து திடகாத்திரியமும், திடமனதுள்ளவனாயுமிருந்தான். அஞ்சா நெஞ்சன். சத்தியத்திற்குச் சாட்சிகூறியவன் இவன். ஆகாபு ராஜாவின் காலத்தில் யெகோவாவின் தீர்க்கதரிசியாயிருந்து சாட்சிபகர்ந்து வந்தான்.

சந்தர்ப்பம்.

ஆகாப் ராஜா யேசபேல் என்ற சீதோனியர் இராஜஸ்திரீயை விவாகம்பண்ணினான். அவள் பாகல் வணக்கக்காரி. பாகலுக்காக பலிபீடங்களைக் கட்டுவித்தாள். யெகோவாவின் தீர்க்கதரிசிகளைச் சங்

கரித்தாள். ஜனங்களை விக்கிரக வணக்கத்திற்கு ஏவிவிட்டாள். ஜனங்கள் பாவம்செய்தார்கள். இந்த சமயத்தில் எலியா பலத்த சாட்சியாய் விளங்கினன்.

சாட்சியம்.

எலியா கொடுத்த சாட்சி என்ன? அவனுடைய பெயர்ப்படியே யெகோவாவே தெய்வமென்று சாட்சிகொடுத்தான்.

சாட்சிசொன்ன விதம்

(1) ராஜாவிடம் வரப்போகிற தண்டனையைக்குறித்து திட்டமாய்ச் சொன்னன். பாவத்தினிமித்தம் மழைவராதென்று எச்சரித்தான்.

(2) காலம் நிறைவேறினபோது மறுபடியும் ராஜாவண்டை வந்து பாகால் வணக்கத்தைக் கண்டித்து கர்த்தருக்காகச் சாட்சிகூறினன். 2 இரா. 18 : 18.

(3) பாகாலின் தீர்க்கதரிசிகளுக்குச் சாட்சிகூறினன். பகிரங்கமான அடையாளத்தைக் குறிப்பிட்டு ஜெபத்தின் மூலமாய் அது நடந்தேறச்செய்து கர்த்தரே தெய்வமென்று சாட்சிகொடுத்தான்.

(4) ஜெபத்தின் மூலமாய் மழை பெய்யும்படிசெய்து யெகோவாவே தெய்வமென்று ஆகாப்புக்குக் காட்டினன். (1 இரா. 18 : 45.)

(5) நாபோத்தின் தோட்டத்தை ஆகாப் இச்சித்துக்கொண்டபோது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச்செய்து யெகோவாவை அவமதிக்கமுடியாதென்று சாட்சியாய்க்கூறி, ஆகாப்பைக் கடிந்துகொண்டான். (2 இரா. 21 : 20.)

(6) அகசியா யெகோவாவிடத்தில் ஆலோசனை கேட்காமல் பாகால்சேபு என்ற அஞ்ஞான தெய்வங்களிடத்தில், விசாரிக்கும்படி

ஆட்களை அனுப்பினபோது எலியா அவனைக் கண்டித்து இஸ்ரவேலிலே யெகோவா இருக்கிறாரென்று சாட்சிகூறி ரூபித்தான். (1 இரா 19: 16-21.)

பலன்.

1. யெகோவாவின் வணக்கம் மங்கி பாகாலின் வணக்கம் பலப்படவிருந்த காலத்தில் இவனுடைய சாட்சியம் விக்கிரகங்களை நிக்கரகஞ்செய்து யெகோவாவே மெய்யான தெய்வமென்று நிலைநாட்டிற்று.

2. பக்தனுக்கு இதனால் பலவிதத் துன்பமுண்டாயிற்று. ஊரைவிட்டு ஓடவேண்டியதிருந்தது, உயிருக்கு மோசம்வர இருந்தது; ஆயினும் திடமாக வல்லமையோடு சாட்சிபகர்ந்தான்.

2. எலிசா தீர்க்கதரிசி.

1 இரா. 19: 16-21; 2 இரா. 2 அதி.; 7 அதி.

சரித்திரம்.

எலிசா எலியாவின் ஊழியக்காரன். எலியாவிடத்தில் வருவதற்குமுன் பெரிய சமுசாரியாக இருந்தான். அவன் தன் வேலையைச்செய்து உழுதுகொண்டிருக்கும்போது எலியாவால் அழைக்கப்பட்டான். அவன் தகப்பனைக் கனம்பண்ணுகிறவனாகப் பெற்றோரிடம் வழிசொல்லிக்கொண்டு தன்னை முழுவதும் ஆண்டவருக்குப் பிரதிஷ்டைசெய்து எலியாவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருந்தான். எலியா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவனிடத்திலிருந்து இரட்டிப்பான வரம்வாங்கி வல்லமையுள்ள சாட்சியாயிருந்தான்.

சந்தர்ப்பம்.

இவனுடைய ஊழியம் கர்த்தருக்குப் பொல்லாப்பானதைச் செய்த இராஜாக்களின் காலத்திலே நடந்தேறிற்று.

சாட்சி.

இவனுடைய ஜீவியம் மற்றவர்களால் பரிசுத்தமுள்ள ஜீவிய மென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. (2 இரா. 4: 9.) இவன் கடினமுள்ள சாட்சியாயிருந்தபோதிலும் அன்பான உதவிகளையும் செய்திருக்கிறுன். இவன் காலத்தில் தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூட மிருந்தது. அவர்களுக்குள்ளே இவன் சஞ்சரித்து சாட்சிகூறி அவர் களை பக்திக்கடுத்த விஷயத்தில் வளர்த்துவந்தான். (2 இரா. 6: 1-7) இவன் தன்னுடைய மாணுக்கரோடு அவர்களுடைய வேலை ஸ்தலங்க ளுக்குச்சென்று அவர்களை உற்சாகப்படுத்தினுன்.

உதவியற்ற ஏழைக்கு உதவிசெய்தான். தனக்குக் கிடைத்த அற்புத வல்லமையை கடன்பட்டுப்போயிருந்த தன் மாணுக்கனின் கைம்பெண்ணுக்கு கடனைதீர்க்க உபயோகித்தான். (2 இரா. 4: 1-7) இவ்விதமாக அன்பின் கிரியையினுல் சாட்சி பகர்ந்தான். தேவன் அன்புள்ளவரென்று சாட்சி கூறினுன். பயப்பட்ட ஊழியக் காரனுக்கு தரிசனத்தைக் காட்டிப் பயத்தை நீக்கினுன். தன் வேலைக் காரனேடு பட்சமாய்ப் பேசி அவன் கர்த்தரின்பேரில் நம்பிக்கையா யிருக்கும்படி ஏவி அவன் கண்களைத் திறக்கும்படி ஜெபித்து அவனை தைரியப்படுத்தினுன். தன்னுடைய சாட்சியின் மூலமாகத் தன் ஊழியக்காரனை ஆதாயப்படுத்தினுன். (2 இரா. 6: 16-17).

எலிசா தீர்க்கதரிசி சூனேமியாளின் மகனை உயிரோடெழுப்பின சரித்திரத்தை வாசித்து தனித்தாள் ஊழியத்தில் கையாடவேண்டிய சில முறைகளை அறிந்துகொள்ளலாம். 2 இரா. 4: 29-37. செத் துப்போன பிள்ளையைப்பற்றித் தாய் எலிசாவிற்கு அறிவித்தாள். எலிசா அதைக் கேட்டவுடன் தன் வேலைக்காரன் கையில் தன் தடி யைக் கொடுத்து பிள்ளையின்மேல் வைக்கும்படி அனுப்பினுன். தடி பிள்ளையின்மேல் வைக்கப்பட்டது. பிள்ளைக்கோ உயிர் வரவில்லை. இந்தச் சம்பவம் தனித்தாள் ஊழியத்தில் நாம் கையாடும் தப்பிதமான

ஒரு முறையைக் காட்டும். அதாவது பாவத்தில் சிக்கியிருக்கிற ஒரு ஆளிடத்தில் நாமே நேராகப்போகாமல் வேறு ஆட்களை அனுப்பு வதைக் குறிப்பிடும். அதனால் பலன் வருகிறதில்லை.

அந்த முயற்சி சித்தியாகாதபோது எலிசா இன்னொரு விசேஷித்த முறையைக் கையாடுகிறான் இரா. 4 : 33, 34. (1) கதவைப் பூட்டி கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான் இது முக்கியமான காரியம்.

(2) பிணமாகவிருந்த அந்தப் பிள்ளையின் கிட்டப்போய் தன் வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்கள் மேலும், தன் உள்ளங்கை அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படி யாக அவன்மேல் குப்புறப் படுத்துக்கொண்டான். அப்பொழுது பிள்ளையின் உடல் அனல்கொண்டது. இங்கே எலிசா தன்னை அந்தப் பிள்ளையோடு சம்பந்தப்படுத்துகிறான். அந்தப் பிள்ளையின் அளவுக்குத்தக்கதாகத் தன்னைக் கொண்டுவருகிறான். தன் தேகத்தி லிருந்து அனல் செல்லும்படியாகச் செய்கிறான்.

தனித்தாளுக்குச் சாட்சிகூறும்போது நாம் கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்பு இதுவாகும். அந்தந்த ஆளின் நிலைமையிலே நம்மை வைத்து ஆராய்ந்து சாட்சிகூறவேண்டும். அவர்கள் எண்ணம், அவர் கள் பார்வை, அவர்களுடைய சுற்றுப்புறச் செல்வாக்கு, குடும்பநிலை முதலியவைகளைக் கவனித்து அவர்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையில் கிறிஸ்து என்ன செய்வார் என்று காட்டவேண்டும். நம்முடைய அனுபவம் அவர்களை அன லுண்டாக்கும். 35-வது வசனத்தில் எலிசா சற்று எழுந்து அறை வீட்டில் உலாத்தினதாகச் சொல்லப்படுகிறது. உயிரற்ற பிணத்தின் குளிரினால் அனல் இறங்கிப்போக அவன் உலாவி அனலைப் பெற்றுக் கொள்ளுகிறான். நம்மிடத்தில் சம்பாஷணை செய்கிறவர்கள் அறிக் கையிடும் பாவகாரியங்களைக் கேட்கக் கேட்க நயக்குள் அனல் குறை யும். நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். எலிசா உலாவி அனலைப்

பெற்றுக்கொண்டதைப்போல நாமும் ஜெபித்து ஆண்டவர் சமுகத்தில் நின்று ஆவியின் அனலைப்பெற்று மீண்டும் சாட்சிகூறவேண்டும். அப்போது இந்தப் பிள்ளை தம்பி உயிரடைந்ததுபோல பாவிகள் புது ஜீவனை அடைவார்கள். நாமும் அவர்களைப் பார்த்துச் சந்தோஷப் படுவோம்.

3. தானியேலும் அவனுடைய கூட்டாளிகளும்.

தானி. 1-6 அதிகாரங்கள்.

சரித்திரம்.

எருசலேம் பிடிக்கப்பட்ட காலத்தில் தானியேலும் அவனோடு சேர்ந்த கூட்டாளிகளும் சிறைகளாக பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டார்கள். இவர்கள் இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களும் புத்திசாலிகளுமான வாலிபர் பாபிலோனிலிருந்த காலத்தில் இராஜாவுடைய தயவுபெற்று உயர்ந்த உத்தியோகத்தில் வைக்கப்பட்டார்கள். இக்காலத்தில் இவர்களுக்குப் பலவிதமான கஷ்டங்களும் வருத்தங்களும் வந்தபோதிலும் விசேஷித்த சாட்சிகளாய் விளங்கினார்கள்.

சந்தர்ப்பம்.

அன்னிய தேசத்தில் அன்னிய பாஷை பேசுகிறவர்கள் மத்தியில் இராஜ தயவு கிடைத்தது. இதனால் அநேகருக்கு பொறாமை உண்டாயிற்று. இதன் மத்தியில் அவர்கள் சாட்சிசொன்னார்கள்.

சாட்சியம்.

தங்களை ஆட்கொண்ட யெகோவா எல்லாருக்கும் மேலானவரும் முற்றும் முடியக் காக்கிறவருமாயிருக்கிறார் என்று சாட்சிகூறினார்கள்

தன்னடக்கத்தினால் சாட்சிகூறல்.

தானி. 1 : 8. தானியேலும் அவனுடைய தோழர்களும், ராஜ போஜனம் அருந்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டபோது தங்களை

ராஜாவின் போஜனத்தினாலும், திராட்சரசத்தினாலும் தீட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாதென்று தீர்மானம்பண்ணி தங்கள்மேல் வைக்கப் பட்ட தலைவருக்குச் சாட்சிகூறினார்கள்.

தைரியம்.

தானி. 5 : 22-23. ராஜா தேவனுக்கு விரோதமாக பாவமான விருந்துகொண்டாடின சமயத்தில் சுவரில் எழுதப்பட்ட கடவுளின் கண்டிப்பான வார்த்தைகளைக்கூறி சாட்சி பகர்ந்தான்.

உண்மை.

தானி. 6 : 4. உத்தியோகத்தில் உண்மை ; இதன் மூலமாக. மற்ற பிரதானிகளுக்குப் பலத்த சாட்சியாயிருந்தான். அவர்கள் இவ னிடத்தில் ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியாமற்போயிற்று. இவ் விதமாக நமது கடமைகளில் உண்மையுள்ளவர்களென்றும் மற்றவர்க ளால் அறியப்பட்டிருப்போமானால் அதுவே பலத்த சாட்சி.

ஜெபத்தின் மூலமாய்ச் சாட்சி பகர்ந்தான்.

தானி. 6 : 5-11. அவன் கடவுளை வணங்குவதில் உண்மை யுள்ளவனாயிருந்ததை ஜனங்கள் அறிந்திருந்தார்கள். அப்படிச் செய் யாமல் தடைசெய்யப் பிரயாசப்பட்டும் அவர்களால் கூடாமற் போயிற்று. அந்த ஜெபஜீவியத்தினிமித்தம் உயிர்ச்சேதம் உண்டா கக்கூடியதாயிருந்தபோதிலும் அவன் அதை விட்டுவிடவில்லை. அதைக் கொண்டுசெலுத்தி வந்தான்.

விக்கிரகாராதனைக்காரர் மத்தியில் சாட்சி பகர்தல்.

தானி. 3. பொற்சிலையைப் பணிந்துகொள்ளும்படி கட்டளை யிடப்பட்டபோது அப்படிச் செய்யமாட்டோமென்றும் அக்கினிச் சூளையினின்று யெகோவா விடுவிப்பார்; ஒருவேளை விடுவிக்காமலிருந் தபோதிலும் சிலையை வணங்கமாட்டோமென்று கூறி யெகோவாவின் மகத்துவத்தைக் குறித்து சாட்சி கொடுத்து ரூபித்துக் காட்டினார்கள். இந்தவிதமாக யெகோவாவின் நாமம் புறதேசத்தில் மகிமைப்பட்டது.

4. சாட்சிகொடுக்க மனமற்ற யோனு.

யோனு நினிவே பட்டணத்தில் யெகோவாவைப்பற்றிச் சாட்சி கொடுக்கும்படி அனுப்பப்பட்டபோது உடனே போகாமல் வேறு இடத்திற்திற்கு ஓடினுன். ஆண்டவர் இயற்கையின் சத்துவங்களைக் கொண்டு அவன் எண்ணம் நிறவேருதபடி செய்து மீண்டும் அவனேடு பேசி சாட்சிசொல்ல அனுப்பினர். சாட்சி சொன்னவுடனே மாறுதல் உண்டாயிற்று. ஆனல் இவனே அதிர்ப்தியுள்ளவனுகி சஞ்சலமுற்றவனுனன். அவனுக்கு அன்பின் ஆழத்தைப்பற்றி ஆண்டவர் படிப்பித்தார்.

சந்தர்ப்பம்.

யோனு எபிரேயன்; தங்களுக்குத் தான் யெகோவா உரியவர் என்ற நெருக்கமான நம்பிக்கையுடைய ஜாதியைச் சேர்ந்தவன். நினிவே பட்டணத்தார் புறமதஸ்தர். இவர்கள் அழிவிற்கென்று நியமிக்கப்பட்டவர்களென்று பொதுவான எண்ணமுடையோன். ஆனல் ஆண்டவரோ தான் எல்லார்பேரிலும் அன்புள்ளவர் என்றும் மனந்திரும்புகிற யாவரும் தேவ தயவுக்குரியவர்களென்றும் காட்ட விரும்பினர்.

சாட்சியம்.

தேவன் அன்புள்ளவர் அவர் பாவத்தைக் கண்டித்து மனந்திரும்பும் பாவியை ஏற்றுக்கொள்பவர் என்பதே.

சாட்சி நடந்துகொண்ட விதம்.

(1) சாட்சிசொல்ல மனமில்லாமல் தேவசமுகத்தைவிட்டு ஒடுகிருன்.

(2) அதினிமித்தம் பல துன்பத்துக்காளகிருன்.

(3) கிருபைபெற்றுச் சாட்சிசொல்லுகிருன்.

(4) மறுபடியும் தன்னயம் அவனை மேற்கொண்டு புறமதஸ்தர் தண்டிக்கப்படவில்லையேயென்று அங்கலாய்க்கிறான். இதினிமித்தம் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் வரும் சந்தோஷத்தில் பங்கு பெறாமல் நிர்ப்பாக்கியனானான். இவன் நமக்கு ஓர் எச்சரிப்பு!

இதை நாம் கவனிக்கவேண்டும். நம்மிடத்திலும் யோனாவைப் போல் சாட்சிசொல்ல மனமற்றவர்களுண்டு. தங்கள் ஜாதியைச் சேர்ந்தவர்களைத்தவிர வேறு ஜாதியைச் சேர்ந்த எவரும் தங்களைப் போல் கிறிஸ்தவராகி தங்களோடு ஆலயத்தில் சேர்ந்து ஆராதனை செய்ய பிரியமற்றவர்களுமுண்டு. அவர்களிடம்போய் சாட்சிசொல்லக் கூசுவார்கள். இது சரியல்ல. ஒருவேளை ஆண்டவர் சொன்னது போல கடைசி காலத்தில் அவர்கள் நினிவேப்பட்டணத்தாரோடு சேர்ந்து நமக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லலாம். தேவசமுகத்தை விட்டு ஓடமுடியாது. தேவன் எல்லார்பேரிலும் அன்பாயிருக்கிறாரென்றும் எல்லாரும் மனந்திரும்பி அவருடைய பிள்ளைகளாகவேண்டுமென்கிற சத்தியத்தையும் குறித்தும் சாட்சிகூறுவோமாக.

5. சாட்சிபகர்ந்த சிறுமி.

2 இரா. நாகமான் குஷ்டரோகியாயிருந்தபோது சமாரியாவிலுள்ள தீர்க்கதரிசி அவனைச் சுகப்படுத்தக்கூடுமென்று ஒரு சிறுமி சாட்சிகொடுத்தாள். அதன் பலனாக நாகமானின் குஷ்டரோகம் நீங்கிற்று. யெகோவாவே தேவனென்று அறிக்கைபண்ணினான்.

சந்தர்ப்பம்.

சிறைபிடிக்கப்பட்ட ஒரு சிறு பெண் அந்நிய தேசத்தாள், அடிமை. எஜமான் பெரிய உத்தியோகஸ்தன் ஆனால் குஷ்டரோகி. இவள் மத்தியில் சாட்சிகொடுக்கிறாள்.

சாட்சியம்.

சமாரியாவிலிருக்கும் யெகோவாவின் தீர்க்கதரிசியிடம் போனால் குஷ்டரோகம் நீங்கும்.

இவள் தான் அன்னிய தேசத்தாளென்றும் அடிமையென்றும் எண்ணியிருந்தபோதிலும் தன் எஜமானுக்குரிய குறைவை அறிந்து கொண்டாள். அந்தக் குறைவினுல் தன் எஜமாட்டிக்கிருந்த துக்கத்தை அறிந்துகொண்டாள். இந்தக் குறைவு நீங்கவும் குடும்பத்தில் பாக்கியம் ததும்பவும் வழியை அறிந்திருந்தாள். உடனே சாட்சிகூறினுள்.

பலன்.

நாகமானுடைய குஷ்டரோகம் தீர்ந்தது. யெகோவாவைத் தவிர வேறு தெய்வமில்லையென்று நாகமான அறிந்துகொண்டான். அவன் மூலமாக சீரியா தேசத்திலும் மெய்யான கடவுளைப்பற்றிய அறிவு வந்தது. இதன் மூலமாக சிறுவரும் சாட்சி பகராலாமென்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

நமது பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகளும், கிறிஸ்தவ முயற்சி சங்கத்திலுள்ள பாலியரும் பாவக் குஷ்டத்தை நீக்கும் பரிகாரியாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சாட்சிகூறப் பழக்கிவைப்போமாக.

இரண்டாம் அதிகாரம்.

புதிய ஏற்பாட்டுச் சாட்சிகள்.

New Testament Witnesses.

புதிய ஏற்பாட்டை நாம் வாசித்துப்பார்ப்போமானுல் ஜீவனுள்ள அநேக சாட்சிகளைப் பார்க்கலாம். அவர்களில் சிலருடைய ஜீவியத்தைப்பார்த்து அவர்கள் உபயோகித்த முறைகளைச் சிந்திப்போம்.



6. அப்போஸ்தலனாகிய பவுல்.

அப். 7: 58-8: 3: ; 9: 1-30; 13 முதலிய அதிகாரங்கள். 1 கொரி. 9: 16-23.

அப்போஸ்தலனாகிய பவுலின் சரித்திரம் நம்மெல்லாருக்கும் பொதுவாய்த் தெரிந்ததே. யூதமார்க்க வைராக்கியங்கொண்டு கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினவர். கிறிஸ்துவைச் சந்தித்து அவருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தபின் அவருக்காகச் சாட்சிசொல்வதில் அல்லும் பகலும் முயற்சியுடையவராயிருந்தார். அதனால் அவருக்குத் துன்பம்வந்தபோதிலும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், அடிக்கப்படுவதற்கும் தன் உயிரைக் கொடுப்பதற்கும் ஆயத்தமாயிருந்தார். இவர் செய்த ஊழியத்தைச் சற்று ஆராய்வோம்.

1. பகிரங்க சாட்சி.

அப். 18 : 4. அப்போஸ்தலன் தனக்குச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஜெபாலயங்களில் யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சி கொடுத்துவந்தார். யூதர்கள் ஏற்றுக்கொள்ளாதபோது புறஜாதியாரிடத்திலே சென்ருர். அத்தேனே பட்டணத்தில் மார்ஸ் மேடையினின்று "அறியப்படாத தேவனைக் குறித்து" சாட்சிகொடுத்தார். அப். 17: 23, இன்னுமனேக உதாரணங்களை எடுத்துக்கூறலாம். அப்போஸ்தல நடபடியை ஆராய்ந்து குறித்துக்கொள்ளுக.

2. தனித்தாள்களுக்குச் சாட்சி கூறுதல்.

அப். 20 : 17-35. அவர் வீடுகள்தோறும் புத்திசொல்லிவந்தது மாத்திரமல்ல தனித்தனியாளுக்கும் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் புத்திசொல்லி வந்திருக்கிருர். ஒநேசுமுவைப்பற்றி "நான் பெற்ற மகன்" என்று சொல்லுகிருர். பிலேமோன் 10 வ-ம் தீமோத்தேயுவைப்பற்றியும் இதே வார்த்தையைக் கூறுகிருர். 1 தீமோ. 1 : 2. தீத்துவுக்கும் இதே பெயர் கொடுக்கப்படுகிறது. தீத். 1 : 1, மாற்குவைப்பற்றியும் இந்த அடமொழி கூறப்படுகிறது. இவைகளைப் பார்க்கும்போது இவர்களுடன் அப்போஸ்தலன் தனித்துச்செய்த ஊழியத்தின் பலனுல் ஆதாயப்பீடுத்தப்பட்டவர்கள் என்று நாம் அறிகிருேம்.

இவருடைய நிருபங்களை நாம் கவனித்தால் அதன் முடிவில் அநேக தனித்தாட்களுக்கும் சபைகளுக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறதைப் பார்க்கிருேம். ரோமர் 16-ம் அதிகாரம் தனித்தாட்களின் அட்டவணையால் நிறைந்திருக்கிறது. இத்தனை சிநேகிதர்களுடைய பெயர்களை நாம் பார்க்கும்போது இவர்களும் அவருடைய தனிச்சாட்சியின் பலனுல் வந்தவர்கள் என்று அறிந்துகொள்ளலாம். பவுலுடைய பிரயாணங்களில் அவருக்கு உதவிசெய்யும்படி திரிந்தவர்களின் தொகையும் இதைக்காட்டும்.

3. நிருபங்களின் மூலமாய்ச் சாட்சிகூறல்.

அப்போஸ்தலனுடைய சுற்றுப்பிரயாணத்தின் பலனாக அநேக சபைகள் எற்படுத்தப்பட்டன. அவர்களை ஒரே சமயத்தில் சந்திக்க கூடாமலிருந்ததால் அவர்களுக்குச் சாட்சிசொல்லி அவர்களுக்குப் புத்தி புகட்டும்படியாக நிருபங்களை எழுதினார். அதாவது கடிதங்களின் மூலமாக சாட்சி பகர்ந்தார். இது ஒரு நல்ல முறை. குணப்படாத நமது சகோதரருக்கும் ஆவியில் உற்சாகமில்லாத சிநேகிதருக்கும் கடிதங்கள் எழுதி சாட்சிகூறலாம். இந்த முறையைத் தற்காலத்திலுள்ள சித்தியுள்ள சாட்சிகள் உபயோகப்படுத்திவருகிறார்கள். காலஞ்சென்ற இராமனாதபுரம் கனம் டி. எஸ். பாக்கியநாதன் ஐயரவர்கள் தம்முடைய பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் எழுதிய சில கடிதங்களை வாசிக்கும் சிலாக்கியம் பெற்றேன். அவைகளில் தம்முடைய அனுபவ சாட்சியைக்கூறி தம்முடைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறார். இந்த நிருபங்களைப்பெற்ற பிள்ளைகள் பாக்கியமுடையவர்களே. இவ்விதமாகவே மற்ற பெற்றோரும் ஒருவாறு செய்துவருகிறார்கள் என்று தெரியும். அவ்வண்ணமே நாமும் குணப்படாதவர்களின் விஷயத்திலும் கடிதங்களின் மூலமாக சாட்சி கொடுக்கக்கூடுமானால் நன்மையாகவிருக்கும்.

பலன்.

அப்போஸ்தலனின் சாட்சியின் பலனாக அநேக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன, அநேகருடைய ஜீவியம் மறுரூபமடைந்தது.

7. இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவான்.

அப். 6-ம் 7-ம் அதிகாரங்கள்.

ஸ்தேவான் என்றால் கிரீடம் என்று அர்த்தம். இவன் வல்லமையுள்ள சாட்சி பந்திவிசாரிப்புக்காரரில் ஒருவன். ஆனால் பரிசுத்தாவி நிறைந்த இவன் தன்னுடைய அலுவலாகப் போகும்

போது கிறிஸ்துவுக்காகச் சாட்சிகொடுத்தான். அதினிமித்தம் தர்க்கமுண்டாகி சிலர் அவனை ஆலோசனை சங்கத்திற்குக் கொண்டு போக அங்கேயும் விசேஷித்த சாட்சி கொடுத்தான். இவன் பகிரங்க சாட்சி கொடுக்கும்போது தன்னை அந்த ஜனங்களோடு ஒன்றுசேர்த்துப் பேசினான். அப். 7 : 2 "நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம்" என்கிறான். இது நாம் கவனிக்கவேண்டிய ஒரு குறிப்பு. நாம் யாரோடு பேசுகிறோமோ அவர்களைப் பிரத்தியேகப்படுத்திப்போடாமல் அவர்களைச் சேர்த்தே சாட்சிகூறவேண்டும்.

2. அந்த ஜனங்களின் சரித்திரத்தை நன்றாய் அறிந்திருந்து அதை சாட்சிகூறுவதில் உபயோகித்தான். நாம் என்ன பொருளின் பேரில் சாட்சிகொடுக்கிறோமோ அதற்குத்தக்கதாய் அதை பாகுபடுத்தி சத்தியத்தை தெளிவுபடுத்திக்கொண்டுபோகவேண்டும்.

3. அவனுடைய முகப்பிரகாசத்தால் சாட்சிகொடுத்தான் அப். 6 : 16. அவன் முகம் தேவதூதர் முகம்போல் இருக்கக் கண்டார்கள். முகமானது உள்ளான ஜீவியத்தை வெளிப்படுத்தும் ஒரு கண்ணாடி. அவனுக்குள் இரட்சிப்பின் சமாதானமும் ஆவியின் நிறைவுமிருந்ததால் அவன் முகம் பிரகாசித்தது. நாம் எதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோமோ அந்த விஷயம் நம்முடைய ஜீவியத்தில் அனுபவமாகக் காட்டப்படவேண்டும். இன்னொருவிதமாகச் சொன்னால் நாம் மனிதரை நோக்கிப் பார்த்து சாட்சிகூறவேண்டும். ஜனங்கள் நமது முகத்தினின்று அந்தச் சாட்சியின் உண்மையை அறிந்து கொள்வார்கள்.

4. அன்பான வார்த்தையின்மூலமாய்ச் சாட்சிகூறினான்.

அவன்மேல் கல் எறிந்தபோது அவன் முழங்காற்படியிற்று தன் ஆவியை ஏற்றுக்கொள்ளும்படி ஜெபித்ததோடுகூட அந்தப் பாவத்தை தன் சத்துருக்களின்மேல் சுமத்தாதபடி தன் ஆண்டவரைப்போல் வேண்டிக்கொண்டான். இது கடவுளின்பேரில் அவனுக்கிருந்த நம்

பிக்கையையும் மன்னிக்குஞ் சிந்தையையும் காட்டும். இந்தப்பார்வையும் இவ்வார்த்தையுமே சவுலின் மனச்சாட்சியைத் தொட்டிருந்திருக்கும். அதை மழுக்கும்படி சவுல் பிரயாசப்பட்டான். கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினன். ஆயினும் முள்ளில் உதைப்பது அவனுக்குக் கடினமாயிருந்தது. கடைசியாகத்தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தான். முதலாம் இரத்தச் சாட்சியாகிய ஸ்தேவானின் இரத்தம் சபையின் வித்தாகவிருந்தது.

முதலாம் ரத்தச் சாட்சியாய்
மரித்தோன் வானத்தில்
கர்த்தாவை விசுவாசமாய்
கண்ணேக்கித் துன்பத்தில்
கொலைஞர்க்காக வேண்டிட,
சண்டாளரால் மாண்டான்;
பகைஞர்க்காக ஜெபிக்க
யார் அவன் பின்செல்வான்?

மூன்றும் அதிகாரம்.

திருச்சபை சரித்திரத்திலுள்ள சில சாட்சிகள்.

Witnesses from Church History.

8. அகுஸ்தீன் என்ற பலத்த சாட்சி.

St. Agustine.

(முகப்பிலுள்ள படம் பார்க்க.)

இவர் கி. பி. 354-ம்வூ நவம்பர்மீ 13-ம்வ தகஸ்தி என்ற இடத்தில் பிறந்தார், அவருடைய தகப்பனுடைய பெயர் பாற்ரிக்கஸ் இவரை "தகஸ்தியைச்சேர்ந்த ஏழை சுயாதீனன்" என்று அகுஸ்தீன் அழைக்கிறன். அகுஸ்தீன் பிறந்தகாலத்தில் தகப்பனர் கிறிஸ்தவனயிருக்கவில்லை; பின்னுக்குக் கிறிஸ்தவனகி ஞானஸ்நானம் பெற்

ருன். ஆனல் அகுஸ்தீன் தாயாகிய மோனிக்கா என்றமாது சிறந்த கிறிஸ்தவ பக்தி நிறைந்தவள், தன் மகன் பிற்காலத்தில் வழிவிலகிப் போகக்கூடும் என்று பயந்ததினல் சிறு பிள்ளேயில் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அ கு ஸ் தீ ன் பொல்லாதவழிகளில் முதிர்ந்தான்; அநேகர் ஆலோசனை சொல்லியும் கேட்கவில்லை. தாயார் இவனிமித்தம் கண்ணீர்விட்டுப் புலம்புவாள். மிலான்புரி கண்காணியாகிய அம்புரோஸ் அத்தியக்ஷர் அவர்களிடம் தன் மகனைக்குறித்து கண்ணீரோடுசொல்லி புத்தி கற்பிக்கும்படிக் கேட்டுக்கொள்வாள். அத்தியக்ஷரும் அகுஸ்தீனுக்குப் புத்திசொல்வதுண்டு. அத்தியக்ஷர் மோனிக்காவைப்பார்த்து "நீ பயப்படாதே தன் மகனுக்காக அழுது ஜெபிக்கும் ஜெபம் பலன்தராமல் போகாது" என்று தேற்றுவார். அகுஸ்தீன் கள்ளக்கொள்கைகளைக் கற்பித்து வந்த கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டான். என்ருலும் ஒருநாள் தன்பாவ நிலைமையைக்குறித்து நினைத்துத் துக்கப்பட்டு ஜெபித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் 'எடுத்து வாசி' என்று சொல்லும் வார்த்தைகளைக் கேட்டான். அவன் தன் புதிய ஏற்பாட்டைத் திறந்தபோது ரோ. 13 : 13-14 வசனங்களை வாசித்துத் திகைத்து அப்புரோஸ் அத்தியக்ஷரிடம் போய்க் காரியங்களைச் சொல்ல, அவர் இரட்சிப்பின் வழியைக்குறித்துத் தெளிவாய் எடுத்துக்காட்டினர். அகுஸ்தீன் தன் இருதயத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து தானும் தன் மகனும் ஞானதீச்சைபெற்றுக் கொண்டனர். பிற்பாடு சபையின் பெரிய மனுஷனுகி ஹிப்போப் பட்டணத்தின் கண்காணியானர். இவர் வேதசாஸ்திர நிபுணர்.

இவர் கொடுத்த சாட்சி.

எப்பேர்ப்பட்ட பாவியையும் கிறிஸ்து இரட்சிக்கக்கூடும் என்பதை பலத்த சாட்சியங்களோடு ரூபித்துவந்தார்.

1. கள்ளக் கொள்கைகளுக்கு விரோதமாய்ப் பிரசங்கித்து பகிரங்க சாட்சிகொடுத்தார்.

2. தன்னுடைய பழைய துஷ்ட சிநேகிதர்களைக்கண்டு அவர்களுடன் தன் அனுபவத்தைக்கூறி அவர்களை ஆதாயப்படுத்தி அவர்களோடு தனிவாசம்பண்ணி, ஜெபத்திலும் தவசிலும், பரோபகாரக் கிரியைகளிலும் காலத்தைக் கடத்தினர்.

3. குருமாராகப் போகிறவர்களுக்கு விசேஷித்த உபந்நியாசம் செய்தும் சாட்சி பகர்ந்தார். புஸ்தகங்களின் மூலமாக சாட்சி பகர்ந்தார். அவர் எழுதிய புஸ்தகங்களில் விசேஷித்தவை தேய்வநகர், அறிக்கைகள், வியாக்கியானப் புஸ்தகங்கள் முதலியன. ரோமாபுரி அழிந்தபோது கிறிஸ்தவர்கள் துக்கப்பட்டு அதைரியப்பட்டு மனம் இளக்கரித்துப்போனர்கள். அவர்களைத் தைரியப்படுத்தும்படியாக தெய்வநகர் என்றபுஸ்தகத்தை எழுதினர். அதில் கடவுளுடைய நடத்துதலைப்பற்றி வியந்துகூறி அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கும் தேவநகர் உருதியாய் நிலைத்திருக்குமென்றும், அஞ்ஞானமார்க்கங்கள் அழிந்துபோகுமென்றும், எடுத்துக்கூறி ஜனங்களை விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்தார். அறிக்கைகள் என்ற நூலில் தமது ஆவிக்குரிய அனுபவத்தை எழுதிவைத்தார். தான் எவ்வளவு பெரிய பாவியென்றும், தேவன் மட்டற்றயிரக்கத்தால் இரட்சித்தாரென்றும் எடுத்துக்காட்டுகிறார். தேவனுடைய இரக்கத்தைக்குறித்து இவர் அதிகமாக வற்புறுத்துவதால் "இரக்கத்தின் சாஸ்திரி" என்று பெயர் வந்தது.

9. பிரான்ஸிஸ் என்ற மகாத்துமா.

Francis of Assisi.

பிரான்ஸிஸ் 1182-ம்௵ அஸிஸி என்ற பட்டணத்தில் பிறந்து 1226-ம்௵ அக்டோபர்மீ 4-௨ மரணமடைந்தார். இவருடைய தகப்பனர் ஒரு பெரிய ஐசுவரியவான். பிரான்ஸிஸ் வாலிபனாக சிற்றின்பத்தின்மேல் பிரியங்கொண்டு தன் வாழ்நாளைப் போக்கிக்கொண்டிருந்தான். இவன் யுத்தவீரனாக சிலகாலம் இருந்து கைதியாக்கப்பட்டு ஒருவருடமாகக் காவல் கூடத்தில் காலம் களித்தான்,

25-வது வயதில் மிகவும் வியாதிப்பட்டு மரணத்தினின்று தப்பினான். இதற்குப்பின் அவன் மனதில் ஓர் மாறுதல் உண்டாயிற்று. இவன் மனச்சமாதானமற்றவனாய்த் தன் ஊரிலுள்ள ஒரு கோவிலுக்குள் பிரவேசித்து இடிந்துபோயிருந்த அந்த ஆலயத்தில் இருந்த இயேசுவின் சிலுவை சுரூபத்தண்டை உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் அவன் பரவசமடைந்து அந்த சிலுவையில் தொங்கிய ஆண்டவர் தன்முன் இரங்கிவந்து பேசுவதுபோற்கண்டான். இந்த அன்பினாலே அவன் கவரப்பட்டு ஆண்டவருக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தான். அன்றைக்கிருந்தே தனக்கிருந்த மேன்மையான நிலைமையையும், தன் சொத்து சுகங்களையும் துறந்து ஆண்டவருக்குச் சாட்சியாக வெளியேறினான். தரித்திரத்தைத் தன் மனைவியாகக்கொண்டு, ஏழைகளின் மத்தியில் சாட்சி பகர்ந்து வந்தான்.

இவர் சாட்சியில் காணப்படும் சில குறிப்புகள்.

1. தான் யாருக்குச் சாட்சி சொல்லவேண்டியதிருந்ததோ அவர்களுடைய நிலைமைக்குத் தக்கதாக தன்னைத் தாழ்த்தினான். ஐசுவரியத்தைவிட்டு பிரபுக்களின் நிலைமையைத் தவிர்த்து சாதாரண ஜனங்களோடு ஒருவனானான்.

2. குஷ்டரோகிகளுக்கும் சிநேகிதனானான்; அவர்களோடு ஒருவனாகத் தன்னைப்பாவித்து அவர்களுக்கு உதவிசெய்தான்.

3. தன்னைப்போலொத்த வாலிபர்களைச் சீர்ப்படுத்தி தன்னுடைய ஜீவியசாட்சியால் ஆதாயப்படுத்திக்கொண்டான்.

4. துஷ்டரான கள்ளர்களையுங்கூட அன்பின் கிரியையினால் ஆதாயப்படுத்தினான். திருடுவதற்குக் காரணம் ஆகாரக்குறைச்சலென்று எண்ணி அவர்களுக்கு அப்பங்கள் கொடுப்பது வழக்கம். மிருகங்களின்பேரிலும் பட்சமாயிருப்பான்.

இவருடைய சாட்சியம்.

கடவுள் அன்பாயிருக்கிறார் என்பதே ; இவரால் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டத்தார் இன்றைக்கும் உலகமெங்கும் நன்மைசெய்கிறவர்களாகச் சாட்சி பகர்ந்துவருகிறார்கள்.

Francis Xavier.

10. பிரான்ஸிஸ் சவரியார்.

இவர் வடஸ்பானியாவிலுள்ள ஒரு பெரிய பிரபுவின் குடும்பத்தைச் சேர்ந்தவர். 1506-ம்௵ எப்பிரல்மீ 7-உ பிறந்தார் பாரீஸ் பட்டணத்திலுள்ள கல்லூரியில் கற்றுத்தேர்ந்து, தத்துவசாஸ்திர ஆசிரியராயிருந்தார். இக்காலத்தில் இக்னீஷியஸ் லோயலா என்ற ஒருவரோடு சிநேகமாகி "இயேசு பக்தர்" என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபிப்பதில் உதவிசெய்து இவ்விருவரும் அதன் அங்கங்களாகி 1534-ம்௵ குரு அபிஷேகம் பெற்றார்கள். இவர் பலஸ்தீனுவுக்கு மிஷனெரியாகப்போக ஆசைப்பட்டும் கூடாமற்போயிற்று. சவரியார் இத்தாலிதேசம் முழுவதும் சென்று கோயில் படிக்கட்டினின்றும், சந்தை குருசடியின் கீழ்நின்றும் கிறிஸ்துவுக்காகச் சாட்சிபகர்ந்து வந்தார். 1542-ம்௵ மேமாதம் இந்தியாவில் போர்த்துக்கீசியரின் தலைநகராகிய கோவா பட்டணத்துக்கு வந்தார். அங்கு துன்மார்க்க ஜீவியத்தில் பேர்பெற்று விளங்கிய போர்த்துக்கீசியருக்குள்ளும் உள்நாட்டுப் புறமதஸ்தர்களுக்குள்ளும் ஊழியம் செய்தார். இங்கிருக்கையில் ஒரு கல்லூரி ஒன்று ஏற்படுத்தி இந்தியர்களை பயிற்றுவித்துக்கொண்டிருந்தார். இதற்குப்பின் முத்துக்குளிப்பவர் மத்தியில் கிறிஸ்துவுக்குச் சாட்சிசொல்லி வந்தார். இவர் இந்த ஜனங்கள் ஜீவிக்கிற மாதிரியே ஜீவித்து அவர்களுடைய ஆவிக்குரிய விருத்திக்காக ஊக்கமாய் உழைத்துவந்தார். இங்கேயிருந்து கல்வியில் பயிற்சியடைந்த சில சுதேசிகளைக் கூட்டிக்கொண்டு திருவாங்கூர் ராஜ்யத்திற்குள் பிரவேசித்து கடற்கரை ஜனங்களின் மத்தியில் ஊழியம் செய்தார். இந்த ஊழியத்தின்பலனாக ஒரே மாதத்தில் 10,000

பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இதைப்பார்த்த பிராமணர் இவரைக் கொல்லும்படி முயற்சிசெய்தார்கள். என்றாலும் சாதாரண ஜனங்கள் இவரை ஒரு பெரிய தகப்பனைப்போல் பாவித்து அவரைப் பாதுகாத்துப் போஷித்துவந்தார்கள். இந்தியாவிற்கும், சீனுவுக்கும், ஜப்பானுக்கும், பெரிய சந்தைபோல் விசேஷித்து விளங்கும் மலாக்காவுக்குச் சென்று பெரிய ஊழியம் செய்துவந்தார். என்றாலும் கிறிஸ்தவனான ஒரு ஜப்பானிய வாலிபனின் வேண்டுகோளுக்கிணங்கி 1549-ம் வூ ஆகஸ்டு மீ ஜப்பானுக்குச் சென்றார். இங்கு பல கஷ்டங்களின் மத்தியில் ஆண்டவருக்கென்று சாட்சி பகர்ந்து பெரிய சபைகளை ஏற்படுத்தினர். மீண்டும் 1552-ம் வூ மலாக்காவிற்கு வந்து ஊழியத்தை நடப்பித்தார். இங்கு பிளேக்வியாதி அதிகமாக நடந்தபோது தனதாலோசனையாலும், முயற்சியினாலும் அதிக உதவிசெய்தார். இவர் சீனுவிற்கு போகவேண்டுமென்று நினைத்தபோது தங்கள் ஆதாயத்திற்கு நஷ்டமுண்டாகுமென்று எண்ணிய போர்த்துக்கீசியர் இவருக்குப்போக உத்தரவுகொடுக்கவில்லை. இவர் 1552-ம் வூ டிசம்பர் மீ 2-ம் வ சான்சாம் என்ற தீவில் மரித்தார். இவருடைய சரீரம் கோவாப்பட்டணத்திற்குக் கொண்டுவரப்பட்டு அழகான கண்ணாடிப்பெட்டியில் வைக்கப்பட்டு அலங்காரமான கல்லறையில் க்ஷேமிக்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு வருடத்திற்கொருதடவை ஜனங்கள் பார்க்கும்படி இதைக் காட்டிவருகிறார்கள்.

இவர் உபயோகித்த முறைகள்.

1. அவர் எங்கெங்கே உதவி வேண்டியதிருந்ததோ அங்கெல்லாம் உதவிசெய்வார். கப்பலில் வந்தபோது வியாதியஸ்தரான கப்பலோட்டிகளுக்குள்ளும், மலாக்காவில் பிளேக்நிறைந்த ஜனங்களின் மத்தியிலும் உதவிசெய்தார். இது விசேஷித்த சாட்சியாயிருந்தது.

2. பிறர் குணப்படும்படி தன்னை வருத்திக்கொள்வார். ஒரு பாவிக்குப் பாவத்தைக் குறித்துக் கண்டித்துணர்த்தும்படியாக தன்

சரீரத்திற்கு வேதனையுண்டாக்கும்படித் தன்னைத்தானே சவுக்கால் அடித்துக்கொள்வார். தற்கால பாஷையில் சொல்லுவதாயிருந்தால் ஒருபாவி குணப்படும்படி சத்தியாக்கிரகம் பண்ணுவார். இந்த முறை விசேஷித்தமுறை. ஒருபாவியை ஆதாயப்படுத்தும்படி பசியையும் பட்டினியையும் ஒரு பொருட்டாய் எண்ணாமல் இருக்க ஆயத்தமாயிருக்கிறோமா? அல்லது ஒரு ஆத்துமாவிடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது மணியைப் பார்த்ததும் வேலையை நிறுத்தி சாப்பிட விரும்புகிறோமா?

3. அவர் திருவாங்கூரில்செய்த வேலையைப்பற்றிச் சொல்வதாவது "ஒரு கிராமத்திற்குப்போய் அங்கே தங்கி அவர்களுக்குள் சுவிசேஷத்தைச்சாட்சியாகப் பகர்வதுண்டு. ஞானஸ்நானம் பெறும்படி ஆசைப்பட்டால் புருஷர் ஸ்திரீகள் பிள்ளைகள் யாவரையும் ஒரு இடத்திற்கு வரும்படிசெய்து அவர்களுக்கு கிறிஸ்துமார்க்கத்தின் சத்தியத்தைப் போதிப்பதுண்டு. ஒரே கடவுள் உண்டென்று போதித்து பாவ அறிக்கை, அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம், பத்துக்கட்டளைகள், கர்த்தருடைய ஜெபம் முதலியவற்றை அவர்கள் சொந்த பாஷையில் நான் சப்தமாகச்சொல்ல அவர்கள் எனக்குப்பின்திருப்பிச் சொல்வார்கள். இதற்குப்பின் விசுவாசப்பிரமாணத்தையும் பத்துக்கற்பனையையும் அவர்கள் சொந்தபாஷையில் விளக்கிக்காட்டுவேன். இவைகளை அவர்கள் விளங்கிக்கொண்டபின் ஒவ்வொரு ஆளையும் பார்த்து 'உனக்கு ஞானஸ்நானம் பெறப்பிரியமா? என்று திட்டமாய்க் கேட்பேன்" அவர்கள் நாங்கள் விசுவாசிக்கிறோமென்று இரு கைகளையும் உயர்த்தி சிலுவைபோல்வைத்து ஞானஸ்நானம் கொடுக்கக் கேட்பார்கள்; இதற்குப்பின் கொடுப்பேன். இப்படி ஞானஸ்நானம் பெற்றவர்கள் தங்களுடைய வீடுகளுக்குப்போய்த் தங்கள் இனத்தவரையும் கூட்டிக்கொண்டுவருவார்கள். அவர்களுக்கும் போதித்து ஞானஸ்நானம் கொடுப்பேன்; கிறிஸ்துமார்க்கப் போதனை

கள் அடங்கிய புஸ்தகங்களைக் கொடுத்து அதை காலை மாலை உபயோகிக்கும் முறையையும் சொல்லிக்கொடுப்பேன்; இதற்குப் பின் தான் வேறொரு கிராமத்திற்குப் போவேன்'' இவ்விதமாக இந்த மகான் ஊர் ஊராகத், தேசம் தேசமாகச்சென்று கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகர்ந்த உத்தம சாட்சியாவார். இவரை தற்கால பவுல் அப்போஸ் தலன் என்று சொல்வதும் தகும்.

நான்காம் அதிகாரம்.

தற்கால மிஷன் சம்பந்தமான ஊழியம்.

Modern Missionary Witnesses

மிஷன் சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் சில சிறந்த சாட்சிகளைப் பார்க்கலாம். இவர்களில் சிலருடைய சரித்திரத்தைச் சுருக்கிச்சொல்லி அவர்கள் அனுசரித்த முறைகளைப்பற்றியும் பார்ப்போம்.

11. ஹென்ரி டிரமண்ட்.

Henry Drummond.

இவர் 1851-ம் வருஷம் ஸ்காட்லாண்டில் பிறந்தவர். எடின்புரோ சர்வகலாசாலையில் கற்றுத் தேர்ந்து ஜெர்மனிக்குச் சென்று அங்கும் சாஸ்திர வித்தையில் நிபுணராகி கிளாஸ்கோ பட்டணத்திலிருந்த கல்லூரியில் இயற்கை சாஸ்திர ஆசிரியராயிருந்தார். அவர் ஸ்காட்லாண்டு சுயாதீன சபையில் குருவாகவும் அபிஷேகம் பண்ணப்பட்டார். இவர் தமக்கிருந்த சாஸ்திர அறிவை ஆவிக்குரிய விஷயத்தில் உபயோகப்படுத்தினர். ''ஆவிக்குரிய உலகத்தில் இயற்கைப் பிரமாணம்'', ''உலகத்தில் அதிக அருமையான பொருளாகிய அன்பு'', ''மனிதனின் உயர்வு'' என்ற நூல்களை இவர் எழுதிப் பிரஸ்தாபப்படுத்தியிருக்கிறார். இவர் மரித்த வருஷம் 1897.

இவர் தனித்தாட்களுக்குச் சாட்சி கூறுவதைப்பற்றிச்சொல்வதாவது ''உலகத்தில் ஒவ்வொரு நுன்னிய அணுவும் தன் பக்கத்திலுள்ள அணுவின்மேல் கிரியை செய்கிறது. அப்படியே ஒவ்வொரு

மனிதனும் இன்னொரு மனிதன்மேல் கிரியை நடப்பிக்கக்கூடும். இதை நன்றாகச் செய்யவேண்டுமென்றால் தன் பக்கத்திலிருக்கிற ஆளைத் தெரிந்துகொண்டு ஒரு சமயத்தில் ஒரு ஆளிடம் மாத்திரம் செல்வாக்குச் செலுத்தவேண்டும் என்பதே. இந்தப் பிரமாணத்தை டிரமண்ட் சாஸ்திரியார் தனக்குச் சட்டமாக வைத்து 1874 ம் வருஷம் மூடி, சாங்கி என்பவர்கள் நடப்பித்த ஆவிக்குரிய கூட்டத்திற்கு ஜனங்களை ஆயத்தப்படுத்துவதில் உபயோகப்படுத்தினர். அவர் 1882-ம் வருஷம் ஒரு சிநேகிதனுக் கெழுதிய கடிதத்தில் "நான் தனித்தனி ஆட்களோடு வேலைசெய்வதின் முக்கியத்தை அதிக மதிகமாய் உணர்ந்துவருகிறேன், அது பகிரங்க பிரசங்கத்தைப் பார்க்கிலும் அதிக வல்லமையாக இருக்கிறது" என்றெழுதினர். இன்னும் அவர் சொல்வதாவது "தனித்தாள் ஊழியம் செய்வோர் ஆட்களின் தன்மையைப் படிக்கவேண்டும். அநேகர் மனிசரின் தன்மையைப் படித்துவருகிறார்கள். நாடகக்காரன் ஜனங்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கும்படி அவர்களுடைய மனம் எதில் சார்ந்திருக்கிறதென்று கற்றுக்கொள்ளுகிறான். அற்ப ஆதாயத்தை எடுத்துக்கொள்ள மனிதனுக்கு நன்மைசெய்யும்படி அவர்களின் தன்மையை எத்தனை பேர் படிக்கிறார்கள்? ஜனங்கள் தங்களுக்கிருக்கும் ஆவிக்குரிய ஆசையை வெளியே தெரியப்படுத்தாவிட்டாலும் அவர்கள் எவ்வளவோ ஆசையுள்ளவாகளாகயிருக்கிறார்கள் என்று அவர்களுடன் பழகுவதினால் அறிந்துகொள்ளலாம்" என்கிறார்.

இவ்விதமாக டிரமண்ட் சாஸ்திரியார் தனித்தாட்களுக்குச் சாட்சி சொல்லி அவர்களை ஆதாயப்படுத்துதலின் முக்கியத்தை வற்புறுத்தியதோடு அம்முறையைக் கைக்கொண்டு வந்தவராகவுமிருந்தார்.

12. பகிரங்க சாட்சியாகிய மூடிப் பிரசங்கியார்.
Evangelist Moody.

1837-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 5-ம்வ நார்த் பீல்ட் என்றவிடத்தில் பிறந்தார். இவர் 17 வயதுமட்டும் தம்முடைய

சொந்த நிலத்தைச் சாகுபடிசெய்துகொண்டிருந்து அப்புறம் பாஸ்டன் பட்டணத்திலுள்ள ஒரு சப்பாத்துக்கடையில் குமஸ்தாவாக வேலை செய்து கொண்டிருந்தார். இப்படியிருக்குங் காலத்தில் அங்குள்ள ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்துவந்தார். அப்படியிருக்கும்போது அவருடைய உபாத்தியாராகிய கிம்பல் என்பவர் ஆவிக்குரிய விஷயங்களைக் குறித்து இவரிடம் பேச கிறிஸ்துவுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அந்த நாள்முதல் கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுப்பதில் அதிக முயற்சியாயிருந்தார். சமயம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தம்மை அறிந்தவர்களிடத்திலும், அறியாதவர்களிடத்திலும், வீட்டிலும், வெளியிலும், வீதியிலும், கடையிலும் சாட்சி பகர்ந்துவந்தார். ஒரு நாள் இவர் ரஸ்தாவில் போகையில் தனக்கு எதிராகவந்த ஒரு மனுஷனைப்பார்த்து "நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா?" என்று கேட்டார். அதற்கு அந்த மனுஷன் "உன் சோலியைப் பார்" என்றான். உடனே மூடி "இதுதான் என் சோலி" என்றார். இதைக் கேட்ட மாத்திரத்தில் அந்த மனுஷன் "நீர் மூடியா" என்று கேட்டான் இவர் "ஆம் • என்று சொல்லி அந்த ஆளிடம் கிறிஸ்துவைக் குறித்துப்பேசி ஆதாயப்படுத்தினார். இவ்விதமாகத் தனித்தாள் வேலைசெய்வது இவருக்கு மிகவும் பிரியமான காரியம்.

தனித்தாளுக்குச் சாட்சி சொல்லுவது மாத்திரமல்ல ஆவிக்குரிய பெரிய கூட்டங்கள் வைத்து அதில் பகிரங்கமாக சாட்சி கொடுத்து அநேகரை ஆதாயப்படுத்தினார். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் விசேஷித்த ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தினார். இந்தக் கூட்டங்களின் முடிவில் பாவ உணர்வடைந்தவர்களோடு தனித்துப்பேசி மனதை அறிந்து அவர்களுக்கு ஏற்ற விதமாய்ச் சாட்சி கூறி அவர்களை ஆதாயப்படுத்தினார். இவரால் குணப்பட்டவர்களின் தொகை ஏராளம்.

வேத புத்தகத்தை வியாக்யானம் பண்ணுவதில் விசேஷித்த திறமை வாய்ந்தவர். இவர் வேதபாட கல்லூரியொன்றும் ஏற்படுத்தியிருக்கிறார். அத்தோடு ஆவிக்குரிய புஸ்தகங்களும் எழுதிப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார். இந்த இருமுறையாலும் சாட்சி பகர்ந்திருக்கிறார்.

இவருடைய ஜீவியத்தையும் ஊழியத்தையும் பார்க்கையில் அவர் தம்முடைய முயற்சிகளையும் நோக்கங்களையும் ஒரே விஷயத்தில் செலவிட்டாரென்று பார்க்கலாம்.

1. அவருடைய ஒரே அபிலாஷை இயேசுகிறிஸ்துவின் பேரிலுள்ள அன்பே.

2. அவர் ஒரே நோக்கமுடையவர். அந்த நோக்கம் கடவுளைப் பிரியப்படுத்துவதே.

3. அவருடைய அருமையான புஸ்தகம் ஒன்று: அது வேதாகமமே.

4. ஒரே அலுவலுடையவர்; அந்த அலுவல் ஆத்தும ஆதாயம் செய்வதே. அவர் அநேக காரியங்களைச் செய்தாலும் இழந்துபோனவர்கள் இரட்சிப்படையும்படியே செய்தார்.

5. ஒரே எண்ணமுடைவர். கடவுள் அன்பாயிருக்கிறார் என்பதே அந்த எண்ணம்.

6. ஒரே ஊற்றிலிருந்து வல்லமையைப் பெற்றுக்கொண்டவர் அந்த ஊற்று பரிசுத்தாவியானவரே.

7. ஒரே முயற்சியுடைவர்; அது தன்னால் இயன்றதைச்செய்வதே.

இவ்விதமாக அவர் தம்முடைய ஜீவியம் முழுவதையும் ஆத்தும ஆதாயம் செய்வதில் செலவழித்துவந்தார்.

Narayan Vaman Tilak.

13. நாராயணன் வாமன் திலகர்.

இவர் மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்தவர், இவரோடு தங்கி, இவருடைய ஜீவியத்தைத் தாமே சொல்லக்கேட்கும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. இவர் பிராமண குலத்திலுதித்தவர். தேசாபிமானம் மிகுத்தவர். இவருடைய இனத்தவரான பாலகங்காதர திலகரின் தேசாபிமானத்திற்கும் இவருடைய தேசாபிமானத்திற்கும் பெரிய வித்தியாசமுண்டு. இந்தியாவிற்கேற்ற ஓர் நூதன மார்க்கத்தை ஏற்படுத்தவேண்மென்று ஆசைப்பட்டார். இதற்காக காகத் தம்மைத்தாமே ஒறுத்து தவம் புரிந்துவந்தார். ஒரு தடவை தமது மனைவியைவிட்டு ஏகாந்தமாய்ச்சென்று ஒரு மலையின்மேல் தங்கித் தியானம் பண்ணிவந்தார். ஒரு நாள் யாரோவொரு ஆள் கஷ்டப்பட்டு மலையின்மேல் ஏறிவருவதைக் கண்டு உதவிசெய்யக் கிட்டப்போனார். அப்போது அந்த ஆள் தன்னைத் தேடிவந்த தனது மனைவியென்றறிந்து இருவரும் ஓலமிட்டழுதனர். இதன்பின் இருவரும் வீட்டுக்குத் திரும்பி குடும்ப ஜீவியம் நடத்திவந்தனர்.

இப்படியிருக்கிற காலத்தில் ஒரு நாள் திலகர் ரெயில்வேப் பிரயாணம் செய்தார். அவரிருந்த வண்டியில் ஐரோப்பிய ரொருவருமிருந்தார். இருவரும் சம்பாஷணை செய்துகொண்டுபோனபோது நூதனமார்க்கமொன்றை யுண்டாக்கவேண்டுமென்கிற தமது ஆசையை அந்த ஐரோப்பியருக்குத் தெரிவித்தார். அவர் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றிக் கேள்விப்படவில்லையாவென வினவி தாம் இறங்கவேண்டிய இடம் வந்ததால் தன் கையிலுள்ள புதிய ஏற்பாட்டைக் கொடுத்து வாசிக்கச் சொன்னார். அப்படியே இவர் வாசித்து உணர்வடைந்து கிறிஸ்துவைத் தமது இரட்சகராக 'யேற்றுக்கொண்டார். இவருடைய மனைவிக்கு இது சற்றெனிலும் பிரியமில்லை. ஆயினும் படிப்படியாக இவருடைய குணசீலங்களையறிந்து அந்தம்மாளும் கிறிஸ்தவர்களானார்கள். இவர் மாராத்தி மிஷனைச் சேர்ந்த

ஆமத் நகரின் மிஷன் வேதசாஸ்திர சாலையில் ஆசிரியராயிருந்தார். இவருடைய செல்வாக்கால் கிறிஸ்துவைக் கண்டவர் அநேகர். இவருடைய மலர்ந்த முகமும், சாந்த குணமும், மெல்லிய குரலும் அநேகரை வசப்படுத்தினது. இவரால் உண்டான நன்மை ஏராளம். இவர் மராத்திப் பாஷையில் சிறந்த வித்துவான்; அநேக கவிகளை எழுதியிருக்கிறார். அவைகள் பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. அவருடைய செல்வாக்கு மகாராஷ்டிராத்திலும் மற்றவிடங்களிலும் சென்றிருக்கிறது. இந்தியாவை எவ்விதம் முன்னுக்குக்கொண்டுவரலாமென்பதே இவருடைய அபிலாஷை. இயேசுகிறிஸ்துவே இந்தியாவின் நம்பிக்கையென்றுணர்ந்து சாட்சிபகர்ந்துவந்தார்.

இவர் சம்பளமில்லாமல் கடவுள் ராஜய பிரபல்யத்திற்காக ஊழியஞ்செய்யவேண்டுமென்று 1917-ம் வருஷம் உத்தியோகத்தை விட்டு, சந்நியாசி வேஷம் பூண்டு திருப்பணிவிடை யாற்றினர். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் யாரோ அவர்களெல்லாரும் தேவ ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், கிறிஸ்துமார்க்கம் ஹிந்து மார்க்கத்திற்கு விரோதமானதல்லவென்றும், ஹிந்து மார்க்கம் தேடி வாஞ்சித்தவர் கிறிஸ்துவேயென்றும் போதித்தார். தெய்வ ராஜ்யம் என்றர்த்தங்கொள்ளும் 'தெய்வதர்பார்' என்ற சங்கத்தை ஸ்தாபித்து நடத்தினர்.

இவர் வியாதியால் கஷ்டப்பட்டு 1918-ம் வருஷம் மே மாதம் 9-ம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். தேசாபிமானமுடைய ஒவ்வொருவரும் அவரைப்போல் இயேசுவை உயர்த்திக்காட்டி சாட்சிகூறவேண்டும்.

தேசாபிமானத்தைப்பற்றி அவர் பாடிய பாட்டின் மொழி பெயர்ப்பாவது!

1

உன்றன் மீதுறும் ஆசையால் ஓடெடுத்துக் கந்தையுடுத்துவேன்,
அந்தமார்புகழ் யாவையும் அற்பக் குப்பையென்றுதான் எண்
ணுவேன்.
எந்தவேளையி லாகிலும் உயிர் உடலை நீப்பது நிச்சயம்,
அந்தவேளையி லும்உனைநினைந் தடிக்குமேயென தாருயிர்.

2

உன்னுதாத் துதிப்பதைவிட உயர்பொருளொன்று வேண்டி
லேன் ;
மன்னுயிர்கவர் மறலியும்அதைக் கவர ஆற்றலுளன் கொலோ?
உன்றன்சேவையில் உயிர் உடலெல்லாம் உவந்தளிப்பேனென்
தேசமே ;
கொன்னென்று பலர் இகழினும் அதைக் குறிக்கொளேன் ஒரு
பொருளென.

3

யசனும்நான் நினக் சற்றுமுதவி மகிழ்ந்து செய்வேனென்
தேசமே!
பகாரும் பக்த ரஞ்சனுவருள் பாலிப்பாய் இதை மேற்கொள!
எம்புகழ்பொருள் புந்தியொன்றையும் வேண்டிலே என்தன்
கண்மணி,
எம்மையே அர்ப்பணம் பண்ண முறுகிறுய் எமதம்மையே.

4

கவைக்குதவாக் கடையேனுமெனைக் கமலச்சேவடி சாத்தி
னேன்.
நவையறுமெந்தை யுந்தையாம்ஜக தந்தைஜேசுவை மானவே!
அலகிலாப்பரம் பொருளேயேசு அண்ணல்சற்குரு ஒப்பவே,
உலகுக்கும் என்தன் அன்னைக்கும்பல பணிசெயக் க்ருபை
பாலியே.

5

இன்னணம்பரன் மைந்தன்போல் நினக் கேற்றசேவைநான்
செய்திடின்,
மின்னிகர்ஜடம் துன்னரும்பல தூளி தூளியாய் மாறினும்,
என்னருத்தாயே பன்னரும்பல கோடிகோடி யுகங்களாய்,
உன்னரும்ஒரு மைந்தனாய்உனக் குற்றதொண்டு உஞற்றுவேன்.



14. பண்டித ரமாபாய்
Pandita Ramabai.

இந்தம்மாளின் சரித்திரம் பொதுவாக எல்லாருக்கும் தெரியும். இந்தம்மாளுடைய தகப்பனார் மார்க்க வைராக்கியமுடைய ஒரு பிராமணர். தன் மகளுக்கு நல்ல கல்விகற்பித்து வந்தனர். பெற்றோர் இறந்துபோக ரமாபாய் கல்கத்தாவுக்குச் சென்று உபன்யாசங்கள்

செய்து வந்தனர். அப்புறம் பி. எ. பட்டம்பெற்ற ஒருவரை மணந்துகொண்டு அவ்வூரிலேயே வசித்துவந்தார்கள். இவர்களுக்கு மனோரமாபாய் என்ற குழந்தை பிறந்தது. இதற்குச் சற்றுபின் கணவன் மரித்துப்போக ஆராத்துயருக்குள்ளானார்கள். என்றாலும் தன் மனதைத்தேற்றித் தன்னைப்போலொத்த விதவைகளுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் வண்ணம் உழைத்து வந்தார்கள். இங்கிலாந்திற்குப்போய் அங்கு பலகலை சற்றுத் திரும்பினர். இக்காலத்தில் பல சிநேகிதர்களையும் சம்பாதித்தனர். அவர்களின் பணஉதவியால் ஒரு சமஸ்கிருத கலாசாலையும் ஏற்படுத்தினர்.

இதற்குப்பின் கிறிஸ்தவர்களின் நற்சகவாசத்தினாலும் மார்க்க ஆராய்ச்சியினாலும் கிறிஸ்துவே இந்திய மாதுக்களுக்கு விடுதலையைக் கொடுக்கக்கூடியவர் என்று விசுவாசித்து அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு 1883-ம்ஸு ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்கள் சிறிது காலத்திற்குப்பின் அமெரிக்காவிற்குச்சென்று பணம் திரட்டி விதவைகளுக்காக ஒரு கலாசாலையை ஏற்படுத்தினார்கள்.

அப்புறம் பூனாவிற்குச் சமீபமான கெட்கெயான் என்ற இடத்தில் அழகான பாடசாலை அமைத்து முத்தி என்ற பேருங்கொடுத்து விசேஷமான வேலைசெய்து வந்தார்கள். இந்த இடத்திற்குப்போய் பல சிநேகிதரோடு ஒருநாள் தங்கி அவர்கள் செய்த அருமையான வேலைகளைப் பார்க்கவும் அவர்களுடன் ஒருமணி நேரம்போல் சம்பாஷிக்கவும் எனக்கு இடங்கிடைத்தது. இதை எப்போதும் நான் நினைவுகூர்வதுண்டு. இந்தம்மாளுடைய சாட்சி அந்த இடத்தில் மாத்திரமல்ல உலகமெங்கும் சென்றது.

இவர்கள் கொடுத்த சாட்சியின் தன்மையாவது.

1. குடும்பஜெபத்தின் மூலமாய் சாட்சி கூறுதல். பம்பாயிலிருந்த காலத்தில் தங்கள் அறையைத் திறந்துவைத்து தாயும் மக

ளும் இரவுதோறும் ஜெபக்கூட்டம் வைப்பார்கள். இதற்கு இந்துக்களான மாணவர் வருவதுண்டு. கிறிஸ்துவைப்பற்றி அறிந்து கிறிஸ்தவர்களுமானார்கள். இதனால் தங்கள் அறையில் ஜெபக்கூட்டம் வைக்கக்கூடாதென்று சில ஹிந்துக்கள் தடுத்தபோது அதற்கு இணங்கவில்லை.

2. புஸ்தகத்தின் மூலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்.

இவர்கள் வேதபுஸ்தகத்தின் மேல் அதிகப்பிரியமுள்ளவர்கள். இவர்கள் வேதபுஸ்தகத்தை நூதனமுறையாக தன் சொந்த பாஷையில் மொழிபெயர்த்து பிரசுரித்தனர். இதைத்தவிர அருமையான சில நூல்களை அச்சுக்கூடத்தில் அச்சடித்து எங்கும் அனுப்பினர்.

3. பரிசுத்தாவியின் கிரியையை விசேஷப்படுத்தினர்.

பிள்ளைகளுக்குள் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகி ஆவியின் வல்லமை நிறைந்தவர்களாய் ஊழியம் செய்தனர். ஆவிக்குள் ஜெபிக்கிற கூட்டத்தார் அநேகர் உண்டு. தூர இடங்களிலிருந்துங்கூட தங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டு கடிதங்களில் இவர்களுக்கு எழுதுவார்கள். ஜெபத்தின் வல்லமை எங்கும் பரவினது.

4. மறுரூபப்பட்ட ஆட்கள்.

இந்த அம்மாளின் செல்வாக்குக்குள் வந்தவர்கள் யாவரும் மறுரூபமடைந்தனர். யாராவது ஒரு மாணக்கி தப்பிதம் செய்வாளானால் அந்தப்பிள்ளைக்காகத் தாங்களே வருத்தப்பட்டு அவர்கள் சீரடையும்வரை பிரயாசைப்படுவார்கள்.

இப்படிப்பட்ட சிறந்த சாட்சிகளான மாதுக்கள் நமது சபைகளில் எழும்பக் கர்த்தர்தாமே கிருபை செய்வாராக.

(15) கிருஷ்ணபிள்ளை.

Krishna Pillai.

இவர் பாளையங்கோட்டைக்கருகில் இரட்டியாபட்டி என்ற கிராமத்தில் ஓர் வைஷ்ணவ பக்தனின் முதற்புதல்வனாக 1827-ம் ஞு எப்ரல் மாதம் 23-ம் தேதி பிறந்தார்.

பாலியத்திலேயே இவருடைய தகப்பனுர் இவருக்கும் இவருடைய இளைய சகோதரனுக்கும் தமிழ்க்கல்வியைக் கற்றுக்கொடுத்தார். கிருஷ்ண பிள்ளை ராமாயணம், மகாபாரதம் முதலிய அரிய நூல்களை படித்துத் தேர்ந்தார். இவர் மிஷனெரிமாருக்குத் தமிழ் கற்பிக்கும் உபாத்தியாயராகவும, பண்டிதராகவும் உழைத்து வந்தார். இவருடைய சகோதரரும் வேறு இரண்டு சிநேகிதரும் கிறிஸ்தவர்களானபோது இவருக்கு மனவெறுப்பாயிருந்தது. என்றாலும் காலம் செல்லச்செல்ல தம்முடைய சிநேகிதரின் தனிச்சாட்சியத்தினுலும் மற்றவர்களின் செல்வாக்கினுலும் கிறிஸ்துவை தம் இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதுமுதல் உத்தம சாட்சியாய் விளங்கினுர்.

இவர் ஊழியம் செய்த விதமாவது.

1. இவர் சிலரைப்போல் கூசிக்கொண்டிருக்காமல் பகிரங்கமாக ஞானஸ்நானத்தால் கிறிஸ்துவே இரட்சகர் என்று சாட்சி பகர்ந்தார்.

2. தனித்தனியாகத் தம்மிடம் தமிழ்க் கற்ற மாணவர்க்கும் தம்முடைய சிறந்த கிறிஸ்தவ ஜீவியத்தாலும் நல்வார்த்தைகளாலும் சாட்சிகூறி அவர்களை ஆதாயப்படுத்தினுர். இவர் காலத்தில் சில விசேஷித்த மனுஷர் பாளையங்கோட்டையில் கிறிஸ்தவர்களானுர்கள். அவருடைய மனைவியும், தாயாரையும் அரும்பிரயாசத்தினுல் ஆதாயப்படுத்தினுர்.

3. வீடுகள்தோறும் வைத்த ஜெபக்கூட்டத்தால் சாட்சிபகர்ந்தார்.

கிறிஸ்தவர்களுக்குள் யாதொரு விகற்பமின்றி வாரத்திற்கொருமுறை வீடுகள்தோறும் ஜெபக்கூட்டங்கள் வைத்து கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்தினுர்.

4. பகிரங்க சாட்சி.

கிறிஸ்தவர்களுக்குள்ளே பணம் சேகரித்து சுவிசேஷ பிரஸ்தாப மண்டபமொன்று கட்டி அதில் அவரும் அவருடைய சிநேகிதர்களும் வேலைநேரம்போக மீதி நேரத்தில் ரஸ்தாவில் போகும் ஜனங்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறி வருவதுண்டு.

5. புஸ்தகங்கள் மூலமாய்ச் சாட்சி கூறல்.

இவர் சிறந்த வித்துவானென்று பார்த்தோம். அவருடைய நூல்களில் மிகவும் சிறந்தது இரட்சண்ணிய யாத்திரீகம்; இரட்சண்ணிய மனோகரமென்ற நூல் இனிய தேவாரங்களடங்கியது.

அவர் இரட்சிப்பைக்குறித்து சாட்சிகூறும்போது அந்த ஜீவியம் மறுரூபமான ஜீவியம் என்றும், முந்தின ஜீவியத்திற்கு மாறானதென்றும் காட்டும்படி மற்றவர்களுக்குத் தீங்குசெய்யும் ஓநாய் சாந்தமுள்ள ஆடாக மாறிப்போவதற்கு ஒப்பிட்டிருக்கிறார்.

அவர் கூறுவதாவது :—

மேவிவந்து தீத்தொழில் புரிவெய்யக் கோனாய்கள்
ஜீவ கங்கையைப் பருகலுஞ்
செம்மறியாடாய் தாவில்
சாந்த நண்பாத்திய சற்குணம்தழுவிப்
போவதாகிய புதுமை கண்டதிசயம்பூத்தான்

சுவிசேஷவேலையை கிருஷித்தொழிலுக் கொப்பிட்டு அந்த வேலையைச் செய்கிறவர்களுக்கு அவசியமானகாரியம் எவையென்றும் எடுத்துக்கூறியிருக்கிறார்.

ஏர்விசுவாசமாக வெருதவா வூக்கமாகச்
சேர்நுகங் கடப்பாடகச் செறிவடஞ்சிந்தையாகக்
கூர்துதிகொழுவெம் பெம்மான்றிரு மொழிக்கூறதாகப்
பாரறவுழுது செய்கா வாக்கிமெய்ப்பணி செய்வாரும்

அவர் சிலுவையை நோக்கிப்பார்க்கும்போது அதின் வல்லமையினால் இழுக்கப்பட்டவராய் அதன் மேன்மையை எடுத்துக்கூறி சாட்சி பகர்கின்றார். பவுல் அப்போஸ்தலனைப்போல் சிலுவையைக் குறித்தேயன்றி வேறொன்றைக் குறித்தும் மேன்மைபாராட்டாதவராயிருக்கிறார்.

"கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந்தருள் பொழியும் விமலலோசன நிதியை
உள்ள முவப்புற தேனையுயிர்க் குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே

15. ஜே. பி. ஜோன்ஸ் பண்டிதர் அவர்கள்.

Dr. J. P. Jones.



அமெரிக்கன் மதுரை மிஷனைச் சேர்ந்த விசேஷித்த மிஷனெரிமார்களில் இவர் ஒருவர். 1847-ம் வருஷம் வேல்ஸ்தேசத்தில் பிறந்தார் அங்கு பதினாலு வயதுமட்டும் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்து அமெரிக்கா ஐக்கிய மாகாணத்திற்குச் சென்றார். அங்கு வேலைசெய்து கொண்டும் படித்துக்கொண்டும் இருந்தார். அப்புறம் கலாசாலையில் சேர்ந்து கற்றுத்தேர்ந்து வேதசாஸ்திரக்கல்வியும் பயின்று 1878-ம் வருஷம் மதுரைமிஷனுக்கு மிஷனெரியாக வந்தார். இவர் மானாமதுரை, மதுரை, திருமங்கலம் முதலிய இடங்களில் திவ்வியபணிவிடைசெய்து 1892-ம் வருஷம் பசுமலை வேதசாஸ்திரசாலைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதுமுதல் அந்த

வேதசாஸ்திரசாலை புரோகதியடைந்து வந்திருக்கிறது. இவர் நல்ல சுகதேகியும் பலமுமுள்ளவர். எடுத்தகாரியத்தை முடிக்கவேண்டு மென்னும் எண்ணமுடையவர். இவர் வேதசாஸ்திரத் தலைவராக இருந்து சுகவீனமானதால் அமெரிக்காவுக்குச்சென்று பெயர்பெற்ற கலாசாலையொன்றில் ஆசிரியராகயிருந்து 1916-ம்ளு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் ஒரு உத்தமசாட்சியாக விளங்கினர்.

1. இவர் ஒரு பகிரங்கசாட்சி

இவர் சிறந்த உபன்யாசகர்

ஆங்கிலபாஷையில் திறமான உபந்நியாசங்கள் செய்து படித்த வித்துக்களுக்கு ஆண்டவரைப்பற்றிச் சாட்சி பகர்ந்துவந்தார்.

இவர் சிறந்த கிராமப்பிரசங்கியாகச் சாட்சிகொடுத்துவந்தார். இவர் கூடாரப்பிரசங்கமென்ற முறையை வெகுவாய்க் கையாடிவந் தார். வேதசாஸ்திர மாணுக்கரை வருஷத்திற்கு மூன்றுதடவை கிராமங் கிராமமாய்க் கூட்டிக்கொண்டுபோய் கிறிஸ்துவுக்கென்று சாட்சி கொடுத்ததோடு அவர்களையும் சாட்சிகொடுக்க பழக்கிவைப்பார். ஒரு தடவை வேனீர்காலத்தில் உடம்பெல்லாம் கட்டிகள்வந்தபோதிலும் அதையும் கவனிக்காமல் கிராமங்களைச் சந்தித்து சாட்சிபகர்ந்துவந் தார்.

புதன்கிழமைதோறும் பசுமலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் வேதசாஸ்திர மாணுக்கரை பிரசங்கம்பண்ண அனுப்பித் தானும்போ வார். இப்படிப்போன ஒரு சமயம் குதிரையிலிருந்து விழுந்து கஷ் டப்பட்டார்.

2. தனித்தாட்களுக்கு சாட்சி பகர்ந்துவந்தார்.

இவரைப் பார்க்கும்போது அவர் அருகில்அண்ட பயப்படுவார் கள். என்றாலும் அவர் தகப்பனடைவான அன்புடையவர். அவரி

டத்தில் ஹிந்துக்கள் தாராளமாய் வருவார்கள். அவர்களுடன் மார்க்க சம்பாஷணைசெய்து கிறிஸ்துவைப்பற்றி சாட்சிகூறுவார். கிறிஸ்தவர்களுக்குள்ளும் தனித்தாள் ஊழியம் செய்தார். யாராவது பிசகிப்போனால் பயப்படாமல் அவரிடத்தில் தங்கள் குற்றங்களை அறிக்கையிடலாம். அவர் பாவத்தைக் கண்டித்தாலும் அவன் மனந்திரும்பத்தக்கதாக வழிநடத்தி கிறிஸ்தவ ஜீவியத்தில் உதவிசெய்வார். பிரசங்கங்களுக்குப்போகும் சமயத்தில் மாணுக்கரைத் தனித்தனியாகத் தன்னேடு நடக்கும்படிசெய்து அந்தந்த மாணுக்கனின் சரித்திரத்தையும் நிலைமையையுமறிந்து அவனவன் உத்திரவாதமுள்ள ஊழியனுய் வளரும்படி உதவிசெய்வார். அவருடைய ஜீவியம் மாணுக்கரைத் தொட்டது.

3. திட்டவட்டமான ஜீவியத்தின் சாட்சி.

அவர் ஒவ்வொருகாரியத்தையும் திட்டவட்டமாய்ச் செய்து முடிப்பார். அந்தந்தநேரத்தில் அ ந் த ந் த வேலையைச்செய்வார். குறித்தகாலத்திற்கு முன்னதாகவே சகலத்தையும் செய்துமுடிப்பார். தான் இப்படிச் செய்வதுமாத்திரமல்ல தனது மாணுக்கரும் அப்படியே செய்யவேண்டுமென்று எதிர்பார்ப்பார்.

4. புஸ்தகங்களின் மூலமாய் சாட்சிசொல்லுதல்.

இவர் ஒரு சிறந்த நூலாசிரியன். புறதேசத்தார் இந்தியமக்களின் தன்மையையும் தேவையையும் அறிந்துகொள்ளும்படியாகவும் அநேகர் இந்தியாவுக்கு கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சிசொல்ல மிஷனெரிமாராக வர ஏவும்படியாகவும் இவர் சில நூல்களை எழுதியிருக்கிருர். இதைத்தவிர கிறிஸ்தவர்களின் உபயோகத்திற்காக "கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம்," "கிறிஸ்துவின் போதனுமுறை," "கிறிஸ்தவ ஜீவியம்" என்ற அருமையான புஸ்தகங்களை எழுதி பிரசுரித்திருக்கிருர்கள். இதைத்தவிர சில விசேஷித்த பக்திமான்கள் ஆங்கிலத்

திலெழுதிய அரிய நூல்களைத் தமிழ்ச் சபையின் பிரயோஜனத்திற்காகத் தமிழில் திருப்பி அச்சிட்டு சொற்பக் கிரயத்திற்கு கொடுத்து வந்தார்.

5. பத்திரிகாசிரியராகவும் சாட்சி பகர்ந்துவந்தார்

"சத்தியவர்த்தமானி," "சத்தியதூதன்," "ஐக்கிய சபைத் தூதிகை" என்ற பத்திரிகைகளின் ஆசிரியராக கிறிஸ்துவுக்காக பலத்த சாட்சிகொடுத்தார். அவருடைய பத்திராதிபர் குறிப்புகள் சத்தியத்திற்கென்றும், கிறிஸ்துவுக்காகவும் பலத்த சாட்சிகளாயிருந்தன. இவ்விதமாய் அவர் எரிந்து பிரகாசித்த சாட்சியாயிருந்தார். அவரிடத்தில் கற்றவர்களும் அவருடன் ஊழியம் செய்தவர்களும் அவரிடமிருந்து தாங்கள் கற்றுக்கொண்ட நற்காரியங்களைக் குறித்து சாட்சிகொடுக்கக்கூடும்.

நான் அவருடைய மாணாக்கனாக இரண்டு வருஷமும் உடன் உபாத்தியாராக நான்கு வருஷம் அவருடன் சம்மந்தப்படத்தக்கதான சிலாக்கியம் கிடைத்ததற்காகக் கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

அவர் என்னோடு முதற்தடவையாகப் பேசியவார்த்தைகள் என்னைக் கவர்ந்துகொண்டன. என்னை நடத்தின விதமும், என்னை உபயோகித்த விதமும் நான் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய என்னைப் பக்குவப்படுத்திவந்தன. இவருடைய ஜீவிய சாட்சி மிககவும் அருமையானது. இவரைப்போல் அநேகர் இந்திய மக்களுக்குள் எழும்பித் தங்களைக் கிறிஸ்துவின் ஊழியத்திற்கென்று அர்ப்பணம்பண்ணி அவருக்காகச் சாட்சி கொடுக்கும்போது இந்திய சபை இலங்கும், கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும், இந்தியாவில் கிறிஸ்துவின் ராஜ்யம் பரம்பும். அப்படிப்பட்ட அநேக சாட்சிகளைக் கர்த்தர் தாமே எழுப்புவாராக. ஆமென்.

முற்றிற்று.

For Copies apply to the author

Rev. M. S. Taylor, B.D.,

Chairman, West Local Council,

Batlagundu, S. India.